
609
உமா
ஆசிரியர் : ஜி. உமாபதி
ரமணி

30 MAY 1953
609
2-53




When ASTHMA
attack is imminent
use
MULTIMIX
Indo-French Pharmaceutical Co.,
P. B. No. 1542.
MADRAS-1.
MULTIMIX
ELIXIR
EUPNEIC
AND
CARDIO TONIC
INDICATIONS

★ HINDUSTHAN'S
High grade
AERATED WATER BOTTLES
Available in 8, 10 & 12 oz. capacity
● Exceptionally strong
● Tested to stand 250 lbs. pressure
● Manufactured in completely automatic plant under the supervision of foreign experts.
HINDUSTHAN NATIONAL
GLASS MFG. CO., LTD.
2, Wellesley Place, Dalhousie Sq., Calcutta
Sole Agents for
South India:
The Hindusthan
Commercial Corporation
145, Mint St., Madras-1.

உமா

ஆசிரியர்: ஜீ. உமாபதி

நிர்வாக ஆசிரியர்: ர. சண்முகம்

செடி 1 மலர் 2	ஜூன் 1, 1953	விஜய ஞூ வைகாசி மீ

பொருளடக்கம்

'உமா' வாழ்க (கவிதை)	நாமக்கல் கவிஞர்	... 4
வடக்கெல்லைப் போராட்டம்	தலையங்கம்	... 5
நாமும் நீங்களும்	...	... 7
எதிரொலி	...	... 9
சோர்வு மனப்பான்மை	'பதி'	... 13
விளையாட்டும் வினையும்!	மேலட்டைச் சித்திரம்	... 15
மேன் மக்கள்	"சுகி"	... 17
என் மைதிலி	சம்பந்தம்	... 26
விமர்சகன் யார்?	டி. கே. ஷண்முகம்	... 35
சோம பானம்	பி. கோதண்டராமன்	... 36
தேசீய வைரம் திரும்பி வருமா?	இராசு	... 46
படம் வந்தது	மகரம்	... 49
கோமதியின் கனவு	சண்முகம்	... 56
காதலின் குரல்	பூவை எஸ். ஆறுமுகம்	... 67
மறவாதே (கவிதை)	பாரதி மோஹன்	... 74
ஆண்டிப் பண்டாரம்	மாயாவி	... 75
பெற்ற தாய்	சினிமா விமர்சனம்	... 90
அமெரிக்க வாழ்க்கை	"உமா"	... 92

'உமா'வில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

'உமா' வாழ்க

(நாமக்கல் கவிஞர்)

அமிழ்தமெனத் தமிழ்மொழியை ஆன்ருேர் கண்டார்;
அழகழியாக் கன்னியென்றும் ஆராதித்தார்;
இமிழ்திரையின் கடல்சூழ்ந்த உலகம்தன்னில்
'என்றுமுளத் தென்றமிழென்' றிசைத்தான் கம்பன்;
நமதருமைத் தாய்மொழியின் பெருமைதன்னை
நாமுணர்ந்து போற்ருமல் நலிந்து போனேம்;
இமையளவும் தாழ்த்தாமல் இனிமேலேனும்
இனம்சிறந்தத் தமிழ்மரபின் இயல்பைக்காப்போம்.

நித்தியமாம் அறங்களேயே நிறுத்துக் கூறி
நீதிநெறி தவருத நிலைமை காத்து
பத்தியமாய்த் தினந்தினமும் பரிந்து போற்றி
பரம்பொருளேப் பணிவதை ஓர் பழக்கமாக்கி
சத்தியத்தைக் கடைப்பிடிக்கும் சாந்தம் ஒன்றே
சன்மார்க்கம் என்பதற்குச் சாட்சியாகும்
உத்தமனும் காந்திஎம்மான் வாழ்ந்தவாழ்வே
ஒப்பரிய தமிழ்த்தாயார் உணர்த்தும்போதம்.

புதுமையென்றும் புரட்சியென்றும் புனைந்து சொல்லிப்
பொய்யுணர்வை மெய்யறிவாய்ப் புரட்டிக்காட்டி
முதுமைமிகும் தமிழறிவை இகழ்ந்து தூற்றி
மூடபக்தி என்றுவசை மொழிகள் பேசி
பொதுநலத்தின் நல்லுறவில் புண்ணுண்டாக்கும்
புல்லுருவிச் சிறுமைகளைப் போக்கவேண்டும்;
மதிநலத்தில் மிகச்சிறந்த தமிழின் மாண்பு
மறுபடியும் அரசாளச் செய்வோம் வாரீர்.

அரியணையில் தமிழ்த்தாயை அமர்த்த வேண்டும்;
அவள்மொழியே அவள்நாட்டை ஆளவேண்டும்;
தெரிவரிய நுண்ணறிவைத் திரட்டித்தந்தத்
திருக்குறளே சட்டம்போல் திகழவேண்டும்;
உரிமைபெறக் கடமைகளை உணர்ந்துமக்கள்
உழைப்பினையே செல்வமென உவக்கவேண்டும்;
விரிவாகத் தமிழ்க்குலத்தின் வினைத்திட்பத்தை
விளக்கி 'உமா' வெகுகாலம் வாழவேண்டும்.

வடக்கெல்லேப் போராட்டம்

வடக்கெல்லேப் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. இத்தனே நாளும் திருத்தணியில் மட்டுமே நடத்தப்பட்டு வந்த மறியல் சித்தூர், புத்தூர் ஆகிய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சித்தூர் கிளர்ச்சிக்கு தமிழகம் முழுவதும் ஆதரவு அதிகரித்து வருகிறது. தி. க., தி. மு. க., சோஷலிஸ்ட் ஆகிய ஸ்தாபனங்களெல்லாம் சித்தூர் கிளர்ச்சியை ஆதரித்து தத்தம் மாநாடுகளிலும் கமிட்டிகளிலும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. தமிழரசுக் கழகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட சித்தூர் தினம் மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டிருக்கிறது. சித்தூர் கிளர்ச்சிக்கு பொறுப்பேற்று நடத்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தயங்கினுலும் பெரும்பாலான காங்கிரஸ் ஊழியர்களும் பிரமுகர்களும், கிளர்ச்சிக்கு வெளிப்படையாக ஆதரவு அளித்திருக்கின்றனர். திரு. அண்ணுமலேப் பிள்ளே எம். எல். சி., கும்பகோணம் சாமிநாத செட்டியார், திருவள்ளூர் முனிஸிபல் சேர்மன் திரு. ரகுநாதன் போன்ற முக்கியஸ்தர்கள் சித்தூர் தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றியிருக்கின்றனர். சென்னே கார்பரேஷன் துணே மேயர் திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் திருத்தணி, புத்தூர், ஆகிய பிரதேசங்களுக்கே சென்று மறியலே மேற் பார்வையிட்டு தொண்டர்களே உற்சாகப் படுத்தியிருக்கிருர்.

இந்த சமயத்தில் திருத்தணி போலீஸார் சாத்வீகமாக மறியல் செய்து வந்த தொண்டர்களேத் தடி கொண்டு தாக்கியிருக்கின்றனர். இதற்கு ஒரு ஆந்திர சப் இன்ஸ்பெக்டர் தான் காரணம் என்று அறிகிரும். தமிழர் கட்சியின் வெற்றிச் சின்னத்தைக் கண்டு ஆந்திர சப் இன்ஸ்பெக்டருக்கு வெறி பிடித்துவிட்டது போலும்.

சித்தூர் போராட்டத்தை நடத்திவரும் திருவாளர்கள் விஞயகம், ம. பொ. சி. போன்றவர்கள் தேசீய விரோதிகளல்லர். அரசாங்கத்தின் எதிரிகளுமல்லர். ஆகவே அமைதியை நிலே நாட்டுவதில் அவர்களுக்கும் பொறுப்புண்டு. கடந்த ஒரு மாத காலமாக மறியல் நடைபெற்று வந்தும் திருத்தணியில் அமைதிக்குப் பங்கம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லே. போலீஸ் தடியடிக்குப் பிறகு

தான் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சூழ்நிலை உருவாயிற்று. ஆயினும் தலைவர்கள் மக்களிடம் தங்களுக்குள்ள செல்வாக்கை உபயோகித்து இதுவரை அமைதியைக் காப்பாற்றி வந்திருக்கின்றனர்.

மேலும் சென்ற மாதம் 18ந் தேதியன்று திருத்தணியில் கம்யூனிஸ்டுகள் என்று கூறிக்கொண்ட சில ஆந்திர வெறியர்கள் கையில் ஆயுதமேந்தி அமைதியாக நடந்துக் கொண்டிருந்த தமிழர்களின் பொதுக் கூட்டமொன்றில் படையெடுத்தனராம். பொதுக்கூட்டத்தில் அப்போது திரு. ம. பொ. சிவஞானம் பேசிக் கொண்டிருந்தாராம். திரு. விநயகமும் இருந்தாராம். வெறியர்கள் தடிகொண்டு தாக்கியபோது, தமிழர்களின் மண்டை உடைந்து உதிரம் கொட்டிக்கொண்டிருந்த போது பக்கத்தில் போலீஸ் படை பேசாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததாம். தமிழர்கள் ஆத்திரமும் வேகமும் அடைந்தாலும் தமிழ்த் தலைவர்களின் ஆணைக்கு உட்பட்டு மௌனமாக இந்த வேதனைகளை சகித்துக்கொண்டனராம்.

சித்தூர் தமிழர் கிளர்ச்சி தேவையற்றது என்று ராஜாஜி விட்டிருக்கும் அறிக்கை நமக்கு வியப்பையே அளிக்கிறது. சித்தூர், தகராறுக்கு இடமில்லாத பிரதேசம் என்று நேருவின் அறிக்கை தீர்மானித்து விட்ட பிறகு, இதில் சித்தூர் தமிழர் பற்றிய அனுதாபம் கலந்திருப்பதாக எப்படி கருத முடியும்?

கிளர்ச்சியை நடத்திவரும் தலைவர்கள் ஆந்திரம் பிரிவதற்கு முன்னதாகவே சித்தூர் தமிழ்ப் பகுதிகளை தமிழகத்தோடு சேர்க்க வேண்டுமென்று கேட்கவில்லை. அப்படிக் கேட்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு. அது குற்றமுமல்ல. பெல்லாரியில் அப்படித்தான் செய்யப்பட்டது. ஆயினும் சூழ்நிலையை உத்தேசித்து சித்தூர் தமிழ்த் தலைவர்கள் தங்கள் கோரிக்கையைத் குறைந்த அளவிலேயே வற்புறுத்தியிருக்கின்றனர். அதாவது பிரிவினைக்குப்பின் வரும் எல்லைக் கமிஷன் சித்தூர் தமிழ் பகுதிகளைப் பற்றி விசாரணை நடத்தும், சித்தூர் மக்களிடையே வாக்கெடுத்து நீதி வழங்கும் என்ற உத்தரவாதத்தையே அவர்கள் கோருகின்றனர். சித்தூர் ஜில்லாவை தகராறுக்கு இடமில்லாத தெலுங்கு ஜில்லாக்களின் பட்டியலில் மத்திய அரசாங்கம் சேர்த்துவிட்டதால் இத்தகைய உத்தரவாதம் அவசியமாகிறது.

மத்திய அரசினர் சித்தூர் தமிழர்கள் கோரும் உத்தரவாதத்தை சீக்கிரமே கவனித்து தமிழ் மக்களை திருப்தி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

ஆந்திரப் பிரிவினை மசோதா அடுத்த ஜூன் மாதம் அசெம்பிளியில் விவாதிக்கப்பட இருக்கிறது. அதற்குள் உத்தரவாதமளித்தால் தான் சித்தூர் கிளர்ச்சி நிறுத்தப்பட ஏதுவாக இருக்கும். இல்லாவிடில் சித்தூர் கிளர்ச்சி சென்னை நகரம் வரை விஸ்தரிப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்.

நாமும் நீங்களும்

'உமா'வுக்கு வாழ்த்தும், வரவேற்பும் அளித்த தமிழ் மக்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றி நிறைந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புதுப் பத்திரிகை வெளியான உடன் சாதாரணமாக வாழ்த்தும் வரவேற்பும் இருப்பது இயல்பு, ஆகவே "உமா"வின் முதல் இதழ் விற்பனையைப் பற்றி நாம் அதிகமாகப் பெருமையடித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் "உமா" வின் தகுதியைப் பற்றி, தனிச் சிறப்பைப் பற்றிப் பாராட்டி வந்துள்ள கடிதங்களை மட்டும் நாம் மறக்க முடியாது.

"கொள்ளை கொள்ளையான உயர்தர அம்சங்களை, கொள்ளை கொள்ளையான பக்கங்களில் நிரப்பி, இவ்வளவு குறைந்த விலையில் கொடுக்க முன்வந்தது ஒரு துணிகர முயற்சியே. ஆனால் இந்த துணிகரம் கொள்ளை கொள்ளையாக என்னைப் போன்ற வாசகர்களின் ஆதரவை விடாது பற்றி "உமா" என்றைக்கும் நிலைத்து நிற்கும் என்பது உறுதி" என்று திருச்சியிலிருந்து உணர்ச்சி வேகத்தோடு ஒரு அன்பர் எழுதியிருக்கிறார். அவருக்கும், அவரைப் போன்று நூற்றுக் கணக்கில் கடிதம் எழுதிய "உமா" அன்பர்களுக்கும் **கொள்ளை கொள்ளையாக** எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம்.

"இவ்வளவு அதிக பக்கங்கள் போட்டு இப்படி குறைந்த விலையில் தருகிறீர்களே. உங்களுக்குக் கட்டுமா?" என்று மூக்கின் மேல் விரலை வைக்கிறார் ஒரு மதுரை அன்பர். நமக்கு வந்துள்ள பாராட்டுக் கடிதங்களில் 95 சதவிகிதம் இந்த வியப்பில் ஆழ்ந்தவையாகவே உள்ளன.

அவர்கள் சந்தேகம் நியாயமானதே. நிச்சயம் கட்டாது தான். ஆனால் வாசகர்களின் ஆதரவு, கேவலம் ஆயிரக்கணக்கில் என்றிராமல், லட்சக் கணக்கில் பெருகினால் "உமா" இதைவிட இன்னும் சிறப்பாக, நிரந்தரமாக தமிழகத்தில் உலாவுவாள். அப்போது அவள் நஷ்டத்தில் எதற்காக காலடி வைக்கப் போகிறாள்?

இந்த நிலையிலேயே "உமா" நீடித்து நடனம் புரிவாளா? கட்டுமா? நஷ்டம் வராதா? ஆகிய இந்தக் கவலைகளையெல்லாம் வாசகர்கள் எங்கள் தலைமேல் போட்டுவிட்டு, "உமா இதைவிடச் சிறப்பாக, இன்னும் புதிய அம்சங்களுடன், நூற்றுக் கணக்கான பக்கங்களில், இதே நாலணா விலையிலேயே வெளியாக வேண்டும். அதற்காக லட்சக் கணக்கில் நாங்கள் "உமா"வின் உபாசகர்களாக மாறுவோம்" என்று உறுதி செய்துக் கொள்ளுங்கள். அதைச் செயலில் காட்டுங்கள். அப்படிச் செய்தால் உங்கள் சந்தேகங்களுக்கு இடமே ஏற்படாது.

ஆகஸ்ட் இதழில் புது அம்சம் ஒன்று ஆரம்பமாகிறது. "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்" என்று பாரதியார் நம்மைப் பார்த்துக் கூறினாரல்லவா! இதை மனதில் வைத்

துக் கொள்ளுங்கள். தமிழகம் சுயாட்சி பெறும் நிலையிலுள்ள இந்தச் சமயத்தில் உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை ஒப் படைக்கிறோம். **"எனக்கு அதி காரம் கிடைத்தால்?"** என்ற தலைப்பின் கீழ் "உமா" வாசகர்கள் ஒவ்வொருவரும், சுதந் திரத் தமிழகத்தின் ஆட்சி தங்கள் கையில் கிடைத்து விட்ட தாகக் கருதிக் கொண்டு, தமிழகத்தில் எப்படி யெப்படி சீர் திருத்தங்கள் செய்யலாம், என்னென்ன முறையில் மக்களுக்கு நன்மை செய்யலாம், எப்படி அரசாட்சி நடத்தினால் தமிழர் களின் வாழ்வில் இன்பம் பொங்கும்? என்பன போன்ற வற்றிற்கு உங்கள் ஆலோசனை களைக் கூறுங்கள். சிறந்த இரண்டு ஆலோசனைகளுக்கு முறையே ரூ. 10, 5, வீதம் அன்பளிப்பு தரப்படும். உங்கள் ஆலோசனைகள் ஜூன் 30-ம் தேதிக்குள் எங்களுக்குக் கிடைக்க வேண்டும்.

"உலக இலக்கியம்" என்ற தொடரில் இம்மாதம் ஒரு பிரெஞ்சுக் கதை வெளியாகி யிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் உலக நாடுகள் ஒவ்வொன்றின் இலக்கியங்களைத் தொடர்ந்து தர ஏற்பாடு செய்ய எண்ணியிருக்கிறோம்.

மற்றபடி எங்களுடைய கனவுகள், ஆசைகளை அதிகம் விவரிக்காமல் மௌனமாக இத்துடன் நிறுத்திக் கொள் கிறோம். இரண்டாவது இதழ் உங்கள் கையில் இருக்கிறது. 'உமா'வின் புயல் வேக வளர்ச்சி உங்கள் கையில் பிரத்தியட்சமாக இருக்கும் போது எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் வாய் திறந்து எதற் காக சொல்ல வேண்டும். வணக்கம்.

—ஆசிரியர்.

எனக்கு அதிகாரம் கிடைத்தால்?

இப்படி ஒரு புதுப் பகுதி ஜூலை இதழில் இடம் பெறுகிறது. சுயாட்சித் தமிழகத்தின் அரசு உங்கள் கைக்கு வந்து விட்டதாகக் கருதிக்கொண்டு கீழ்க்கண்ட ஆலோசனைகளுக்கு ருசிகர மாக, ஆனால் பொருட்செறி வுடன் பதிலளியுங்கள்.

❀ **சுயாட்சித் தமிழகத்தின் அரசு முறை எப்படி அமைய வேண்டும்.**

❀ **சமூக அமைப்பில் என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய லாம்.**

❀ **பொருளாதாரத் துறை யில ஏற்றத் தாழ்வற்ற நிலையை எந்த முறையைப் பின்பற்றி அமைக்கலாம்.**

இன்னும் இது சம்பந்த மாக மனதில் படும் எந்தப் பிரச்னைக்கும் ஆலோசனை கூறலாம். பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண்கள் எல்லோருடைய ஆலோசனைகளும் வரவேற் கப்படும். சிறந்த இரண்டு ஆலோசனைகளுக்கு முறையே ரூ. 10, 5. வீதம் பரிசளிக்கப்படும். மற்றும் பிரசுரத்துக்குத் தகுதியான ஆலோசனைகளும் பிரசுரிக் கப்படும்.

ஆலோசனைகள் ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

ஆசிரியர்.

எதிரொலி

பொறுப்பற்ற வதந்தி

ஆந்திரம் பிரிந்தபின் நமக்கு "ராஜாஜி சர்க்கார் வேண்டுமா, வேண்டாமா?" என்ற சர்ச்சை இப்பொழுது காற்றுவாக்கில் தமிழகத்தில் உலாவத் தொடங்கியிருக்கிறது. ராஜாஜி, தானே தன் வயோதிகத்தின் காரணமாக பதவியிலிருந்து விலகுகிறூர் என்றுல்—அவருக்குப் பின் நாடாள ஒரு வார்சு தேவைப்படுகிறது என்றுல் அதன் விஷயம் வேறு. அப்படியொன்றும் நிச்சயம் ஏற்படாதிருக்கும் போது இப்படி ஒரு வதந்தி பரவி நிற்பது தமிகழத்தின் தன்மான உணர்ச்சியையே பாதிக்கக் கூடியதாகும்.

ராஜாஜி மந்திரி பதவி வகித்து வந்த காலம் இருக்கட்டும். அவர் பதவி ஏற்ற காலத்தை யாரும் மறந்திருக்க முடியாது. அரசியல் 'வாழ்விலிருந்து ஒதுங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டிருந்த ராஜாஜியை நாம் வலிய சென்று சரணடைந்தோம். தமிழகத்தில் சூழ்ந்திருந்த பயங்கர நிலைமையைப் போக்கி அபயமளிக்கும்படி வேண்டினேம். "தள்ளாத வயதிலும் எனக்குப் பதவியா? யாராவது பொறுப் பேற்றுக் கொள்ளுங்கள். நான் பக்கபலமாக நின்று ஆலோசனை கூறுகிறேன்" என்று ராஜாஜி மறுத்தார். நாம்தான் விடவில்லை. நமது அன்பழைப்பு அவரது மனதை இளக்கியதன் காரணமாக அவர் நமக்குத் தலைமை தாங்க முன் வந்தார். அன்றிருந்து இன்றுவரை நாட்டிலே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நாம் விவரிக்க வேண்டுமா? இவற்றை குருடன் கூட உணர்வான்.

அப்படியிருக்க இப்படிப்பட்ட ஒரு மட்டரகமான வதந்தி எதற்காகப் பரவ வேண்டும்? இம்மாதிரி பொறுப்பற்ற வதந்திகளை யார் கிளப்பிவிட்டாலும் சரி, அது தமிழர்கள் தங்கள் முகத்தில் தாங்களே கரி பூசிக் கொள்வதற்கு ஒப்பாகும். தமிழர்களின் நன்றியுணர்வை, பண்பாட்டை பிறர் சந்தேகிப்பதற்கு இதைவிட வேறு எதுவுமே தேவையில்லை.

ராஜாஜி தனக்கென வாழாத பெருந்தகை என்பதற்கு இனித்தானு நாம் ஆதாரம் காண வேண்டும்? அவர் சொல்லும் செயலும் நமக்கு சில சமயங்களில் பிடிக்காமல், பிடிபடாமல் இருக்கலாம். ஆனல் அச்சொல்லும் செயலும், நாட்டின் நன்மைக்காகத் தான் அவரிடமிருந்து பிறக்கும் என்பதில் யாருக்காவது அபிப்பிராய பேதமிருக்க முடியுமா?

தியாகிகள் நிலமான்யம் சம்பந்தமாக ராஜாஜி சில முடிவுகள் செய்தார். அந்த முடிவின் விளைவுகள் ஒரு பக்கமிருக்கட்டும்; அவரது தீர்மானம், தியாகிகளுக்கு நாட்டில் மங்கி வரும் மதிப்புணர்ச்சியை

பெருக்க வேண்டும்; "தியாகி" என்ருல் கேவலம் உழைப்புக்கு ஊதியம் பெறும் கூலிக்காரன் அல்ல என்பதை நிதர்சனப் படுத்த வேண்டும் என்ற பெரு நோக்கத்தின் அடிப்படையே யாகும். அவரது முடிவின் பெரும் பாகத்தை நாம் மனப் பூர்வமாக ஏற்றுக் கொண்டாலும் இதுவரை நில மான்யம் பெற்றுவிட்ட தியாகிகள் விஷயத்தில் அவர் காட்டும் பிடிவாதம் நமக்குச் சற்று வேதனையைத்தான் தருகிறது. ஆனல் இந்தச் சிறு விஷயத்துக்காக ராஜாஜியின் அந்தரங்க சுத்தியையே சந்தேகிப்பதா? தமிழர்கள் ஒற்றுமையுடன் நின்று ஒருமித்து நிலமான்யம் விஷயத்தில் அவர் கையாளும் கொள்கைகளில் உள்ள சில கஷ்டங்களைத் தெளிவுபடுத்திஞல் அவர் தமது முடிவை மாற்றிவிட்டுப் போகிருர். இதைவிடுத்து அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு வீண் விஷமப் பிரச்சாரங்களில் சிலர் ஈடுபடுவதை விடவேண்டும். அல்லது பொதுமக்கள் அவர்களை விட வைக்க வேண்டும்.

தனக்கும் திரு. காமராஜருக்கும் இடையே மனப்பேதம் கிடையாது என்று ராஜாஜி அறிவிக்கிருர். மகிழ்ச்சியுடன் வரவேற்கிரேம். அது உண்மை என்பதும் நமக்குப் புரியும். ஆனல் திரு. காமராஜர் பெயரையும் இணைத்து இம்மாதிரி பொறுப்பற்ற வதந்திகளை நாட்டிலே பரப்பி இழுக்கைத் தேடி வைக்கும் சுயநல விஷமிகள் யார் என்பதைக் கண்டுபிடிக்க திரு. காமராஜர் உடனடியாக முயற்சிக்க வேண்டும்.

அதிர்ச்சி தந்த செய்தி

தமிழகம் தனி அரசாக விளங்க வேண்டிய அரிய வாய்ப்பு நெருங்கிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் ஒரு அதிர்ச்சி தரும் செய்தி நம்மைக் கலக்கிவிட்டது. டாக்டர் சண்முகம் செட்டியார் மறைந்து விட்டார்.

எதிர்கால சுயாட்சித் தமிழகத்தை நினைக்கும்போது நமக்கு அடிக்கடி சண்முகம் செட்டியாரின் அரிய மேதைத் தன்மை மனக்கண்களின் முன் தோன்றும். நிதி, பொருளாதாரத் துறையில் அவருக்கிருக்கும் ஆழ்ந்த அனுபவத்தை நினைத்தோம், தமிழ் இலக்கியத் துறையில் அவருக்கிருக்கும் அரிய திறனை எண்ணினேம். தமிழக அரசாங்கம் தமிழிலேயே நடக்கும்போது, தமிழ் அறிஞரும், ஆங்கில மொழி விற்பன்னருமான சண்முகம் செட்டியாரின் ஆதரவு தமிழகத்துக்கு எவ்வளவு பெரிய உதவியாக இருக்கும் என எண்ணி நாம் பெருமிதமடைந்து நின்றேம். இந்த சமயத்தில் கிடைத்த அவலச் செய்தி நம்மை அலைக்கழித்து விட்டது. இந்த நஷ்டத்தை நாம் எப்படி ஈடு கட்டுவது என்றே புரியவில்லை. இந்த துக்ககரமான நேரத்தில் தமிழறிவும் ஆங்கில மொழிப் பழக்கமும் உள்ள அறிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிரேம். "நீங்கள் சண்முகம் செட்டியாரைப் பின்பற்றுங்கள். உலக அனுபவத்திற்காக மட்டும் ஆங்கில அறிவை ஒதுக்கி விட்டு, உங்கள் செயலிலும், சிந்

தையிலும் தமிழைத்தவழ விடுங்கள். 'தமிழ் அறிஞன்' என்ற பெரும் புகழைப்பெற்று சுயாட்சித் தமிழகத்தை நிர்வகிக்கும் தகுதியை யடையப் பாடுபடுங்கள். அப்பொழுதுதான் சண்முகம் செட்டியாரின் மறைவால் ஏற்பட்ட நஷ்டத்தை ஓரளவாவது நம்மால் சரி செய்ய முடியும்".

சண்முகம் செட்டியாரை இழந்து தவிக்கும் உற்றார் உறவினர் — நண்பர்களின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்ளுகிறோம்.

மனோபாவம் மாறவேண்டும்

இந்திய வர்த்தக மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி தமிழகத்துக்கு ஓடோடியும் வந்தார். மிகவும் அநுதாபத்துடன் தமிழகப் பஞ்சப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்தார். மக்களுக்கு ஆறுதல் சொன்னார். தன்னால் முடிந்தவரை உதவிக்கு மத்திய அரசாங்கத்திடம் போராடுவதாக வாக்களித்தார். சென்றுவிட்டார்.

திரு. டி. டி. கே. தமிழர். என்னதான் தூரத்தில் பதவி வகித்தாலும் தாயக நினைவு அவரை சும்மா உட்கார வைக்கவில்லை. தாயகம் பஞ்சத்தால் வாடும்போது பார்த்துக்கொண்டிருக்கும் கடின சித்தம் வேறு எந்த நாட்டவருக்கு இருந்தாலும் தமிழர்களிடம் இருக்கவே முடியாது. ஆகவே டி. டி. கே. யின் நன்முயற்சியை நிறைந்த மனதுடன் பாராட்டுகின்றோம்.

திரு. டி. டி, கே. டில்லி சென்று அடைவதற்கு முன்பே அங்கே நிதிமந்திரி தேஷ்முக் முணுமுணுக்கத் தொடங்கி விட்டார். சம்பந்தா சம்பந்தமின்றி எதை எதையோ சொல்லுகிறார். தமிழகத்துக்கு உதவியளிப்பதைத் தட்டிக் கழிக்கும் மனோபாவம் அவர் பேச்சில் தொனிக்கிறது. டி.டி.கே. தமிழகம் வந்தது சொந்தப் பொறுப்பில்தான், அரசாங்க ஆலோசனை பெற்றல்ல என்றும் கூறுகிறார்.

அரசாங்க ஆலோசனையைப் பற்றிக் கூட கவலைப்படாமல் தன் சொந்தப் பொறுப்பில் தமிழகத்தைப் பற்றிய கவலை ஒன்றையே முதன்மையாகக் கொண்டு டி. டி. கே. இங்கே வந்தார் என்பதைக் கேட்கும் போது அவர்மீது நமக்குள்ள மதிப்பு இரட்டிப்பாக உயருகிறது. ஆனால் நியாயமான டி. டி. கே.யின் அறிக்கையை அலட்சியக் கண்ணோடு நோக்குவதற்கென்றே முணுமுணுக்கத் தொடங்கியிருக்கும் தேஷ்முக்கின் மனோபாவம் எதிர்கால இந்திய ஐக்கியத்துக்கே உலை வைப்பதாகும்.

ஒரு ராஜ்ய மக்கள் பஞ்சத்தால் வாடுகின்றனர் என்பதை நிதர்சனமாக உணர்ந்த பிறகும் அந்த ராஜ்யத்துக்கு உதவி செய்ய மீன, மேஷம் பார்ப்பதும், புள்ளி விபரம் காட்டி பேசுவதும் நல்லதல்ல. இம்மாதிரி மனோபாவம் மத்திய அரசாங்க வட்டாரத்தில் வளர்வது "**ஸ்தான்**" வாதிகளின் கூக்குரலுக்கு வலுவூட்டுவதாகும் என்று எச்சரிக்கிறோம்.

தமிழர்களா? திராவிடர்களா?

சித்தூர் தமிழ்ப் பகுதி ஒரு போர்க்களமாக மாறி வருகின்றது. சத்தியம், அகிம்சை, நேர்மை, உண்மை ஆகிய ஆயுதங்களைக் கொண்டு தமிழர் தலைவர்கள் ஒரு பக்கம் நிற்கின்றனர்; குண்டாந்தடி, போன்ற பயங்கர ஆயுதங்களைத் தாங்கி மறுபுறம் ஆந்திர வெறிக் கூட்டம் நிற்கிறது. இந்தப் போராட்டத்தில் தமிழன் தோல்வியுற்ருல் அப்புறம் அவன் ஊராருக்கெல்லாம் இளைத்தவனுக மானம் இழந்து வாழ வேண்டியதுதான்.

இந்தப் போராட்டம் அவசியமென்று கருதுபவர்கள் ஒரு பக்கமிருக்கட்டும். அவர்கள் மௌனமாகவாவது ஒதுங்கி நின்றுவிட்டனர், இந்தத் திராவிடத் திருக்கூட்டம் என்ன செய்கிறது தெரியுமா? உயிரை நிறுத்தி, பதைபதைப்புடன் தங்கள் இனத்தவர் நடத்தும் உரிமைப் போரை கவனிக்கும் தமிழர்களிடையே கோமாளிக் கூத்துக்கள் செய்து அவர்கள் உணர்ச்சியை, வேகத்தை, குறைக்க திட்டம் வகுக்கிறது.

தமிழரின் பரம்பரைச் சொத்து பறிபோகும் போது ரயில்வே ஸ்டேஷன் பெயரை மாற்றிவிடப் போராட்டம் நடத்தப் போவதாக ஆரவாரம் செய்கிருர் தி. மு. க. தளபதி அண்ணுத்துரை. விக்கிரகங்களை உடைக்கப் போவதாக வீராவேசமாகப் பேசுகிருர் தி. க. தலைவர் பெரியார் ஈ. வெ. ரா.

எவ்வளவு முக்கியமான போராட்டம் பாருங்கள்! தலைக்கே ஆபத்து வந்தபோது கால் விரல் காயத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டானும் ஒரு புத்திசாலி. அவனை விடப் புத்திசாலிகளாக இருக்கின்றனர் இவர்கள்.

தி. க., தி. மு. க. தலைவர்கள் துவக்க இருக்கும் போராட்டங்கள் நியாயமானவையா அல்லவா என்பதை நாம் ஆராய விரும்பவில்லை. "இப்போது இந்த நேரத்தில் எது முக்கியம்?" இதுதான் நம் கேள்வி.

அங்கே சித்தூரில் உதிரத்தைச் சிந்தி தமிழர்கள் உரிமைப் போராட்டம் நடத்தும் போது தமிழன் என்ற உணர்ச்சியுள்ள யாரும் தங்கள் முழு கவனத்தையும் அந்தப் பக்கம் திருப்புவதுதான் நியாயம். அப்படி முடியவில்லையா பேசாமல் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கலாம். அது அவர்கள் உரிமை. ஆனால் மக்களின் கவனத்தை அவசியமாகத் திருப்பி, அவர்கள் வேகத்தைத் தடுத்து, அதன் மூலம் ஆந்திர வெறியர்களுக்கு ஆக்கத்தைத் தரும் திராவிட மனேபாவத்தை தமிழகம் எந்தக் காலத்திலும் ஏற்காது.

தி. க., தி. மு. க. தலைவர்களும் தொண்டர்களும் உண்மையாக இன உணர்ச்சி, நாட்டு பற்று உடையவர்களாக இருப்பின் சித்தூர் தமிழர் போராட்டத்தில் தாமதம் இல்லாமல் குதிக்க வேண்டும். சித்தூர் பிரச்னை தீர்ந்த பின்னர் சொந்த வேலையைக் கவனிக்க முற்பட வேண்டும். அப்படிச் செய்து தாங்களும் **தமிழர்கள்தான்** என்பதை நிலை நாட்டப் போகிருர்களா? அல்லது வழக்கம் போல **திராவிடர்களாகவே** இருக்கப் போகின்றனரா?

சோர்வு மனப்பான்மை

'பதி'

அன்புள்ள தம்பி,

கடிதம் கிடைத்தது. வாலிபத்திலேயே நீ வயோதிகனுகிவிட்ட விந்தையை உன் கடிதம் கூறியது. நான் வேதனை யுற்றேன்,

'செயல்.... செயல்....' என்று துடித்தெழுந்து துருதுருவெனத் துள்ளித் திரிந்து வாழ்க்கைப் பாதையில் மடமட வென ராஜ நடை போட வேண்டிய நீ வாழ்க்கையில் சலிப்பு தட்டுகிறது என்றும் சதா சோர்வு தலைகாட்டுகிறது, என்றும். என்ன தான் சாப்பிட்டாலும் பலவீனம் தவிர்க்க முடியாத நோயாக ஒட்டிக் கொண்டு விட்டது என்றும், எந்தத் தொழிலிலும் ஈடுபாட்டுடன் மனதைப் படிய வைக்க இயலவில்லை யென்றும், வாழ்க்கையில் வெற்றியின் வழியே கண்ணுக்குத் தென்படவில்லை என்றும், ஒரு குரல் அழுதிருக்கிருய். அதாவது சோர்வு மனப்பான்மை தன் முழு வலிவுடன் உன்னை முற்றுகையிட்டு விட்டது.

உன்னுடைய நிலை கண்டுநான் ஆச்சரியப்பட வில்லை. அனுதாபந்தான்கொண்டேன். உன்னைப் போல, வாழ்க்கையில் முழு உருவத்தையும் கண்டு விட்டவர்கள் மாதிரி வேதாந்தம் பேசி சோம்பித்திரியும் இளைஞர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். வாழ்க்கைப் பாதையில் இரண்டு அடிகூட எடுத்துவைக்காத இவர்கள் ஏதோ பெரிய அனுபவசாலிகள் போல பேசுவதைக் காணுந்தோறும் எனக்கு சிரிப்புத்தான் உண்டாகும். போராடுவதற்காக போர்களத்தைநோக்கிச் செல்பவன், அங்கேகேட்கும் பேரிரைச்சலைக் கண்டுபயந்து திரும்பி விடுவது போலத்தான் இருக்கிறது இவர்கள் பேச்சு.

வாழ்க்கை என்ருல் சுகமான சிமெண்ட் ரோடு என்றும், எடுத்த எடுப்பிலேயே அதில் உல்லாசமாக கார் சவாரி செய்யலாம் என்றும் தவருக நம்பி வாழ்க்கைப் பாதையில் நடை போடத் தொடங்கும் அவசரக்கார்கள்தான் பெரும்பாலும் இந்தசோர்வு மனப்பான்மைக்கு இலக்காகி விடுகின்றனர். வாழ்க்கையின் குறிக்கோளை மந்திரத்தால் மாங்காய் பறிப்பதுபோல எட்டி விடலாம் எனக் கருதும் இவர்கள், அது முடியாது, மாங்காய் வேண்டுமானல் மரமேறித்தான் ஆக வேண்டும் என்பதை உணரும் போது திகைத்து விடுகின்றனர். உடனே "சீ....சீ.... இந்தப் பழம் புளிக்கும் என்ற ரகத்தில் பெரிய பேச்சுக்கள் பேச ஆரம்பிக்கின்றனர்.

தம்பி, எடுத்த எடுப்பிலேயே கசப்பு மருந்தை உனக்கு புகட்ட முற்படுவது கண்டு முகத்தை சுளிக்காதே. நீ திருந்த வேண்டு

மானல் கசப்புமூலிகைதான் கை கண்டமருந்து.இதைமறக்காதே.

தம்பி, வாழ்க்கை என்பது ஒரு போர்க்களமே. இதை நீ முதலில் உணரவேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் வாழ்க்கைப் போர்க்களத்தில் நிற்கும் வீரர்களே. போர் முனை யில் நிற்பவன் தன் லட்சியத்தை அடைய வேண்டுமானல் போரா டித்தான் தீர வேண்டும். இது மாற்ற முடியாத ஒரு நியதி.

வாழ்க்கையில் வெற்றி யடைய வேண்டும் என்ற எண்ணம் உன் மனதில் தலை காட்டிய உடனே நீ "அந்த வெற்றியும் சுகமும் எங்கே இருக்கிறது" என்று உட்கார்ந் தபடியே பார்வையை சோர் வுடன் ஓட்டக்கூடாது. நிமிர்ந்து நின்று தூரத்தில் தெரியும் உன் குறிக் கோளை உற்சாகத்துடன் நோக்க வேண்டும். உடனே ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து உன் லட்சியத்தை நோக்கி நடக்க வேண்டும்.

உன் பாதை காடுமுாடு ஆன தாக இருக்கலாம், கல்லும் முள்ளும் எங்கும் பரவிக் கிடக் கலாம், பயங்கர ஜீவராசிகள் பாதையில் ஊர்ந்து கொண்டி ருக்கலாம். உன் காலிலே செருப்பு இல்லை. தகுந்த பாது காப்பு இல்லை என்பதெல்லாம் உண்மையாக இருந்தாலும் நடப்பதை நிறுத்தாதே. லட்சி யத்தில் வைத்த கால்களில் வந்து மோதும் வேதனைகளைப் பற்றி சற்றும் சிந்தனை செய் யாதே! கூடிய வரையில் கால் களை நல்ல இடத்தில் ஊன்றி நடக்க முயற்சிசெய்; சாத்தியப் படவில்லை என்ருல் முள்ளோ கல்லோ எந்த இடமாயினும் கால் வைக்கக் கவலைப்படாதே. அப்பொழுது வேதனை அதிகமா கும் என்பதைப் புரிந்துக்கொண் டுதான் நீ நடக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பிரயாணத் திற்கு நீ தயாராகி விட்டால். நீ லட்சியத்தை நோக்கி செல்ல வேண்டியதில்லை, லட்சியமே உன்னை நோக்கி வந்துவிடும்.

தம்பி, நீ வாழ்க்கையில் வெற்றிகாண விரும்புகிருய் அல் லவா? சோம்பி உட்காராதே, கிடைக்கும் சந்தர்ப்பம் எதை யும் நழுவ விடாதே. உழைக்கப் பின் வாங்காதே, வேதனை தரும் நிகழ்ச்சிகளைக் கண்டு திகைக் காதே. இது தான் மனித உயர் வுக்கு உண்மையான மந்திரம்.

வீணுக பகற்கனவு காணும் வழக்கத்தை அறவே ஒழித்து விடு. போட்டிப் பரிசு மூலமோ லாட்டரி மூலமோ லட்சாதிபதி யாகிவிடலாம், அப்புறம் உல் லாச வாழ்வு வாழலாம் என்று நினைப்பவர்கள் தங்களுக்கு தாங்களே படுகுழியைத் தோண்டிக் கொள்கிருர்கள் என் பதை மறந்து விடாதே. நீ உழைப்பை நம்பு. நிச்சயம் உயர்ந்துவிடலாம். உண்மை உழைப்பாளி உயர்வதற்குச் சற்று அதிக காலமாகலாம். ஆனல் அந்த உயர்வு நிரந்தர மானது.யாராலும் கவிழ்த்துவிட முடியாதபடி நிச்சயமானது.

ஆகவே வீணுக வேதாந்தம் பேசுவதை உடனே விடு. கிடைக் கும் சந்தர்ப்பம் எதுவாக இரு ப்பினும், எவ்வளவு தாழ்ந்த தகுதியில் இருப்பினும் விடாப் பிடியாகப் பற்றிக்கொண்டு முன் னேற முயற்சி செய். உன் துய ரம் விரைவில் பறந்து போகும்.

எனது இந்தக் கடிதம் உனக் கும், உன் போன்றவர்களுக்கும் நிச்சயம் பயன்படும் என்று நம் புகிறேன். அடுத்த உன் கடி தம் கண்டு பதில் எழுதுகிறேன்.

உன் அன்பான

தமையன்.

மேலட்டைச் சித்திரம்:

விளையாட்டும் வினையும்!

மதியுமிழ்ந்து கதிர் விழுங்கி வந்த மாலை நேரம் அது. தூரத்தே கடலிரைச்சல்; அதற்கொப்ப இந்திர விழாக் கொண்டாட்டத்தில் மூழ்கியிருந்த மக்களின் மகிழ்ச்சிப் பேரிரைச்சல். பொதுவாக இனிமை தரும் நேரம் அது.

தனியிடத்தே அமர்ந்திருந்தனர் அந்தக் காதல் ஜோடி.

அவன் கோவலன், அவள் மாதவி; இலக்கியப் பிரசித்தி பெற்ற தமிழ் நாட்டுக் காதல் ஜோடி.

பொழுது இனிமையுடன் கழிய வேண்டும். கலையுள்ளம் பொருந்திய கோவலன் அந்த உல்லாச நேரத்தை உயர்தரமாகக் கழிக்க எண்ணுகிறான். இந்த நோக்கம் அவன் முகத்தில் பிரதிபலிப்பதை உணர மாதவிக்குச் சொல்லித்தரவா வேண்டும்! அவளே கலைச் செல்வி அல்லவா.

அருகே உறையினுள் இருந்த வீணையைக் கை நீட்டி எடுத்தாள். வீணையின் நரம்புகளை சுருதி சேர அமைத்து, ஒழுங்குபடுத்தி கோவலனிடம் நீட்டினாள். பூரிப்புடன் அதைப் பெற்றான் கோவலன்.

கையிலே வீணை, கருத்திலே கலையுணர்வு, சூழ் நிலையில் செறிந்த இன்பம் ஆகியவற்றுடன் இணைந்து என்ன செய்யலாம் என்று எண்ணிய கோவலன் மாதவியை விளையாட்டாக வம்புக்கு இழுக்க நினைத்தான். ஆம், விளையாட்டாகத்தான்.

வீணையை அவன் விரல்கள் மீட்டின. அதிலிருந்து எழுந்த மென்மையான நாதத்துடன் இசைந்து அவன் குரல் ஒலித்தது. இனிமை நிறைந்த கானல் வரிப் பாடல்களை மெய்மறந்து பாடினான்.

வளைவளர் தருதுறையே
மணம்விரி தருபொழிலே
தளையவிழ் நறுமலரே
தனியவள் திரியிடமே
முளைவளர் இளநகையே
முழுமதி புரைமுகமே
இளையவள் இணைமுலையே
எனையிடர் செய்தவையே

கற்பனை செறிந்த விளையாட்டுப் பாடல்தான்! யாரோ ஒரு வேற்று நங்கையை எண்ணி மனம் அலைக்கழிந்து பாடுவது போன்ற பாவனை.

சங்குகள் வளரும் கடல்த் துறையும், மணற்பரந்த சோலையும், கட்டவிழ்ந்து மணம் வீசும் மலரும், அவள் உலாவிய தனியிடமும், ஆகிய இவைமட்டுமா; முல்லை அரும்பு போன்ற அவளது பல் வரிசை, நிறைமதியை ஒக்கும் தெளி முகம். ஆகிய அவளது அங்க வடிவும் சேர்ந்து அவள் நினைவால் வாடும் என்னை வாட்டி வதைக்கின்றனவே! இது பாடலின் கருத்து.

அந்த **அவள்** யாருமில்லை. கற்பனைக் கன்னிதான். ஆனால் மாதவி பெண்தானே. கொஞ்சம் மனம் சலனமடையத்தானே செய்யும். என்றாலும் அப்படியொன்றும் கோவலனை வினையாகக் கருதி வெறுத்து விடவில்லை. பழிக்குப் பழிவாங்குவது போல தானும் ஒரு விளையாட்டு செய்ய எண்ணினாள்.

கோவலனின் கரத்திலிருந்த வீணையை வாங்கிக் கொண்டு வீணை நாதத்தையும் மிஞ்சிய தன் இனிய குரலில் பாடத் தொடங்கினாள்.

நேர்ந்தநங் காதலர்
நேமிநெடுந் திண்டேர்
ஊர்ந்த வழிசிதைய
ஊர்கின்ற வோதமே
பூந்தண் பொழிலே
புணர்ந்தாடும் அன்னமே
ஈர்ந்தண் துறையே
இதுதகா தென்னீரோ

நம்முடன் உறவாடிய தலைவனின், அழகிய பெரிய தேர் சென்ற தடத்தையாவது கண்டு மனம் ஆறுதலடைந்து விடுவேனே என்று அந்தத் தடத்தையும் சிதைத்துவிடும் வெள்ளமே, குளிர்ச்சி பொருந்திய மலர்களைக் கொண்ட சோலையே, துணையுடன் இணைந்து மகிழ்ந்தாடும் அன்னமே, குளிர் நிறைந்த நீர்த் துறையே, என்னைத் தனியே ஏங்கவிட்டு பிரிவது தகாது என்று அவரிடம் கூறமாட்டீர்களோ....

தன்னுடன் நட்பாயிருந்து பிரிந்து சென்ற காதலனை எண்ணி ஏங்கிப் பாடுவது போன்ற பாவனை.

கலையழகு ததும்பும் தன்னுடைய விளையாட்டு, நிச்சயம் அவன் மனதைப் பரவசப்படுத்தியிருக்கும், தன்னைப் போற்றுவான், கேலி செய்வான் என்றெல்லாம் அவள் உள்ளுணர்வு எண்ணியிருக்கும்.

ஆனால் நடந்தது என்ன! ஆண்களுக்கு உள்ள அவசர புத்தி கோவலனையும் விட்டதா! மாதவியின் மனதை, அவள் ஒழுக்கத்தையே கோவலனின் உள்ளம் சந்தேகிக்கிறது. காதல் போதை ததும்பிய கண்களிலே தீப்பொறி பறக்கிறது; முகம் சினத்தால் சிவக்கிறது. ஒரு பேச்சும் பேசாமல் தன் பரிவாரங்கள் புடைசூழ வீட்டை நோக்கிப் புறப்பட்டுப் போய்விடுகிறான்.

கோலாகலத்தோடு கோவலனுடன் கை கோத்து வந்த மாதவி, தன்னந் தனியே வீடு திரும்புகிறாள், விளையாட்டாகப் பாடிய பாட்டு அவள் வாழ்வின் எதிர்காலச் சித்திரமாக அமைந்து விட்டது! ஆம், விளையாட்டு வினையாகி விட்டது!

—ர. ச.

வாழ்த்துகிறோம்

திரு. வி. பி. சுந்தரம் அவர்கள் குமாரன் **திரு. சிட்டிபாபு**க்கும் காலஞ் சென்ற பெங்களூர் பிரபல பேக்ரி அதிபர் திரு. முத்தியால் அவர்களின் குமாரி **லலிதாபாய்**க்கும் சென்னை தியாகராய நகர் ராஜாபாதர் முதலியார் தெருவில் 17-5-53-ல் மணமகன் சகோதரி R. பத்மா இல்லத்தில் திருமணம்சிறப்புற நடைபெற்றது. பல பிரபலஸ்தர்கள் திருமணத்திற்கு வந்திருந்து மணமக்களை ஆசீர்வதித்தனர். மணமக்களுக்கு "உமா"வின் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

''நானும் செத்து விட்டேன். இதை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்ருன் சங்கர்.

''காலிப்பயல், இவன் செய்கையைப் பார்த்தீர்களா?'' என்ருர் தந்தை.

''...கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே...'' என்று பதில் சொன்னுன் சிதம்பரம்.

மேன் மக்கள்

"சுகி"

சங்கு சுட்டாலும் வெண்மை தரும் காலம் இதுவன்று.

தான்ய கப்பலை எதிர்பார்க்கும், உணவு மந்திரியைப் போன்று, விருந்தினர்களை எதிர்பார்க்கும் சுபாவம் இன்று எல்லோரிடமும் இருக்கிறதா? சிதம்பரம் வீட்டுக்குள் வந்ததும் வராததுமாக, ஞானம்மா விபரத்தைச் சொன்னுள். வாமனவதாரமாகி வரும் வரவு செலவு பட்ஜெட்டுகளுக்கு புதிய முடிச்சாக ஒரு விருந்தாளி வருகிருர்; ஒரு வாரமோ, மாதமோ அந்த முடிச்சு விழுவதை சிதம்பரத்தால் எண்ணிப் பார்க்கவும் முடியாத நிலை. பஸ் ஸ்டாப் பிச்சைக்காரன் வயிற்றை நினைப்பூட்டும் அவரது மணிப்பர்ஸ் ஒட்டி இளைத்துப் போயிருந்தது. இந்நாளில் பணம் குறையக் குறைய மனித பண்புகளும் குறைந்து விடுகின்றன. சங்கு சுட்டாலும் வெண்மை தரும் காலம் இதுவன்று.

''நான் என்ன செய்வேன். உங்கள் தம்பிக்கு கிளாஸ்மேட். ரொம்ப வேண்டியவராம்.''

''அவன் ஒரு ஊதாரி. இது என்ன தர்ம சத்திரமா. யார் யாருக்கோ பொங்கி போட நான் என்ன சீமாஞ?''

கோடை நாளின் வெளிப் புழுக்கத்தோடு மனப் புழுக்கம் சேரவே சிதம்பரம் ஆபீஸ் உடைகளை உரித்து, சட்டை கழற்றிய சர்ப்பம் போல் சீறிஞன். பணமில்லாத சமயம் விருந்து வந்துவிட்டதே என்ற ஆத்திரம்.

''நீ என்ன சொன்ஞயாம்''

''சொன்னேன் சோத்துக்கு உப்பில்லை யென்று''

ஞானம்மாளுக்கு எரிச்சல். தன் மீது கோபத்தைக் காட்டிப் பயன்? தான் நிரபராதி என்பதை கோபித்து எதிரொலி செய்தாள். எலியும் பூனையுமாக மாறி மாறி பார்த்துக் கொண்ட சமயம், டக் டக் என்ற பூட்சின் ஒலி கேட்டது.

''அந்த பிள்ளையாண்டாஞகத்தான் இருக்க வேண்டும்.''

''யார், தம்பியின் சிநேகிதஞ?''

''ஆமாம்'' என்று ஞானம்மா உம் கொட்டுவதற்குள் வாரி விட்டு வழவழவென சீவிய கிராப்பு தலை, ஜன்னலுக்கு அப்பால் தெரிந்தது. சிவந்த உதடும், ஏறிய நெற்றியும், வளைந்த புருவமும் சட்டெனப் பதிந்தன.

முகத்திலே தேங்கி நின்ற சோர்வு, எரிச்சல், கோபம், அவ்வளவையும், கைதேர்ந்த நடிகனைப் போன்று மாற்றிக் கொண்ட சிதம்பரம் "வாருங்கள்; வாருங்கள்" என்று வரவேற்றான். முகத்திலே சிரிப்பு; கையிலே வணக்கம்; உடலில் எத்தனை பவ்வியம்!

"நான்தான் சங்கர்; தங்கள் தம்பிக்கு கல்லூரி நண்பன்"

"சந்தோஷம். இப்படி நாற்காலியில் உட்காருங்கள்."

வந்த வாலிபன், பேசாது அமர்ந்தான். தம்பி தனக்கு இட்ட கட்டளை ஏதாக இருக்குமோயென்ற பயத்தோடு அவன் தந்த கடிதத்தைப் பார்த்தான். சுருக்கம் இதுவே. "என்னைப் போல எண்ணிக் கொள் அண்ணு" என்ற வற்புறுத்தல் இருந்தது.

"நீங்கள் இங்கே தங்கலாம்; பெட்டி படுக்கை எங்கே இருக்கிறது?"

"நான் இந்த ஊருக்குப் புதிசு; யாரையும் காண முடியாதென நினைத்தேன்; என் புண்ணியம், எனக்கு அறிமுகமான ஒருவரே என் ஆபீசில் இருக்கிருர். அவரே தங்குவதற்கு அறை பார்த்துவிட்டார்; வசதி ஏற்பட்டுவிட்டது. தங்களுக்குச் சிரமம் இல்லை."

தன் மீது பாரம் இல்லையென உணர்ந்த சிதம்பரம் "அடாடா ஓட்டல் சாப்பாடு பிடிக்குமோ என்னமோ. நம் வீட்டிலேயே தங்கியிருக்கலாம்" என்று வற்புறுத்த ஆரம்பித்தார். தனக்குச் சிதம்பரத்தின் நட்புக் கிடைத்ததைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்த சங்கர், "நான் எனக்கு ஓய்வுள்ள நாட்களில் இங்கே வருகிறேன். ஓட்டல் சாப்பாடு எனக்கு மிக மிகப் பழக்கம்; பிடிக்கவும் செய்யும்" என்ருன்.

சங்கர் என்ன வற்புறுத்தினலும் தங்க வரப்போவதில்லையென்ற பிறகு அதிகமாக வற்புறுத்திச் சொன்ஞன் சிதம்பரம்.

அன்றையச் சாப்பாடு சங்கருக்குக் கிடைத்தது. அதன் பிறகு ஓய்வு நாட்களில் எப்போதாவது வருகிற காலத்தில் உணவு கிடைத்தது. உணவுக்காக மட்டும் சங்கர் வரவில்லை, உள்ளம் குளிர வருகிருன் என்பதை சிதம்பரம் தெரிந்து கொண்டான்.

"நீ சொல்வது உண்மையா, ஞானம்மா?"

"ஆமாம். அந்தப் பெண்ணும் அந்த வேளையில் இங்கே வந்து விடுகிறது."

"அப்படியா?"

"பொய் என்ன. நீங்கள் தெரியாத மாதிரி என்னை ஆழம் பார்க்கிறீர்கள்"

இவ்வாறு தாம்பத்திய ஊடல் பேச்சு நடந்த போது வசந்தா வந்தாள். "ஏனக்கா உங்களுக்கு ஏதாவது ஒத்தாசை செய்ய வேண்டுமா?" என்றாள். சிதம்பரம் வீட்டில் இருப்பதை வசந்தா கவனியாமல் வரவே, அவர் அறைக்குள் பதுங்கிக் கொண்டார். புருஷன் உள்ளத்தை நொடியில் உணர்ந்த ஞானம்மா, "வா, வசந்தா, எனக்கு ஒத்தாசை செய்ய இன்று தேர்ந்தெடுத்தாயே அதற்காக நான் பாராட்டுகிறேன்" என்று சிரித்தாள்.

"நீங்கள் பொல்லாதவள். நான் என்றைக்கும் உங்கள் வீட்டுக்கு வருகிறவள் தானே."

"இருந்தாலும் இன்று ஞாயிற்றுக்கிழமை. ஒரு வேளை அந்த அவர் வரலாம்........"

"இத்தனை நாளாகத் தன் செய்கையை புரிந்து கொள்ளவில்லையென நினைத்த வசந்தாவின் முகத்தில் பயம் குடிகொண்டது. தன் வாழ்வில் மீண்டும் புயல் வீசி, இடியே விழுந்து விடுமோ யென்று பயந்தாள். பெருகிவரும் கண்ணீரையும் விம்மலையும் அடக்கிக் கொண்டு, "அக்கா நீங்கள் கூட இந்த ஏழையைப் புரிந்து கொள்ள வில்லையா?" என்று கையைப் பிடித்துக் கொண்டாள். வரும் காட்சிகள் ரசமாக இருக்குமென எண்ணி மறைந்திருந்த சிதம்பரம், துக்கப்படலமாக மாறவே வெளியே வந்து சமாதானம் செய்ய நினைத்தான்.

பாவம், வசந்தாவின் வாழ்வுப் பாதையில் ஏற்பட்ட மேடு பள்ளங்களை அறிந்தவர்களுக்கு அனுதாபம் பிறக்கும். சிதம்பரம் எதிர் வீட்டில்—வீடல்ல குச்சில், குடியேறிய தாயும் மகளும் வாழ்ந்த வாழ்வை நன்கு அறிந்தவன். மேம்பட்ட வாழ்வுக்கு ஆசைபட்டு, அத்தனை சொத்தையும் பறிகொடுத்தவர்கள் என்பதையும் அறிவான். ஆகவே மறைவிலிருந்தபடியே வெளிவர அஞ்சி யோசனையில் ஆழ்ந்த சமயம், வாசற் பக்கம் சங்கரின் காலடி ஓசை கேட்டது.

அழுது மங்கிய முகத்தில் எத்தனை மாற்றம்! கலங்கிய கண்களில் எத்தனை பிரகாசம்! உதடுகளின் துடிப்பு, புருவங்களின் நெரிப்பு இத்தனையும் காணக்காண "வசந்தாவின் வாழ்வுக்கு வைகறை வந்துவிட்டது" என்று சொல்லிக் கொண்டான் சிதம்பரம்.

"சிதம்பரம் வரவில்லையா?"

"அவர்கள், வந்துவிடுவார்கள்; உள்ளே வாருங்கள்" என்று ஞானம்மா வரவேற்கவே, சங்கர் வீட்டுக்குள் வந்து உட்கார்ந்தான். வசந்தா நாணத்தினால் அடுக்களைப் பக்கம் மறையவே, அவன் கண்ணோட்டம் அங்கு சென்றது. மறைவிலிருந்து சிதம்பரம் சங்கரின் மனத்துடிப்பையும் இதயத்துள்ளலையும் கண்டு கொண்டான். ஆனால் ஏழ்மை நிறைந்த வசந்தாவின் மீது ஏன் பணக்காரத் தோற்றமுள்ள சங்கருக்குப் பற்று விழ வேண்டும். இந்தப் பற்று பாசமாகி, அன்பா



நீதிபதி: உன் மீது குற்றமில்லை என்று தீர்மானித்து உன்னை விடுதலை செய்கிறேன்.

கைதி: ரொம்ப சந்தோஷங்க.... அப்போ.... நான் திருடின அந்த கெடி காரத்தை இனி மேல் தாராளமா விற்கலாமுங்களா?

கப் பெருகி காதலில் நிற்குமா? சிதம்பரத்தின் எண்ண ஓட்டத்தை சங்கர் பேச்சு தடைப் படுத்தியது.

"நான் இன்று முக்கிய காரியமாக வந்தேன். அவர்கள் வரவில்லையா? எங்கே போயிருக்கிறார்கள்?"

"அநேகமாக வந்து விடும் நேரம்! என்ன விஷயம் சொல்லுவதானால் சொல்லலாம்."

சொல்லவந்தவன், வேண்டாமெனத் தனக்குள்ளாகவே தலையை 'ஆட்டிக் கொண்டு, "நான் நாளை காலை வருகிறேன்" என்று எழ அவசரப் பட்டான். ஞானம்மா தாமதித்துப் போகும்படியும், தன் புருஷன் எந்த நிமிஷமும் வந்துவிடலாம் என்றும் சொன்னாள். இந்தக் குறிப்பறிந்த சிதம்பரம் அறையின் மறு கதவைத் திறந்து குறுக்கு வழியே தெருவையடைந்து அங்கிருந்து வீட்டுக்குள் புதிதாக வருகிறவன் போன்று வந்து கொண்டிருந்தான்.

சங்கர் மனம் விட்டுப் பேசினான்.

2

வசந்தாவைப் பெற்றெடுத்துச் சீராட்டிய தாயார் ஆவலோடு காத்திருந்தாள். தபால்காரனும் கடிதத்தைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான். சிதம்பரம் ஆவலோடு கடிதத்தைப் பிரித்தான்.

"உங்களுக்கு வெற்றி; என் தம்பி எழுதியிருக்கிறான். பெரிய குடும்பத்துப் பையனும். இவன் பேச்சை தாய் தந்தை எதிர்க்கமாட்டார்களாம்."

"உங்கள் புண்ணியம். மகாராஜனாக இருக்க வேண்டும், அந்த பிள்ளையாண்டான்".

"வாழ்வில் கஷ்டப்படுகிறவர்களுக்கு விடிவு உண்டு" என்று ஞானம்மாவும் சந்தோஷத்தைத் தெரிவித்தாள். எத்தனையோதரம் அவர்கள் கேட்டுச் சலித்துப் போன பழைய விபரங்களை வசந்தாவின் தாயார் விசை பெற்ற கிராம் போனாகச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"சக்தி மீறி நகை போட ஆசைப்பட்டேன். வசந்தாவின் கல்யாணச் சடங்குகளுக்கு உரிய எல்லா ஏற்பாடுகளும் செலவுகளும் ஆகிவிட்டன. வசந்தாவின் அப்பாவுக்கு வீடு கொள்ளாத பெருமை. கலி

யாணத்திற்கு முதல் நாள் மாப்பிள்ளை அழைப்பு. மாப்பிள்ளைக்கு ஜுரம், கண் முழிக்க இயலாத ஜுரம். 'டாக்டர் பிரயாணம் கூடாதெனச் சொல்லுகிறுர்; வரமுடியவில்லை. கலியாணத்தை ஒத்திப் போடவும்' என்று தந்தி வந்தால் நாங்கள் என்ன பாடுபடுவோம். இப்போது நினைத்தாலே நெஞ்சு வெடிக்கிறது. உடம்பு கொதிக்கிறது.

"இப்போது ஏன் அதை நினைவு கொள்ள வேண்டும், நல்லது நடக்கப் போகிறது" என்று சிதம்பரமும் ஞானம்மாவும் சொல்லியும் அவள் கண்ணீர் ஊற்றெடுத்தது. தாயுள்ளத்துத் தாபம் சொல்லுக்குச் சொல் மெருகேறி வந்தது.

"படுபாவிகள், கலியாணத்தில் ஏற்பட்ட நஷ்டத்தையாவது எண்ணிஞர்களா? ஒரு முறை என் வீடு தேடி வந்து ஆடின ஆட்டம்....அப்பப்பா.... என் மகள் வசந்தாவுக்கு நிச்சயம் செய்த முகூர்த்தமே அவர்கள் பிள்ளை இறந்து விட்டானும். நாங்களே கொன்ருேமாம். இது பிள்ளை பெற்றவர்கள் இட்ட பழிச் சொல்...."

"போனதை யெண்ணி இப்போது ஏன் அழுகிறீர்கள். பையன் சங்கரை விசாரிக்கச் சொன்னீர்கள். என் தம்பியும் சிலாக்கித்து எழுதியிருக்கிருன்." என்ருன் சிதம்பரம்.

"இன்றுதான் என் வயிறு குளிர்ந்தது. எத்தனை மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள்; போனுர்கள். முதல் சம்மந்தி வீட்டாரைப் போன்ற ஒரு இடத்திலேயே கொடுக்க ஆசைப்பட்டு, எங்கள் பணம் கரைந்தது. அவரும் கவலையில் மெலிந்தார்.... அதுவே அவர் உயிரையும் குடித்தது. கலியாணம் நிச்சயமாகும் வேளை யார்தான் மாப்பிள்ளை வீட்டார் மனசைக் கலைப்பார்களோ" என்றுவிக்கிஞள்.

வசந்தாவின் தாய்க்கு எத்தனையோ சோதனைகள்! சொல்லி வைத்தாற் போல 'கலியாணம் நிச்சயமாகும்' என்ற வகை நெருங்கும்போது 'கலியாணப் பேச்சையெடுத்தால் மாப்பிள்ளை செத்துப் போவான்; மாமனுர் செத்துவிடுவார்' என்ற அபக்கியாதியும் உடன் பிறக்கும், வரவர வசந்தாவை மணக்க உறுதியுள்ள ஒருவனே கிடைப்பது அரிதாகப் போய் விட்டது. ஒரு சில தரகர்கள் லஞ்சம் வாங்கி அவர்களை ஏமாற்றி முடிவிலே, குடிலைக் கிளப்பி வேறு ஊருக்குப் புறப்பட்டால் தான் வசந்தாவின் வாழ்வே வேறு வகையில் திரும்பும் என்ற நிலைமையடைந்தது.

"முன்னே இருந்த நிலை என்ன? நாலு வருஷத்திலே ஏழையாக நிற்கிருேம். ஆமாம், ஏதோ சொற்பமான பணமே வெளியில் இருக்கிறது. பையன் ஒப்புக் கொண்டாலும் அவன் வீட்டார் ஒப்புக் கொள்ள வேண்டுமே...." என்று வழக்கமான சந்தேகத்தை நினைத்தது தாய் உள்ளம்.

"நான் அதற்கு ஜவாப்தாரி. ஒன்றும் மனம் கலங்க வேண்டாம். பையனுக்குள்ள காதல் அத்தனை உயிர் நிறைந்தது" என்று சிதம்பரம் உறுதியும் ஊக்கமும் கொடுத்தார்.

"கலியாணம் நடந்த மாதிரி; உங்கள் வசந்தாவுக்கு அடுத்த வருஷம் ஆண் குழந்தை பிறக்கும்" என்ருள் ஞானம்மா குறும்பாக.

"எத்தனை கலியாணம் நின்று போய்விட்டது! இந்த செங்கல்

பட்டுக்கு நாங்கள் குடிவந்ததே அதற்குத்தானே. உங்கள் வீட்டாரைத் தவிர வேறு யாருக்கும் முன்னே நடந்த ஏமாற்றங்கள் தெரியாது. தெரியவும் வேண்டாம். இந்தப் பையனுக்குக் கூட சொல்ல வேண்டாம்."

"சொல்லுவோமா? சொன்னாலும் கூட அந்த சங்கர் பிடிவாதமாக வசந்தாவையே மணக்கிறது என்றும் சொல்லிவிட்டான்."

"அந்தப் பிள்ளையின் புத்தி ஸ்திரமாக இருக்க வேண்டும்" என்று பிள்ளையார் கோவில் இருக்கும் திக்கு நோக்கி வணக்கம் செலுத்தினாள் வசந்தாவின் தாய்.

"உங்கள் தம்பி வேறே தகவல் என்ன எழுதியிருக்கிறார். பையன் நல்லவர்; சொத்துள்ளவர், அப்புறம்?" என்ற ஞானம்மா கேள்விக்கு செவி மடுத்த தாய் பல்லெல்லாம் தெரிய, "வேரே என்ன எழுதியிருக்கு?" என்றாள்.

"பிரமாதமாக ஒன்றுமில்லை. சங்கரின் பெற்றோர் மிக மிக நல்லவர்களாம். அவர்கள் மதுரையில் இருக்கிறார்களாம். பையன் இஷ்டப்பட்ட பெண்ணை சிறப்பாக தங்கள் வீட்டிலே திருமணம் நடத்துவார்கள்...."

"மதுரையிலா?" என்றாள் குரல் நடுக்கத்தோடு.

"ஏன் மதுரையில் நடப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்றாள் ஞானம்மா.

"ஆமாம். வசந்தாவை முதன் முதலாகக் கேட்டு வந்த இடம் மதுரை. அவள் வாழ்வைப் பாழாக்க...." என்று சொல்ல ஆரம்பித்த பெரியம்மாவைக் குறுக்கிட்டு, "மதுரை பெரிய நகரம், சங்கர் குடும்பத்தாரை அண்டிப்போய் பழைய சம்பவத்தை யாரும் சொல்ல முடியாது...." என்று ஞானம்மா உறுதி சொன்னாள்.

"ஆமாம் சங்கரின் அப்பா ஸ்ரீமான் பரமசிவம் அவர்கள்...." என்று உச்சரித்த போது "யார், யார்.... பரமசிவம்.... வடக்கு வீதிதானே?" என்றாள். சிதம்பரம் ஏறிட்டுப் பார்த்தபோது "அந்த படுபாவியின் அதே...." என்று பேச முடியாமல் மூர்ச்சையடைந்த வசந்தாவின் தாயாரைத் தெளிவிக்க டாக்டரை நாடி ஓடினான் சிதம்பரம்.

ஒரு மணி இரண்டு மணிக்கு அப்பால், வசந்தாவை மணக்க இருக்கும் சங்கர் பரமசிவத்தின் இரண்டாம் மகன் என்று ஊர்ஜிதம் செய்ய தர்க்கங்கள் நடைபெற்றன. நோயுற்ற பெரியவள் வைத்திய சிகிச்சை பெற்று வந்தாள்.

3

மறுநாட் காலை. சங்கர் உல்லாசமாக வந்தான். முகத்திலே இன்பரேகை படர்ந்திருந்தது.

"மிஸ்டர் சிதம்பரம்" என்ற குரல் உல்லாசமாகக் கேட்டதுமே, சிதம்பரம் வெறுப்படைந்தவராய் "ஐயா தயவு செய்து சப்தம் போட வேண்டாம்; அங்கேயே இருங்கள்" எனக் கடுமையாகச் சொன்னதும், சங்கர் முகம் செத்துவிட்டது.

"என்ன இப்படி கடுமையாகப் பேசுகிறீர்கள். என் மனதையும், செயலையும் சொல்லிவிட்டேன். தவறான பாதையில் நான் சென்றிருந்

தால் திருத்தும் உரிமை தங்களுக்கு உண்டு''

''தங்கள் தந்தையின் பெயர் பரமசிவம், மதுரை, வடக்கு மாசி வீதி, இது சரியா?''

''என் தகப்பனாரின் விலாசம் எப்படித் தெரிந்தது?''

''உங்கள் குடும்பத்தினால் தான், வசந்தாவின் குடும்பமே நொடித்தது. இன்று அவள் தாயார் சாகக் கிடக்கிறார்கள்.''

''ஐயோ, அதற்கு நாங்கள் என்ன செய்தோம்?''

''தங்கள் தமையன், நாராயணனுக்குப் பெண் பேசி....''

''அந்த பெண் வீட்டாருக்குத் திண்டுக்கல்; அது பரிதாபக் கதை. இவர்களுக்குச் சொந்த ஊர் செங்கல்பட்டு என்கிறீர்களே....''

''ஒரு காரணத்தால் சொன்னேம். தங்கள் தமையன் இறந்து போனதற்கு, வசந்தாவின் திருமணப் பேச்சே காரணமென திட்டு வாங்கினார்கள்; பின்னர் வந்த வரன்கள் அச்சானியம் கொண்டும் ஓடிப் போனார்கள்....தங்களது குடும்ப நிலைமை யோக்யதை தெரிய நான் என் தம்பிக்கு எழுதப் போக—இந்தக் குடும்பம் பாழ் பட்டதே தங்கள் குடும்பத்தினால் தான்....''

பித்தனைப் போல திகைத்த சங்கர், ''எனக்கு எதுவும் தெரியாது. நான் வீட்டில் கோபித்துக் கொண்டு மிலிட்டரியில் சேர்ந்திருந்தேன்; அப்போது யுத்த சமயம், அண்ணாவுக்கு கல்யாணம் என்ற கடிதம் மெஸபடோமியாவுக்கு வந்தது. பின்னர் அந்தத் திருமணப் பேச்சே அவனைக் கொன்றதாகவும் அப்பா எழுதியிருந்தார்....', என்று சோகத்தோடு எப்படி முடிப்பதெனத் தவித்தான்.

> மீன்கள் வாயைத் திறந்தால்
> தூண்டிலில் சிக்குகின்றன;
> பெண்கள் வாயை மூடுவதால்
> தூண்டிலில் சிக்குகிறார்கள்,
>
> — அறிவுத்திரள்.

ஞானம்மா, ''டாக்டரை அழைத்து வாருங்கள். அந்த அம்மாவுக்கு நினைவு மங்குகிறது'' என்றாள். சிதம்பரம் புழுவாய்த் துடித்தான். ஒண்ட வந்த விருந்தினால் தம் வீட்டில் அடங்காத புயல் வீசுவதைக் கண்டு திகைத்தான்.

''தயவு செய்து போய் விடுங்கள். உங்கள் பெற்றோர் தங்கள் காதலி வசந்தா பழைய வசந்தாவே என்று தெரிந்ததும் என்ன செய்வார்களோ?''

''என்னையும் அந்தக் கூட்டத்தில் சேர்க்க வேண்டாம். வாழ்வும் தாழ்வும், சாவும் சௌக்கியமும் பிறரைப் பொருத்ததா? இல்லையென்பது என் முடிவு.''

''எதற்கும் தாங்கள் ஒரு வாரத்தில் வாருங்கள்; அல்லது தங்களை வந்து சந்திக்கிறேன்.''

''நானே அந்த அம்மாளிடம் என் வாக்குறுதியை நேரில் சொல்லுகிறேன்''.

"தங்களைப் பார்த்தால்.... வேண்டாம், பலஹீனமான நிலையில் உயிருக்கு ஆபத்து வரும்; சோதிக்க வேண்டாம். போய் வாருங்கள்" என்றவன் குரலில் கடுகடுப்பும் கோபமும் இருந்தது.

"தங்கள் சொல்லுக்குக் கீழ் படிந்தே போகிறேன். என் அம்மாவே சொல்லுவாள், திண்டுக் கல் பெண் என் பிள்ளை உயிரைத் தின்றுள். அவளுக்கு கல்யாணம் நடக்கவொட்டாமல் நானே வரன் வீட்டாருக்கு கடிதம் எழுதியிருக்கிறேன், என்பதாகச் சொன்னதும் உண்டு...."

"அடடே, கல்யாணத் தடை செய்தது, வரன்களைக் கலைத்தது தங்கள் தாய்தான. புண்ணியவதி...."

"அதாவது, மகனைப் பறிகொடுத்த தாய் உள்ளம் செய்தது".

"வாக்கு வன்மைக்கு இது சமயம் அன்று" என்று வணக்கம் செலுத்தாமலே திரும்பி வந்துவிட்டான் சிதம்பரம். மூக்கறுபட்டவனைப் போல தள்ளாடிக் கொண்டே சங்கர் நடந்தான்.

4

"நீங்கள் போய் பார்த்தீர்களா, சங்கர் ஒருவாரமாக வரவேயில்லையே...."

"ஞானம்மா. நீ சும்மா இரு. அந்தப் பெரியம்மா பிழைத்தெழ பாடுபட்டதே போதும்."

"நீங்கள் எதைக்கண்டீர்கள்" என்று தன் பார்வையை வசந்தாவின் பக்கம் திருப்பினுள். 'அம்மா பிழைத்தாள்; மகள் தவிக்கிருள்' என்ற குறுப்புப் பார்வை ஞானம்மாவின் சொல்லிலும் பார்வையிலும் இருந்தது.

"ஏன் வசந்தா நீ என்ன நினைக்கிருய்."

"அண்ணு அவரை இந்த வீட்டில் ஆறு மாதத்திற்கு முன் பார்த்தது முதலே அவரை எங்கோ பார்த்தோம், பார்க்க வேண்டுமென்று நினைப்பு வந்தது. அவருடைய சாயை, அவர் அண்ணுவின் சாயயை என் மனசில் ஊட்டியது, என் பதைப் போன வாரம் அறிந்தேன்....'

"சரி, வசந்தா உன் செய்கைக்கு சமாதானம் சொல்வதைப் புரிந்து கொண்டேன். இனி என்ன நடக்க வேண்டும்?"

"அம்மா சொல்லுகிறபடி நான் செய்கிறவள். அண்ணு நீங்கள் இருக்கிறீர்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்த சமயம், வீட்டு முன்னல் பெரிய மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து சங்கரின் பெற்ருேரும் சங்கரும் சிதம்பரத்தின் தம்பியும் இறங்கிக் கொண்டிருந்தனர். பூனைகளைக் கண்ட கிளியாக மறைந்தாள் வசந்தா. வரவேற்பு மரியாதைகள் நடந்ததும் பெண்ணை வீட்டிற்குள் பார்த்த சங்கரின் தாய், பத்திர காளியானுள்; தந்தை விசுவரூபம் எடுத்தார். வாய்க்கு வந்ததைத் திட்டினர்கள்; வைதார்கள்; சிதம்பரத்தையும் அவன் தம்பியையும் சேர்த்து இறக்கினர்கள். பூவோடு சேர்ந்த நாராக கிழித்தார்கள்.

பதிலே பேசாது எல்லோரும் வாய் மூடி மௌனியானார்கள்.

"உனக்கு இந்த வசந்தா யாரெனத் தெரியுமா சங்கர்?"

"ஒரு வாரத்துக்கு முன் தெரிந்து கொண்டேன்."

"உன் அண்ணனை உயிரோடு கொன்ற பாதகி; சண்டாளி" என்றார் சங்கரின் தந்தை,

"உங்கள் சொற்படி. ஆனால் அவள் என்னை வாழ்விக்க வந்த தெய்வம்" என்று சொல்லிக் கொண்டே மின் வெட்டும் நேரத்தில் வசந்தாவின் அருகே போய் கையைப் பிடித்துக் கொண்டு நின்றான். எல்லோருக்கும் தூக்கி வாரிப் போட்டது.

"நீ எங்கள் பிள்ளையில்லை".

"ஆமாம், இவள் கணவன்! நானும் செத்து விட்டேன். இதை நினைத்துக் கொள்ளுங்கள்" என்று சொன்னவன் ஆவேசத்தோடு அவள் கரத்தைப் பற்றி 'உனக்கு என் குடும்பம், பெற்றோர் வீண் அபவாதம் பேசி செய்தக் கொடுமையைப் போக்க இஷ்டமிருந்தால், என்னோடு உன் குடிசைக்கு நட, இல்லை நான் எங்கேனும் நடக்கிறேன்' என்ற சொல்லில் என்ன தெய்வீகத்தைக் கண்டாளோ, வசந்தா!

யாரையும் கவனியாமல் அந்தக் குடிசை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள். பெற்றோர் அறியாத்தனத்தால் செய்த பாவத்தையும் எண்ணத்தையும் துடைத்தெறிந்த உற்சாகத்தோடும் பரம திருப்தியோடும் கவலையற்றவனாகப் போய்க் கொண்டிருந்தான் சங்கர். அவன் நடையில் மிலிடேரி மிடுக்கு இருந்தது.

"காலிப்பயல்; இவன் செய்கையைப் பார்த்தீர்களா?" என்றார் சங்கரின் தந்தை.

"சங்கு சுட்டாலும் வெண்மை தரும், கெட்டாலும் மேன் மக்கள் மேன்மக்களே" என்று பதில் சொன்னான் சிதம்பரம்.

சங்கர் மட்டுமன்று அந்தக் குடும்பமே பின்னர் மேன்மக்களாக மாறிக் கொண்டார்கள்.

நாவல் ரகங்கள்!

ஜெர்மன் நாவலில் முதல் அத்தியாயத்தில் இரண்டு பேர் ஒருவரை யொருவர் விரும்புவார்கள்; ஆனால் கடைசி அத்தியாயம் வரையிலும் அவர்கள் விருப்பம் கைக்கூடாமலே இருக்கும். பிரெஞ்சு நாவலில் முதல் அத்தியாயத்தில் இருவருடைய விருப்பமும் கைக்கூடி விடும் ஆனால் கடைசி அத்தியாயம் வரையிலும் அவர்கள் ஒருவரை யொருவர் விரும்ப மாட்டார்கள். ருஷ்ய நாவலில் ஒருவரை ஒருவர் விரும்புவதுமில்லை விருப்பம் கைக்கூடுவது என்பதும் இல்லை. ஆனால் இதைச் சொல்லுவதற்காக 1450 பக்கங்கள் மிக வேக மயமாக எழுதப்பட்டிருக்கும்.

— கௌண்ட்டர் பாயின்ட்ஸ்.

என் மைதிலி

சம்பந்தம்...

நீலக் கடலும் விரிந்த வானமும் தொட்டு முத்தமிடும் அந்த எட்டாத இடத்தைப் பார்த்தபடி அசைவற்று உட்கார்ந்திருந்தேன் நான். சிந்தையில் ஆயிரம் எண்ணங்கள் புரள, கரங்களிடையே கன்னத்தைப் புதைத்துக்கொண்டேன். திடீரென்று என் மனக்கண்ணின் முன் ஒரு லளித உருவம் சொல்லி வைத்தாற்போல எழுந்தது.

மைதிலி....! அதே பூரண சந்திரனை யொத்த முகம்! கூந்தலை யெடுத்துக் கட்டியிருந்த விதமும் அப்படியே! அந்தி மயக்கம் அவள் கண்களில்; அழகு மயக்கம் அவளது எழில் முகத்தில்; கனவு மயக்கம் புன்னகை நெளியும் இதழ் ஓரத்தில்! ஆக அவள் ஒரு மயக்க உரு.

வாய்க்கு வேண்டுமானல் பூட்டு போட்டுவிடலாம். மனதிற்குப்பூட்டுபோட முடிகிறதா! நீரிலே எத்தனை ஆழத்திலே அமுக்கிவிட்டாலும், மரக்கட்டை மேலே வரத்தானே செய்கிறது!

கருவண்டை யொத்த அவளுடைய கண்களையும், அந்த கண்களின் கருவிழிகளைச் சுழற்றி அவள் பொய்க்கோபத்துடன் என்னைப்பார்க்கும்தோற்றத்தையும் நினைத்து நினைத்துப் போதை கொள்வேன். அதென்ன கனவு! அதென்ன கற்பனை, ஆகாயக் கோட்டைகள்! எத்தனை மாடமாளிகைகளை என் மன அரங்கில் நிர்மானித்தேன். அடடா!

உலகம் சுழலுகிறது. இந்த வையத்திலே மனிதனும் சுழன்று சுழன்றுதான் வருகிறான்! அந்தச் சுழலின் வேகம் ஒருநாள் தடைப்பட்டு விடுகிறதே! அது ஏன்?

எனக்கு எதிலுமே மனது செல்லவில்லை. என் வாழ்க்கையிலேயே ஒரு அரிய சந்தர்ப்பம், என் கனவு, ஆசை எல்லாம் இப்படி சிதைந்து போனதால் என் வாழ்வே இருளடைந்து விட்டது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

அன்று நாங்களிருவரும் மாடிஹால் ஜன்னலுக்கருகில் கிடந்த நீண்ட சோபாவில் உட்கார்ந்திருந்தோம். ஒரு மூலையில் (நியாயப்படி எனக்கு சேரவேண்டியதுப்பட)

அங்கிருந்த நான்கு தலையணைகளையும் தன் பக்கத்தில் திணித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் மைதிலி. நான் மற்றொரு மூலையில் உட்கார்ந்திருந்தேன். எங்களிருவருக்குமிடையிலிருந்த தூரம், நாங்கள் பிணங்கிக் கொண்டிருந்ததைத் தெரிவிக்க போதுமானதே!

அப்பொழுது மாலை மணி நான்கிருக்கும். வெளியில் நல்ல வெயில். வாசல் கதவு பரக்க திறந்து கிடந்தது. தோட்டத்திலுள்ள உயர் தருக்களின் உச்சிகளனைத்தும் என் கண்ணில் பட்டன. அங்கிருந்து நானாவித பறவைகளின் இன்னிசைக் குரல்கள், என் காதைத் துளைத்தனவேயொழிய, என் கண்களுக்கு எந்தப் பறவையும் தென்படவில்லை. அப்படியிருந்தும் ஒரு அணில் மாங்காயை கோதிக் கோதித் தின்றுக் கொண்டிருந்ததையும், ஒரு மைனா அந்த அழகிய நீலப் பட்டாம் பூச்சியை துரத்தித் துரத்தி அலுத்துப் போனதையும் நான் பார்க்காமலில்லை. ஆனால் அவை அனைத்தையும் என் கண்கள் பார்த்தும், காதுகள் கேட்டும் அனுபவித்ததேயொழிய, என் மனம் என்னவோ பக்கத்திலிருந்த மைதிலியைப் பற்றியேதான் நினைத்துக் கொண்டிருந்தது.

அடிக்கடி என் கடைக் கண்ணால் மைதிலியைக் கவனிக்க தவறிப் போகவில்லை. அவளும் தன் விரல் தாவணித் தலைப்பின் நுனியை அர்த்தமில்லாமல் முறுக்கிக் கொண்டிருந்தும், என்னைப் போலவே இமை கொட்டாமல் தோட்டத்தையே கவனித்துக் கொண்டிருப்பது நன்றாய்த் தெரிந்தது. உண்மையாகவே எனக்கு இப்பொழுதுதான் நடந்தது போலிருக்கிறது. நாங்களிருவரும் ஒருவர்க்கொருவர் பார்த்ததையும் பார்க்கப்பட்டதையும் அறிந்தேயிருந்தோம். அப்படியிருந்தும் வெகு நேரம் வரை—ஒரு மணி நேரத்திற்கு மேலிருக்கும்—ஒருவருக்கொருவர் பேசவே இல்லை.

இதன் நடுவில் என் அத்தை ஏதோ பத்திரிகை எடுக்க வந்தாள். ஆனால் அவள் வழக்கப்படி எங்களிருவரையும் முறைக்கப் பார்த்துவிட்டு 'சும்மா இதுகளுக்கு இதுதான் வேலை' என்று முண முணத்துக் கொண்டே பத்திரிகையும் கையுமாக படியிறங்கிவிட்டாள்.

மைதிலியும் நானும் ஏறக்குறைய ஒரே ஏர்காலுக்கு தகுதியானவர்கள். ஏன் அப்படி! நான்தான் அவளைவிட நாலு வருஷம், மூன்று நாள் இரண்டு மணி, ஒரு நிமிஷம் மூத்தவன். அவள் என் அத்தையின் கோலக் கிளி. அவளும் நானும் ஒன்று சேர்ந்தே வளர்ந்தோம். நாங்கள் படிப்பதும், சாப்பிடுவதும், விளையாடுவதுங் கூட ஒன்றாகத்தான். அப்பொழுது அவள் 'வயது பதினாறிருக்கும்.

முன்பு எத்தனையோ தடவை நாங்கள் சண்டை போட்டுக் கொண்டிருந்திருக்கிறோமாதலால் அது புதிதல்ல. சில சமயங்களில் ஒருவர்க் கொருவர் ஒரு மாதம் வரை கூட பேசாமல் இருந்திருக்கிறோம். ஆகையினால் அன்று நான் 'இது எத்தனை நாளோ' என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

'சண்டை சண்டை' என்றதும் நீங்கள் ஏதோ அமெரிக்கா அணுகுண்டு சண்டை என்று எண்ணிவிடாதீர்கள். இது பிணக்கம். பொல்லாத அந்த பிணக்கத்தின்

காரணத்தையறிய உங்களனைவருக்கும் ஆவல்தான். ஆனால் அதை உங்களுக்குச் சொல்ல எண்ணும் பொழுது தாங்கொணு வேதனை என் நெஞ்சை யடைக்கிறது.

அப்பொழுது நான் வெகு கோபமாக எழுந்திருந்த நாற்காலியும், மைதிலி காரணமில்லாமல் கன கோபமாய் உதைத்துத் தள்ளின நாற்காலியும், எங்களிருவருக்குமிடையி

லிருந்த வட்ட மேஜையும் இன்னும் அப்படியே நாங்கள் விட்டு வந்த இடத்திலேயேதான் கிடக்கின்றன.

ஒன்றுமில்லை; பொழுது போக்காக 'தாயம்' விளையாடிக் கொண்டிருந்தோம். நான்தான் முதலில் அவளுடைய இரண்டு காய்களையும் வெட்டி வைத்தேன். பிறகு அவளது மூன்ருவது காயை வெட்ட 'இரண்டு' போட்டேன். அப்பொழுது ஒரு தாயக்கட்டை சற்று ஒரு மாதிரியாக ஒரு காயின்மேல் உராய்ந்து சாய்ந்திருந்ததால், அவள் "ஓ! மறுபடியும் எடுத்துப் போட்டுத்தாணுகணும்" என்று பெருத்த இரைச்சல்போட்டாள். எனக்கு அப்பொழுது கோபம் வரத்தான் வந்தது. இருந்தாலும் ஒருவாறு அதை அடக்கிக் கொண்டு மறுபடியும் எடுத்து உருட்டினேன். என் அதிருஷ்டம் மறுபடியும் அந்த 'இரண்டே' விழுந்தது. உடனே அவளுடைய மூன்ருவது காயும் நறுக்கென்று தொலைந்தது. அப்பொது மைதிலியின் முகம் போன போக்கைப் பார்க்க வேண்டுமே!

பிறகு அவள் ஏதேதோ முணமுணத்துக் கொண்டே விளையாடத் தொடங்கினுள். அதற்குள் நான் மூன்று பழங்கள் எடுத்துவிட்டேன். நான்காவதான கடைசி பழத்திற்கு சென்றுக் கொண்டிருந்தேன்.

மைதிலியும் என்னை விடாமல் துரத்திக் கொண்டே தான் வந்தாள். என் கடைசிக் காயை வெட்ட அதி ஆவலாய் தாயக்கட்டையை உருட்டினாள். அப்பொழுது ஒரு தாயக்கட்டை முன்பு எனக்கு விழுந்திருந்த மாதிரி — அதைவிட மோசமாகவே— ஒரு காயின் மேல் உராய்ந்து நன்ருகச்சாய்ந்திருந்தது. அதை மூன்று என்றும் சொல்வதற்கில்லை; இரண்டு என்றும் சொல்வதற்கில்லை. நான் அதை, இரண்டு என்றேன். அவள் அதை மூன்று என்ருள். என் காயை வெட்டுவதற்கு மூன்றுதான் வேண்டியிருந்ததால், அவள் அதை மூன்றே என்று பெருத்த இரைச்சல் போட்டாள். 'சரி மறுபடியும் எடுத்து உருட்டிவிடு' என்றேன். "ஓ! நான் மாட்டேன். அது மூன்றுதான்" என்று ஒருவித ஆத்திரத்துடன் கத்தினாள். "இதோபார் கண்ணு நான் முன்பு மறுபடியும் எடுத்து உருட்டல்லே!' என்று மிகச் சாந்தமாகச் சொன்னேன். "ஊம் ஹூம் அது முடியவே முடியாது கிட்டு" என்ருள். (அம்மா - அப்பா எதிரிலிருந்தால் நான் அவளுக்கு 'மாமா'. வேறு யாராவது இருந்தால் 'கிட்டு மாமா'. இது மாதிரி நாங்களிருவரும் தனித்திருந்தால் நான் வெறும் 'கிட்டு' தான். அவள் அப்படி அழைப்பது எனக்கு ஆனந்தமாகவேயிருந்தது.) உடனே இதோ பார் 'மூன்று'தான் என்று சொல்லிக்கொண்டே அந்த சாய்ந்திருந்த தாயக்கட்டையை சரிபண்ணி விட்டாள். எனக்கு கோபம் மூக்கிற்குமேல் ஓட, வெகு வேகமாக மேஜை மீதிருந்த கையை யெடுத்தேன். அதனுல் மேஜைத் துணி சற்று அசைந்து காய்கள் ஒன்று கலந்தன. உடனே அவள் 'தோற்ருங்களி! தோற்ருங்களி!' என்று கை கொட்டினாள். "ஏன் அப்படி! இதோ விளையாடு. எனக்கு காய்கள் இருந்த இடம் தெரியும்" என்று சரிவர அவைகளை இருந்த இடத்திலேயே வைத்தேன். ஆனல் அவள் அப்பொழுது அவளுடைய ஒரு காயை சீக்கிரத்தில் பழம் போகும்படியான இடத்தில் — அதுவும் ஒரு மலையைப் பார்த்து வைத்துக் கொண்டு, "அது அங்கேதானிருந்தது என்று ஒரே சாதனையாகச் சாதித்தாள். எனக்கு கோபம் வராமல் எப்படி யிருக்கும்! "நீயும் உன் ஆட்டமும்!" என்று சொல்லி தாயக்கட்டையால் மேஜையை அதி ஆத்திரமாக அடித்தேன். அவைகளுள் ஒன்று துள்ளியெழுந்து மைதிலியின் நெற்றியைத் தாக்கிற்று. 'ஆ!'வென தன் நெற்றியைப் பிடித்துக் கொண்டாள் அவள். அவளுக்கு அளவில்லாத ஆத்திரம் பொங்கி வந்தது. அவளுடைய புருவங்கள் நெறிந்தன, கோபத்தினல் சிவந்த கண்கள் அகல விழித்தன, இதழ்கள் துடித்தன.

நான் திகைத்துப் போய் "கண்ணு நல்ல அடியா!" என்று பரிதாபமாகக் கேட்டுக் கொண்டே அவள் நெற்றியைத் தடவிக் கொடுக்க நெருங்கினேன். உடனே அவள் 'சீ....போ....நான் ஒன்றும் உன் கண்ணல்ல' என்று ஆத்திரமாக மொழிந்து, அங்கிருந்த காய்களை யெல்லாம் வாரி என் மீது வீசி யெறிந்தாள். அப்பொழுது நான் சற்று குனிந்துக் கொடுத்துக்கொண்டதால், ஒன்றும் என்னைத் தாக்கவில்லை. அதன் பிறகுதான் மைதிலி எள்ளும் கொள்ளும் சேர்ந்து பொரிந்து வெடிக்கும் முகத்தை வைத்துக் கொண்டு, தான்

அமர்ந்திருந்த நாற்காலியையும் உதைத்துத் தள்ளிவிட்டு முதலில் சொல்லியபடி சோபாவின் ஒரு மூலையில் உட்கார்ந்தாள்.

மற்றொரு தடவையும் மெதுவாய்க் கண்ணைச் சாய்த்து மைதிலியைக் கவனித்தேன். அப்பொழுது அவள் முகம் சரியாய்ப் பாதி தெரிந்தது. ஆ! அச்சமயம் அவள் எத்தனையோ அழகாய்த் தோன்றினாள். அவளது சோபைக்கு 'பளிச்' சென்று ஜ்வலிக்கும் அந்த வைர மூக்குப் பொட்டு ஒன்றே போதுமே! அவள் அவ்வளவு அழகாகத் தோன்றினதை அதுவரை நான் பார்த்ததே கிடையாது. சற்று நேரங்கழித்து தன் நெற்றியில் விழுந்திருந்த சில சுருள் மயிர்களை ஒதுக்கிக் கொண்டே ஜன்னல் பக்கம் திரும்பினாள். அப்பொழுது அவள் முகம் முழுவதும் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆகா! அவளது வளைந்த புருவத்தை காண்டீபத்திற்குத் தான் ஒப்பிட வேண்டும். துரு துருவென்ற அவளது கருவிழிகளின் ஜ்வலிப்புத்தான் என்ன! அன்றலர்ந்த புது மலரையொத்ததுதான் அவள் கன்னம்! அவளிதழ்கள் — அசையாமலிருந்ததால் — சற்று வரண்டுபோயிருந்தும் செந்தாமரையழகிற்குக் குறைவேயில்லை. மைதிலி எனக்குப் புதியவள் இல்லைதான். இருந்தும் அச்சமயம் அவள் எனக்கு ஒரு தேவ கன்னியாகவே தென்பட்டாள்.

அடிக்கடி அவளைக் கவனித்து அவள் அழகைப் பருகப்பருக என் கோபமும் சற்று தணியத் தொடங்கிற்று. 'நாம் தான் முதலில் பேசுவோமே' என்றிருந்தது எனக்கு. அப்படியே முன்பு எத்தனையோ தடவை செய்துமிருக்கிறேன். உடனே நான் 'மைதிலி!' என்றேன். ஒன்றுமே பதிலில்லை. அவள் அசையாமல் ஜன்னல் வழியாகவே கவனித்துக் கொண்டிருந்தாள். மறுபடியும் 'மைதிலி' என்றேன். ஒரு பதிலும் இல்லை. இதுவரை ஒன்றும் பேசாமலிருந்ததால் என் தொண்டை உயர்ந்து குரல் எழும்பாதது அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. உடனே தொண்டையை நன்றாய் கனைத்து விட்டுக் கொண்டு 'மைதிலி' என்ற சற்று உறக்கவே கூப்பிட்டேன். ஊம் ஹூம், அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. எனக்கு அப்பொழுதே கோபம் எல்லைமீறி வந்திருக்கும். இருந்தும் முற்றிலும் நான்தான் முதலில் பேசியதாகவே யிருக்க வேண்டுமென்று "மைதிலி என்ன இது குழந்தை மாதிரி!" என்று சாந்தமாகச் சொன்னேன். அப்பொழுதுதான் அவள் சற்று அசைந்துக் கொடுத்தாள். எப்படி? அவள் முதுகை நன்றாய் என் பக்கம் திருப்பிக் கொண்டு அதே சமயத்தில் கீழே விழவிருந்த ஒரு தலையணையையும் நன்றாய் இழுத்துத் திணித்துக் கொண்டாள்.

அவ்வளவுதான். உடனே என் இரத்தமெல்லாம் முகத்திற்கேறினதை என்னால் தடுக்கவே முடியவில்லை. நானும் வெடுக்கென்று ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டேன். "இந்தக் குமரிகளுக்கே ஒரு தனி ராங்கி. அதுவும் சற்று அழகாயிருந்துவிட்டால் சொல்லவே வேண்டியதில்லை. நியாயப்படி முதலில் நாம் இவளிடத்தில் பேசியே இருக்கக் கூடாது. ஏதோ நம் மைதிலிதானே என்று பேச்சுக் கொடுத்தால், செப்பாலடித்த சிலை மாதிரி

ஒரே மௌனமாயிருக்கிறளே!' என்றெல்லாம் எண்ணினேன்.

அப்பொழுது மைதிலி சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள். நான் நினைத்தபடியே அவள் அம் மாதிரி உட்கார்ந்திருந்தது, சற்று சிரமத்தைக் கொடுக்கக் கூடியதாகவேயிருந்தது. ஆனால் அவள் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தன் தாவணித் தலைப்பில் விரலினல் ஏதோ அரிய கற்பனைச் சித்திரங்களை வரைந்துக் கொண்டிருந்தாள். சற்று நேரங்கழித்து, அவளுடைய வளைகளின் கலகல வெனும் சப்தத்திலிருந்தும், கால் சிலம்பின் கலீர் சப்தத்திலிருந்தும் அவள் எழுந்திருந்ததாகவேயறிந்தேன், 'கிட்டு' என்று மெல்லிய குரலில் கூப்பிட்டாள். நான் ஒன்றுமே பதில் பேசவில்லை; ஜன்னல் வழியாக பார்த்துக் கொண்டிருந்தேனேயொழிய, அங்கு என் கண்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. என் கவனமனைத்தும் எதன்மேலிருந்தது என்று அப்பொழுது அறியக்கூட முடியவில்லை. அச்சமயம் நான் எங்கேயோ முன் பின் தெரியாத ஓரிடத்தில் இருப்பது போன்றிருந்தது. தூரத்தில் எவனே "நாடகமே உலகம், நாளை நடப்பதை யாரறிவார்" என்று நீட்டிப் பாடிக்கொண்டு போன குரல் காற்றில் மிதந்து வந்தது. "கிட்டு!" என்று மறுபடியும் சற்று உறக்க, ஆனல் சாந்தமாய்க் கூப்பிட்டாள். நான் என்ன சொல்வதென்றே தோன்ருமல் சும்மாயிருந்தேன்.

"கிட்டு மாமா"

இப்பொழுதும் நான் ஜன்னல் பக்கம்தான் நோக்கிக் கொண்டிருந்தேன். ஜன்னல் வழியாக ஜிவ் ஜிவ்வென்று காற்று அடித்துக் கொண்டிருந்தது. காற்றில் தூக்கிக் கட்டியிருந்த ஜன்னல் படுதா படபடவென்று அடித்துக் கொண்டது. மைதிலி என் அருகில் வருவதுபோல் தோன்றிற்று. அப்பொழுது சென்றுபோன எங்கள் பழைய பிணக்கங்களெல்லாம் ஞாபகத்திற்கு வர, என் மனக் கண்ணின்முன் தோன்றி மறையும் சித்திரங்களையே கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவள் 'கிட்டு மாமா! நான் உனக்கு பிடிக்கல்லே' என்று ஒருவிதமான இனிய இரகசியம் சொல்லி இலேசாக என் காதைக் கடிப்பாள் என்று எதிர்பார்த்தேன். (அதுமாதிரி ஒரு சமயம் நடத்தியிருக்கிருள். ஒன்றுங் காணும். உடனே நான் திரும்பிப் பார்த்தேன், அங்கு மைதிலி இல்லாததைக் கண்டு ஏமாந்தே போனேன். சூறைக் காற்றிலே எழுந்து அதன் நடுவே சிக்கி அதிலேயே மோதிச் சிதறும் அலைகளைப் போல் உள்ளத்தில் எத்தனை எத்தனையோ எண்ணங்கள் எழுந்து ஆர்ப்பரித்து அழிந்தன.

நீங்கள் ஒரு மனிதனுக்கு கல்வி போதித்தால் ஒரே ஓர் ஆளுக்குப் போதித்தவராகிறீர்; ஒரு பெண்ணுக்குப் போதித்தால் ஒரு குடும்பத்துக்கே போதித்தவராகிறீர்

—டாக்டர் சார்லஸ் டி. மிக் இவர்

இந்தக் காலத்தில் மிகவும் மலிவாகக் கிடைப்பது ஒரே ஒரு சரக்கு, அதுதான் புத்தி மதி.

— டாடென் ஹோம் விட் னெஸ்

பிறகு வெகு நேரங் கழித்து கீழே இறங்கிப் போனேன். அங்கே மைதிலி மயிலைப் பழிக்கும் நடை நடந்துக்கொண்டு அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருந்தாள். என்னிடம் பேசவேயில்லை. நானுந்தான் அவளிடம் பேசவில்லை. ஆனல் அவளோடு பேசிக்கொண்டிருந்த காலத்திலாவது, என் மனம் வேறு எதிலாவது செல்லும். இப்பொழுது அப்படியில்லை. என் மனம் எப்பொழுது பார்த்தாலும் அவளையே எண்ணிக் கொண்டிருந்தது. அடிக்கடி அவள் எங்கிருக்கிருள், என்ன செய்கிருள் என்று எனக்கு பார்க்கத் தூண்டும். அவளும் என் நிலையில்தான் இருந்தாளோ என்னவோ! அடிக்கடி எதிர்பாரா விதமாய் எங்கள் விழி விரிப்புகள் மோதி விலகின.

அவளுடைய அன்பு படிப்படியாக வளர்ச்சி அடைந்து வந்தது எனக்குத் தெளிவாய்த் தெரிந்தது. சிற்சில சமயங்களில் புரியாமல் எனக்கு வியப்பையும் ஊட்டியது அவளது பிரேமை. எதையோ பேச எண்ணிய அவள் வாய் சில வேளைகளில் எதையும் பேசாமல் மௌனமாயிருக்கும். அப்போது அவளுடைய உதடுகள் மட்டும் துடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். கண்களின் பார்வையும் கோணலாயிருக்கும்.

வேலை எதுவும் இல்லாத மூளை அரக்கனின் தொழிற்சாலை தானே! அது என்ன என்னவோ எண்ணும்.

நான் அண்மையிலிருக்கும் பொழுது, எத்தனையோ தடவை என்னிடம் பேசும் தோரணையில் மைதிலி என் அத்தையிடம் பேசுவாள். "அம்மா அம்மா முன்பு வாங்கிவந்த நூல், சாயம் வெளுத்து விட்டதே. இப்பொழுது கெட்டிச் சாயமுள்ள சிகப்பு நூல் கட்டை இரண்டு வாங்கி வாயேன். அதில் பூப் போட்டால்தான் நன்ருயிருக்கும்" என்று என் காதிலும் படும்படியாகச் சொல்வாள்.

ஆனல் அந்த வார்த்தைகள் அனைத்தும் என் காதில் விழவே விழாது. என் கவனம் பூராவும், பேசும் பொழுது அவள் உதடுகள் அசையும் விதம், வில் போன்ற கரிய புருவங்களின் நெரிப்பு, ஆழங்காண முடியாத கருவிழிகளின் சுழற்சி, தாமரை மலரை யொத்த வதனத்திலே அடிக்கடி மாறி மாறித் தோன்றும் உணர்ச்சி இவற்றிலேயே லயித்திருக்கும்.

"இது என்னடி கூத்து, நான் எப்பொழுது நூல் வாங்கிக் கொடுத்தேன் உனக்கு! இது எத்தனை நாளாய் இப்படி! அவனிடம் நேரிலேயே சொல்வதற்கென்னவாம்!" என்பாள் அத்தை.

அதே சமயத்தில் மைதிலியின் பார்வை என் பக்கம் திரும்பும். நான் அதை எதிர்பார்த்து

என் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொள்வேன்.

நாளுக்கு நாள் மைதிலி, இளமையின் வசந்தம் மருவ, இயற்கை எழில் கண்களைப் பறிக்க, செயற்கைச் சேற்றை வாரிப் பூசிக் கொள்ளாமல், ஆடம்பரமற்ற உடை, அன்பு கனிந்த உள்ளம், மாசுமருவற்ற நடத்தை இவைகளுடன் பருவப் பூரிப்பும் சேர்ந்து மிளிரும் என் இலட்சியப் பெண்ணாகவே மாறிக் கொண்டுவந்தாள்.

அன்றொரு நாள், கால் பெரு விரல்கள் நிலத்தில் கோலம் போட, அடக்கமும் கனிவும் ததும்பும் கருவிழிகள் ஒரு அபூர்வமான பிரகாசம் கொண்டு ஜ்வலிக்க, இமையோரத்தில் வியர்வை முத்துகள் பிரகாசிக்க அவள் நின்றது பார்ப்பதற்கு மிகவும் லாவண்யமாயிருந்தது. அந்தத் தோற்றத்தில் மதுவுண்ட வண்டு போல் மயங்கிப்போன நான் மெதுவாக அவளருகில் நெருங்கிவிட்டேன். உடனே எங்களிருவருக்குமிடையி லிருந்த பிணக்கம் ஞாபகத்திற்கு வர, எத்தனையோ சிரமப்பட்டு என்னையே நான் விடுவித்துக்கொண்டேன்.

அப்பொல்லாப் பிணக்கம் எங்களிருவருக்குமிடையில் பெரும் ஆழமான அகழாக நின்றது. அதை அகழி என்று சொல்வது கூட தவறு. கொந்தளிக்கும் கருங்கடல் என்று சொல்வது தான் சரி. அதன் ஒரு கரையில் நான் இருந்தேன். மற்றொரு கரையில் மைதிலி நின்றாள். ஆனால் இருவருமே மனம் துடித்தோம்; ஒருவர்க்கொருவர் ஏங்கித் தவித்தோம்; இருவருமே இன்பத் தொல்லையில் தோய்ந்து அல்லலுற்றோம்; மனதில் நிம்மதியில்லை. உயிர் வாழ்ந்திருப்பதும், சாவதும் ஒன்றுதான் என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. செத்துச் செத்துப் பிழைப்பது ஒரு பிழைப்பா! காதல் பாதையிலே சென்று இருவருமே இறந்து, அமரர்களாகிவிடுவது எத்தனையோ மேலானதாயிற்றே! ஆனால் சில தினங்களில் என்பிரிய மைதிலி உடம்புக்கு வந்து படுத்துவிட்டாள்.

மனம் என்ன என்னவோ எண்ணியது. அவள் அறையை அணுக அணுக என் கால்கள் ஒன்றோடு ஒன்று பின்னிக் கொண்டன. நாக்கு உலர்ந்து விட்டது. தலையில் ஏதோ ஒரு தாங்க முடியாத சுமையை ஏற்றிவைத்திருப்பது போல் எனக்குப் பட்டது. எப்படியோ என்னையே சமாளித்துக் கொண்டு அவ்வறையினுள் நுழைந்தேன். என்ன கொடுமை! கட்டிலில் வாடின மலரைப் போல் கிடந்தாள் மைதிலி. அப்பொல்லாத நோய் அவளை பேசவிடாமல் அவள் நாக்கை வேறு இழுத்துவிட்டதே! மிரள மிரள விழித்தாள்; கண்களில் நீர் வழிந்தது. எண்ணற்ற எண்ணங்கள் அவள் நெஞ்சின் ஆழத்தில் கொந்தளித்து எழுந்து அலைமோதுகின்றன என்பதை நான் உணர்ந்துக்கொண்டுவிட்டேன். தக்காளிப்பழம் போன்ற அவள் முகம் வெளுத்து எலுமிச்ச நிறத்துக்கு வந்துவிட்டதே!

அந்த மையிருட்டில் மருந்து வாங்கி வர நானே புறப்பட்டேன்.

மருந்தும் கையுமாக மைதிலியிடம் ஓடிவந்தேன். வழக்கமாயிருந்த முக்கலும் முனகலும் நின்று அவளுடைய முகத்தில் ஒரு அலாதி தேஜஸ் பரவியதைக் காண நான் பயந்தே போய்விட்டேன். அணையும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பார்களே, அதுபோல மைதிலியின் முகத்தின் பொலிவும் விபரீதத்தை விளைவித்துவிடுமோ என்று எண்ணும்போது என்னையறியாமலேயே மெய் சிலிர்த்தது எனக்கு. நெஞ்சை யழுத்திப் பிடித்துக்கொண்டு மைதிலியின் கட்டிலின் ஓரமாக உட்கார்ந்தேன். மெதுவாக அவள் சிரசைத் தூக்கி என் கரத்தில் வைத்துக்கொண்டு, சிறுகச் சிறுக மருந்து புகட்டினேன். ஒரு விணர்கூட சரியாக விழுங்கியிருக்க மாட்டாள். அதற்குள் தன் கண்களை பட்டென்று மூடிக்கொண்டு என் கரத்திலேயே சாய்த்துவிட்டாள் தலையை. உலகமே கிறுகிறுவென சுற்றுவது போலிருந்தது எனக்கு. "மைதிலி" என்று கதறினேன். ஆனால், இனி அவள் என்னுடன் பேசுவாளா?

எத்தனையோ கதைகளில் முனிவரும் மாந்திரீகர்களும் மாறிமாறி வருகிறார்களே, அவர்களில் ஒருவராவது வந்து என் பிரிய மைதிலியை எழுப்பிக் கொடுக்கக் கூடாதா! எப்படி மறப்பேன் என் மைதிலியை! அப்படியே மறக்க எண்ணினாலும் அந்த, அந்த பொருள்களிலும் அவள் எப்படியோ வந்து ஒன்றிவிடுகிறாளே!



விமர்சகன் யார்?

(டி. கே. ஷண்முகம்)

"மனிதன்" படத்தைத் தயாரித்த டைரக்டர் ராம்நாத்தின் திறமையைப் பாராட்டி டி. கே. எஸ் சகோதரர்கள் அளித்த ஒரு விருந்தின் போது திரு. டி. கே. ஷண்முகம் நிகழ்த்திய சொற்பொழிவின் சில பகுதிகளைக் கீழே தந்திருக்கிறோம். காரசாரமான அந்தக் கருத்துக்கள் சரிதானா? அது நீங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்!

கலைஞர்களைப் போற்றும் நாட்டிலேதான் கலைஞர்கள் தோன்றுவார்கள். நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் உயர்ந்த கலைஞர்களுக்கு உரிய சமயத்தில் நாம் திறமறிந்து புகழ் மாலை சூட்டத் தவறி விடுவோமானால் புத்தம் புதிய கலைஞர்கள் தோன்றுவதற்கிடமில்லாது போய்விடும். போலிகள் மலிந்துவிடுவார்கள். கலைஞர்கள் மறைந்து கொலைஞர்களே காட்சியளிக்கும் நிலை வந்துவிடும்.

நமது நாட்டிலே விமர்சனத் துறை இன்னும் நன்கு வளர்ச்சி பெற வேண்டும். மக்களின் ரசிகத் தன்மையை உயர்த்துவதும், அவர்களின் கற்பனா சக்தியை வளர்ப்பதும் பத்திரிகை விமர்சனங்கள். ஆகவே, அவற்றின் பொறுப்பு மகத்தானது. எப்போதுமே அப்பட்டமாக விஷயங்களைச் சொல்வது கலையல்ல. குறிப்பாக உணர்த்தி, மக்கள் தங்கள் கற்பனையையும் பயன்படுத்தி ரசிக்கும் முறையிலே செயல்படுத்திக் காட்டுவது தான் கலை.

டெக்னிக் என்றால் என்ன டெக்னிக்?...... நுணுக்கம் என்றால் என்ன நுணுக்கங்கள்....? இவற்றைத்தான் விமர்சகர்களிடமிருந்து கலைஞர்களும் ரசிகர்களும் எதிர்பார்க்கிறார்கள். ஒரு நடிகர் தான் எடுத்துக் கொண்ட பாத்திரத்தை ஒழுங்காக நடித்திருக்கிறாரா என்று கவனிப்பதில்லை விமர்சகர். "அவருக்கு இந்தப் படத்திலே நடிப்பதற்கு சந்தர்ப்பங்களில்லை. அதனால் நடிப்பு சோபிக்கவில்லை" யென்று இரண்டே வரிகளில் எழுதி முடிவு கட்டிவிடுவது, படத்தின் தரத்தைப் பற்றி ஆராய்ந்து எழுதத்தெரியாவிட்டால் "ஜனரஞ்சகமான படம்" என்று ஒரே வரியில் முடித்து விடுவது இதைப் போன்ற விமர்சனங்களைத் தான் அதிகமாகப் பார்க்க முடிகிறது. ஒரு படத்தில் வரும் சிறப்புகளுக்கோ, குறைகளுக்கோ யார் பொறுப்பாளி யென்ற உண்மைகூட பெரும்பாலான விமர்சகர்களுக்குத் தெரியவில்லை. தெரியவில்லையென்ற நிலையில் அவர்கள் அவற்றைப் பொதுவாகக் குறிப்பிடுவது மில்லை. டைரக்டர், ஒளிப் பதிவாளர், ஒலிப் பதிவாளர், எடிட்டர், நடிகர், பட முதலாளி—இவர்களில் ஒருவரின் செயல்களை மற்றவர் மீது சுமத்திக் குறை கூறவும் விமர்சகர்கள் தயங்குவதில்லை.

நடிகர்கள் உங்கள் முன்னே நிற்பவர்கள். டெக்னீஷியன்கள் திரை மறைவிலே நின்று தங்கள் செயல்களை மட்டுமே வெளிப்படுத்துபவர்கள். படத்தின் வெற்றி தோல்வியில் பெரும் பங்கு பெறுபவர்கள் டெக்னீஷியன்கள். அவர்களைத் தான் விமர்சகர்கள் பெரும்பாலும் மறந்து விடுகிறார்கள்.

மூலக் கதை:

அல்போன்ஸ் தோதே

தமிழாக்கம்:

பி. கோதண்டராமன்

சோமபானம்..!

[அல்போன்ஸ் தோதே (1840–97) பெயர்பெற்ற பிரெஞ்சுக் கதாசிரியர்களில் ஒருவர். அவர் தம் நாட்டின் தென் பிரதேசத்தையும் அதில் வாழும் மக்களையும் தம் சொந்தக் கருத்துக்கள், உணர்ச்சிகளைப் புகுத்தாமல் இயற்கையாகவும் அழகாகவும் அடக்கமாகவும் கண்டது கண்டபடிச் சித்தரித்தார். அவர் பெரும்பாலும் ஏழை எளியவர், அழுத்தப்பட்டவர், வாழ்க்கையில் தோல்வி அடைந்தவர் ஆகியோரை ஹாஸ்யச் சுவையும் கருணாரசமும் ததும்ப விவரித்தார். அவரைப் பிரெஞ்சு டிக்கன்ஸ் எனச் சிலர் கூறுவர். ஹாஸ்யம் மலிந்த இக் கதை "என் மாவு மில்லினின்று எழுதிய கடிதங்கள்" என்ற சிறு கதைத் தொகுதியினின்று எடுக்கப்பட்டது.]

"நண்பரே, இதைப் பருகிப் பாருங்கள்; அப்புறம் நீங்களே சொல்வீர்கள்."

முத்துக்களை ஒவ்வொன்றாக எடுத்து மிகக் கவனமாக எண்ணும் வியாபாரியைப் போல, கிராவ்ஸன் பாதிரியார் பசும் பொன்னைப் போன்று பளபளவெனப் பிரகாசித்த சூடான மதுவினின்று சொட்டுச் சொட்டாக இரண்டு துளிகள் எனக்கு ஊற்றிக் கொடுத்தார். பருகியதும் என் உத்சாகம் மிகுந்தது.

"இது கோஷர் தந்தையாரின் சோமபானம். இது எங்கள் புரொவான்ஸ் பிரதேசத்திற்கு இன்பமும் ஆரோக்கியமும் அளிக்கின்றது." என்றார் பெருமையுடன் அந்த நல்லாயர். 'உங்கள் மில்லிலிருந்து கூப்பிடு தூரத்தில் உள்ள பிரேமோந்திரே மடத்தில் இது தயாரிக்கப்படுகிறது. இந்த பானத்தைப் பற்றிய கதை எவ்வளவு விநோதமானது என்பதை நீங்கள் அறிவீராயின்! கேளுங்கள் கொஞ்சம்.

மடாதிபதி சிறிது நாஸ்திகமானதும் அபசாரமானதுமான ஒரு கதையை, கெட்ட எண்ணமோ, கவடோ இன்றி இவ்விதமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

* * *

வெள்ளைத் தந்தையர் எனப் புரொவான்ஸ் மக்களால் அழைக்கப்படும் பிரேமோந்திரே மடாலயத்தினர் இருபது வருஷங்களுக்கு முன் பெருந்துன்பமொன்றில் ஆழ்ந்து அவதிப்பட்டனர். அக்காலத்தில் அவர்கள் வசித்து வந்த வீட்டைப் பார்த்திருந்தால் நீங்கள் மிகவும் மனம் நொந்து போயிருப்பீர்கள்.

கட்டிடத்தின் பெரிய சுவரும்

உலக இலக்கியம்:

பிரெஞ்சுக் கதை

கோபுரமும் இடிந்து கிலமாயிருந்தது. மடத்துத் தாழ்வாரத்தைச் சுற்றிலும் புற்பூண்டுகள் முளைத்திருந்தன. சிறு தூண்கள் வெடித்திருந்தன. புரைகளிலுள்ள முனிவர் சிலைகள் இடிந்து விழுந்திருந்தன. ஜன்னற் கண்ணாடிகள் ஒன்று கூடச் சரியான நிலையில் இல்லை. ஒரு கதவும் நேராக நிற்கவில்லை. ரோன் நதியிலிருந்து அடித்த பலமான காற்று மெழுகு வர்த்திகளை அணைத்தது; ஜன்னல் சட்டங்களை உடைத்தது; தீர்த்தத் தொட்டியிலிருந்த நீரை இறைத்தது. மணியில்லாத மடத்து மணிக் கூடு விசனக் காட்சி அளித்தது. மணி வாங்கப் பணமில்லாத சாமியார்கள் காலை வந்தனத்தின் போது வாதுமை மரக்கட்டைகளைத் தட்டி ஒலி செய்தனர்.

ஐயோ பாவம்! அந்த வெள்ளைச் சாமியார்கள் திவ்விய நற்கருணைத் திருநாள் ஊர்வலத்தில் ஒட்டுப் போட்ட பெருங் குல்லாய்கள் அணிந்தும், முகம் வெளுத்தும், உடல் துவண்டும், வயிறு காய்ந்தும் பரிதாபமாகச் சென்ற காட்சியும், அவர்களுக்குப் பின்னால், மடத்துத் தலைவர் தங்கமுலாம் அழிந்து போன திருச்செங்கோல் தாங்கியும், பூச்சியடித்த கிரீடக் குல்லாய் தரித்தும், வெளிச்சத்தில் தம்மைக் காட்டிக்கொள்ள வெட்கியதுபோலத் தலைகுனிந்தும் சென்ற கோலமும் இன்னும் என் மனக் கண் முன் நிற்கின்றன. வரிசையாக நின்ற சங்கச் சகோதரிகள் அக்காட்சியைப் பொருமல் கண்ணீர்விட்டனர். கொடி தூக்கிச் சென்றவர்கள் வறுமையுற்ற இத்துறவிகளைக் காட்டி கூட்டமாகச் செல்லும் எதூர்னே பட்சிகளைப் போலல்லவா இவர்கள் இளைத்துள்ள

னர் எனத் தமக்குள் பரிகாச மாகப் பேசிக் கொண்டனர். தாம் இருந்துவந்த நிலையில், மடத்தைவிட்டு வெளியுலகில் திரிந்து தத்தம் இரையைத் தேடிக் கொள்வதே மேல் என்று தோன்றும் நிலைக்கு அத் துறவிகள் வந்துவிட்டனர்.

குருமார் கூடும் காலையில் ஒரு நாள் அந்தப் பிரச்னை விவா திக்கப்பட்டது. சகோதரர் கோஷர் மடத்துச் சிரேஷ்டரி டம் தம் யோசனை கூற அனு மதி கேட்டதாக அறிவிக்கப்பட் டது. கோஷர் மடத்து ஆயர், நாள்தோறும் மடத்தின் மெலிந்த பசுக்கள் இரண்டை யும் மடத்தின் நடை சாலை களில் ஓட்டிச் சென்று, கற் பாதையின் பிளவுகளில் முளைத்த புற்பூண்டுகளை மேய விடுவதே அவரது வேலை. அவர் **பேர** நாட்டில் **பேகான்** என்னும் அத்தைப் பாட்டியின் ஆதரவில் 12 வயது வரையில் வளர்ந்து, பின்னர் மடத்துத் துறவிகளின் பாதுகாப்பை அடைந்தவர். அந்தத் துரதிருஷ்டம் வாய்ந்த மனிதர் மடத்தில் மாடு மேய்ப் பதையும், பரமண்டல மந் திரத்தை ஜபிப்பதையும் தவிர வேறொன்றையும் கற்றதில்லை. அவர் மந்த புத்தியுடையவர்; மனோராச்சியத்தில் சஞ்சரிப்ப வர். ஆனால், பக்தி வைராக்கிய முள்ள கிறிஸ்தவர்; புஜவலி மிகுந்தவர்; கட்டுப்பாடுகள் உடையவர். இக்காவி வேஷத் தில் அவர் சௌக்கியமாகவே காலக்ஷேபம் செய்தார்.

ஒரு நாள், கோஷர் குருமார் கூடும் சாலையில் மட்டித்தன மாக நுழைந்தார். காலைப் பின் னால் வைத்துக் கொண்டே, மடத்துத் தலைவர், மேன்பாட் டுக் குருக்கள், பொக்கிஷதார் ஆகியோரனைவரையும் வணங் கினார். எல்லோரும் கொல் லென நகைத்தனர். வெளுத்த முகமும் ஆட்டு மீசையும் பைத் தியக்காரப் பார்வையும் கொண்ட ஒருவன் சபையில் வந்தால் எப்படி இருக்குமோ அப்படியே இருந்தது அவரது வருகை. ஆகவே கோஷர் தமக் குக் கிடைத்த வரவேற்பைப் பற்றிக் கவலைப்படவில்லை.

ஆலிவ் விதைகள் கோத்த ஜப மாலையை முறுக்கிக் கொண்டே தாழ்ந்த குரலில் அவர் சொன்னார்: "வணக்கத் திற்குரிய பெரியீர், என் மூளை காலிதான். ஆயினும் மண் டையை உடைத்துப் பார்த்த தில், கஷ்டத்தினின்று நம்மை மீட்கவல்ல வழியொன்று புலப் பட்டிருக்கிறது. நான் சொல் வதைக் கேளுங்கள். பேகான் அத்தைப் பாட்டியை நீங்கள் அறிவீர்கள். நான் சிறுவனா யிருந்தபோது அவள்தான் என்னை வளர்த்தாள் (அந்த வஞ்சகியின் ஆத்மாவைக் கட வுளே காப்பாற்ற வேண்டும்! அவள் குடிப்பாள். குடித்தபின் டப்பான் பாட்டுக்கள் பாடு வாள்!) அவள் உயிரோடிருந்த போது, மலைச் சாரலில் வளர்ந்த மூலிகைகளை நன்கு அறிந்திருந்தாள். அவளுடைய இறுதி நாட்களில் ஆல்ப்ஸ் குன்றுகளில் நாங்கள் சென்று பறித்துவந்த ஐந்நூறு வித மூலிகைகளைக் கலந்து பிழிந்து ஒப்பற்ற பானம் ஒன்றைச் செய்தாள். அது வெகு காலத் திற்குமுன் நடந்தது. ஆயினும், அகஸ்தன் முனிவர் உதவி யாலும், நம் மடாதிபதியின் அனுமதியாலும், அந்த அற்புத மதுரசத்திற்குரிய சேர்க்கைப் பொருள்களைக் கண்டு பிடிக்க எண்ணுகிறேன், அம் மதுரசத் தைப் புட்டியில் ஊற்றி நல்ல விலைக்கு விற்றால் நம் சமூகத்

துக்கு நல்ல வருவாய் கிடைக்கும்.''

அவர் இங்ஙனமாகச் சொல்லி முடித்தவுடனேயே மடத்துத் தலைவர் எழுந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டார். மேன்பாட்டுக் குருமார் அவர் கரங் குலுக்கினர். மற்றெல்லோரையும்விட மிகவும் உள்ளம் நெகிழ்வுற்ற பொக்கிஷதார், மரியாதையுடன் ஓரம் தைத்த அவர் பெருங்குல்லாவை முத்தமிட்டார். பின்னர் ஒவ்வொருவரும் அவரிடம் வந்து ஆலோசனை கேட்டனர். சோமபானம் செய்வதிலேயே கோஷர் கவனஞ் செலுத்துவதன் பொருட்டு பசுக்களை மேய்க்கும் வேலையை அவரிடமிருந்து எடுத்து **திராஸிபூ**லிடம் ஒப்படைப்பதெனச் சபையினர் முடிவு செய்தனர்.

* * *

அத்தைப் பாட்டியின் மருந்து கூட்டும் முறையை அவர் எவ்விதம் கண்டுபிடித்தார்? அவர் என்னென்ன முயற்சிகள் செய்தார்? இராத் தூக்கமில்லாமல் எத்தனை நாள் கழித்தார்? இவற்றைப் பற்றியெல்லாம் நாட்டு வரலாறு யாதொன்றும் கூறவில்லை. இது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. வெள்ளைத் தந்தையாரின் ஜீவரசம் பிரதேச மக்களிடையே பிராபல்லியமடைந்துவிட்டது. **கோந்தா** முழுதும், **ஆர்ல்** பிரதேசமெங்கும், ஒரு களஞ்சியத்திலேனும், புரோவான்ஸ் விருதுகள் போட்டும், வெள்ளிக் குறிப்புச் சீட்டில் பரவச நிலையிலுள்ள துறவியொருவரின் படத்துடன் முத்திரையிட்டும் விளங்கும் சிறு புட்டியொன்று காணுமலிருப்பதில்லை. சோமபானம் பெரும் பழக்கத்தில் வந்துவிட்டது பிரேமோந்திரே மடத்தில் செல்வம் குவியவே, பஸோம் கோபுரம் மீண்டும் எழுந்தது. மடத்துத் தலைவரின் சிரசில் புதுக் கிரீடக் குல்லாய் காட்சியளித்தது. கோயிலெங்கும் வேலைப் பாடமைந்த அழகிய ஜன்னற் கண்ணுடிகள் காணப்பட்டன. பாஸ்க் பண்டிகையின் போது ஒரு நாட் காலை மணிக் கூட்டில் சின்னதும் பெரிதுமான பலவகை மணிகள் இசையுடன் அடித்துப் பேரொலி செய்தன.

மடத்துக் குருமார்கள் சகோதரர் கோஷரை அதன் பிறகு பரிகாசமோ கேலியோ செய்வதில்லை. அதற்கு நேர் மாருக அவரை **உயர்திரு கோஷர் தந்தையார்** என்றும் மகா மேதை படைத்தவரென்றும் சர்வசாஸ்திர ஞானியென்றும் போற்றத் தலைப்பட்டனர். அவரும் சின்னஞ் சிறு காரியங்களில் கருத்து செலுத்தாமல் சாராயம் காய்ச்சும் ஆலையிலேயே நாளெல்லாம் கழித்தார். முப்பது துறவிகள் மலைகளிலெல்லாம் சுற்றியலைந்து மூலிகைகள் கொணர்ந்தனர். சாராய ஆலை இடிந்துபோன பழைய கோயில் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்தது. மடத்துத் தலைவரும் அதில் நுழைய உரிமை பெற்றிருக்கவில்லை. மடத்தினர் அதை அற்புத ரகசிய இடமாகக்கருதினர். அதில் சாம்பல் வர்ண, ரோஜா வர்ண ரசவாத குப்பிகள், பிரமாண்டமான வாலைகள், வெள்ளையும் சிவப்பும் கலந்த பளிங்குக் கற்கள், கும்மட்டி, மது நிறுக்கும் கருவி இவை சூழ அமர்ந்திருந்தார் மாந்திரீகனின் தாடியுடன் விளங்கிய கோஷர் சாமியார்.

சூரியன் அஸ்தமித்தது. கடைசி திரிகால ஜபமணி அடித்தது. அது சமயம் ஆலை

யின் மர்மக் கதவு மெதுவாகத் திறந்தது. பூஜ்யர் கோஷர் பூஜைக்காகக் கோயில் சென்ருர். அவர் மடத்தைத் தாண்டிச் சென்றபோது அவருக்களிக்கப் பட்ட வரவேற்பைக் காண வேண்டுமே! அவர் சென்ற வழியெல்லாம் சகோதரர்கள் இருமருங்கிலும் வேலிபோல நின்றனர்.

''சுட்! அவர் அந்த ரகசியத்தை அறிவார்!'' என்ருர் ஒருவர். பொக்கிஷதார் கோஷரைப் பின் தொடர்ந்து சென்று தலைகுனிந்து பேசினர். இத்தகைய இச்சகத்தினிடையே நம் தந்தையார் முகத்தைத் துடைத்துக் கொண்டே சென்ருர். அகன்ற விளிம்புள்ள அவருடைய மும்மூலைத் தொப்பி பின் பக்கமாகச் சாய்ந்து சோதி வட்டமெனத் திகழ்ந்தது. தம்மைச் சுற்றிலும், ஆரஞ்சு நடப்பட்டிருந்த முற்றத்தையும், புதுக் காற்றுக் காட்டிகள் சுழன்ற நீலக் கூரைகளையும், வெள்ளையடித்த மடத்தில் புத்தாடை அணிந்து அமைதியான முகத்துடன் இரண்டு இரண்டு பேராக அணிவகுத்துச் சென்ற மேன் பாட்டுக் குருமார்களையும் அவர் பார்த்துக் கொண்டே சென்ருர்.

''இவை யாவும் என்னல் தானே உண்டாயின?'' என்ருர் தமக்குள் அவ் உயர்திரு பூஜ்யர். அந்த எண்ணம் வந்த ஒவ்வொரு தடவையும் ஆணவம் மேலிட்டது.

பாவம்! அவர் அதற்குரிய தண்டனையை அடைந்தார். அதை நீங்கள் அறியப்போகிறீர்கள்.

* * *

ஒரு நாள் மாலை பூஜை நடந்து கொண்டிருந்தபோது அவர் அபூர்வ மனக் கலக்கத்துடன் கோயிலுக்கு வந்தார். அவர் முகம் சிவந்திருந்தது. பெருமூச்சு விட்டார். தலைப் போர்வை அலங்கோலமாயிருந்தது. மனம் குழம்பிய நிலையில் மந்திரிக்கப்பட்ட தீர்த்தத்தில் கையை முழங்கை வரையில் விட்டார். தாமதித்து வந்ததனல் ஏற்பட்ட நெகிழ்ச்சியே காரணமெனச் சிலர் முதலில் கருதினர், ஆனல், அவரது போக்கு விபரீதமாயிருந்தது. பிரதான பீடத்தை வணங்குவதற்குப் பதிலாகப் பல குழல் வாத்தியத்துக்கும், பிரசங்காசனத்துக்கும் பெரு வணக்கம் செய்தார். புயற் காற்றின் வேகத்தில் அவர் கோயிலைக் கடந்து சென்ருர். தம் மடங்கு மரத்தாசனத்தை அடையச் செல்லுகையில் பாடுவோரின் இடத்தில் இங்குமங்குமாக ஐந்து நிமிடம் திரிந்தார். பிறகு, உட்கார்ந்து பக்திப் பரவசத் தோற்றத்துடன் சிரித்துக் கொண்டே வலதும் இடதுமாகச் சாய்ந்தார். இதையெல்லாம் பார்த்தவரிடையே கோயிற் சாலைகள் மூன்றிலும் ஆச்சரிய முணுமுணுப்பு ஏற்பட்டது.

''கோஷர் தந்தையாருக்கு என்ன வந்துவிட்டது? கோஷர் தந்தையாருக்கு என்ன வந்துவிட்டது?'' என ஜப புஸ்தகத்திஞடே குசுகுசுவெனப் பேசிக் கொண்டனர்.

பொறுமையிழந்த மடத் தலைவர் நிசப்தம் நிலவச் செய்யத் தம் செங்கோலைக் கற்பலகையில் விழச் செய்தார். பாடுகிறவர் ஸ்தலத்தில் ஞான சங்கீதம் தொடர்ந்து ஒலித்தது. ஆனல், பிரதி பாடலாகிய திருவாக்கியத்தில் உத்சாகம் காணேம்.

'ஆவ்விரம்' பாட்டின் நடுவே திடுமெனக் கோஷர் தம் மடங்கு மரத்தாசனத்தில் குப்புற விழுந்தார். உரத்த கணீரென்ற குர

லில் அவர் இங்ஙனம் பாடவாரம்பித்தார் :

"பாரிஸ் மாநகரில் வெள்ளைத்
தந்தையார் ஒருவர் உளர்
பதாத்தேன், பதாத்தன்,
தராபேன், தரபான்"

பொதுவாக அனைவரிடமும் பீதியொன்று ஏற்பட்டது. எல்லோரும் எழுந்தனர். "அவனைத் தூக்கிச்செல்லுங்கள். அவனுக்குப் பேய் பிடித்திருக்கிறது!" என்றனர்.

மேன்பாட்டுக் குருமார் சிலுவைக்குறி செய்துகொண்டனர். மேற்றிராணியாரின் செங்கோல் ஆட்டங் கொடுத்தது. ஆனால், கோஷர் எதையும் பார்க்கவுமில்லை, கேட்கவுமில்லை. அவர் பேய் பிடித்தவர் போல ஆடினார். தம் "பதாத்தேன் தரபான்" பாட்டைத் தொடர்ந்து உரக்கப் பாடினார். வலிமை வாய்ந்த துறவிகள் இருவர் அவரைப் பாடும் இடத்திலுள்ள சிறு கதவின் வழியாகப் பலவந்தமாக இழுத்துச் செல்லவேண்டியிருந்தது.

அடுத்த நாள் காலை அந்தத் துரதிருஷ்ட மனிதர் மடத்துத் தலைவரின் செபக்கூடத்தில் முழந்தாளிட்டுக் கண்ணீர் விட்டுக்கொண்டே தாம் செய்த குற்றத்தைக் கூறினார். வயிற்றில் அடித்துக்கொண்டே, "ஆண்டவரே, அந்தச் சோமபானமே என்னைக் கலக்கிவிட்டது" என்றார்.

அவர் இவ்வளவு தூரம் வருந்தி கழிவிரக்கம் கொண்டதைக் கண்ட நல்ல சுபாவமுள்ள மடத்துத் தலைவர் உள்ளம் நெகிழ்ந்தார். "தந்தை கோஷரே, போனது போகட்டும்; அமைதியாக இரும்; பகலவனைக் கண்ட பனிபோல இன்

> எப்படியிருந்தாலும் கல்யாணம் செய்துக் கொள். நல்ல மனைவி கிடைத்தால் சந்தோஷமாய் இருப்பாய்; மோசமான மனைவி கிடைத்தால் நீ ஞானியாவாய்.
>
> —சாக்ரட்டீஸ்

னல்கள் யாவும் நீங்கிவிடும். ஆகக்கூடி, நீங்கள் நினைக்கிறபடி இந்த ஆவலாதி அவ்வளவு பிரமாதமான விஷயமல்ல. எத்தனையோ பாட்டுக்கள் இதைவிடக் கேவலமாக இருந்திருக்கின்றன. ஊம்! புதுத் துறவிகள் இதைக் கேட்டிருக்க மாட்டார்கள் என்றே எண்ணுகிறேன். சரிதான், உமக்கு இதெல்லாம் நேர்ந்ததெப்படி! சொல்லுங்கள். சோமபானத்தைப் பரிட்சை பண்ணி பார்த்ததிலிருந்துதானே? நீங்கள் கொஞ்சம் அதிகமாகச் சாப்பிட்டிருப்பீர்கள். ஆமாம், எனக்குத் தெரிகிறது. வெடிமருந்து கண்டுபிடித்த சகோதரர் ஷ்வார்ட்ஸைப் போலவே உங்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொருளுக்கு நீங்களே பலியானீர்கள். ஆமாம். தோழரே, இப்பயங்கரபானத்தை உங்கள் மீதே பரிட்சை செய்துகொள்ள வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டார்.

"ஆண்டவரே, துரதிருஷ்ட வசமாக, நீங்கள் சொன்னபடியே நடந்தது. சோதிக்கும் கருவி மதுவின் திடத்தையும் அளவையும் காட்டவல்லது. ஆனால் மதுவுக்குக் கடைசி மணுக்கும் சுவையும் கொடுக்க என் நாவையே நம்ப வேண்டியிருக்கிறது."

"ஆ! நல்லது. ஆனால் நான் சொல்கிறதைக் கொஞ்சம் கேளுங்கள். தேவையின் காரணமாகச் சுவைக்கையில் அது நல்லதென்று உமக்குத் தோன்றுகிறதா? அதனால் உமக்குச் சந்தோஷமேற்படுகிறதா?"

"அந்தோ! ஆமாம் ஆண்டவரே" என்றார் அந்த துரதிருஷ்ட தந்தையார். அவர் முகமெல்லாம் சிவந்தது. "இரண்டு நாட்களாக நம் சோமபானத்திற்கு விசேஷச் சுவையொன்று கொடுத்து வருகிறேன். அதுவே இப்பொல்லாத வினையைச் செய்துவிட்டது. ஆகவே இனிமேல் சோதிக்கும் கருவியொன்றையே நம்பியிருக்கப் போகிறேன். மது நேர்த்தியான சுவை பெருவிடின் போகட்டுமே."

மடத்துத் தலைவர் குறுக்கிட்டு, "வேண்டாம், அப்படியொன்றும் செய்துவிடாதீர். வாடிக்கைக்காரர்கள் அதிருப்தியடையக் கூடாது. நீங்கள் இனி ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அவ்வளவே, இதோ பாருங்கள், சுவை கண்டறிய எவ்வளவு வேண்டும்? பதினைந்து அல்லது இருபது துளிகள் போதுமா? இருபது துளிகள் என்றே வைத்துக் கொள்வோம். இருபது துளிகளுடன் உங்களைப் பற்றிக் கொள்ள அந்தப் பேய்க்கு அதிக சாமர்த்தியம் வேண்டும். ஆயினும், தற்செயலாக ஏதேனும் நேர்ந்துவிடலாம். எதற்கும் நீங்கள் கோயிலுக்கு வரவேண்டியதில்லை. சாராய ஆலையிலேயே நீங்கள் உங்கள் மாலைப் பிரார்த்தனையை நடத்திக்கொள்ளலாம். நல்லது, உயர்திருவாளரே, நீங்கள் இப்போது அமைதியாகப் போகலாம். துளிகளை மட்டும் கணக்காக எண்ணிச் சாப்பிடுங்கள்" என்று எச்சரிக்கை செய்தார்.

அந்தோ! அந்த பாவி சாமியார் துளிகளை எவ்வளவு கவனமாக எண்ணினபோதிலும் பயனில்லை. பேய் அவரைப் பற்றியது. அது அவரை இலேசில் விடவில்லை.

* * *

ஒரு நாள் சென்றது. யாவும் சரியாகவே நடந்தது. தந்தையார் அமைதியாகவே இருந்தார். பிறகு அவர் கணப்பை மூட்டி வாலையை ஆயத்தம் செய்தார். பசுமையாயும், கருக்கறுத்ததாயும், வாசனை வீசுவதாயும், வெயிலில் நன்கு காய்ந்தும் இருந்த மூலிகைகளைத் தேர்ந்தெடுத்தார். மாலையில், அம்மூலிகைகளின் சாரத்தை நன்றாகக் கலந்து வைத்தார். பெரிய சிவப்புச் செம்புச் சட்டிகளில் அப்பானம் வெதுவெதுப்பான நிலையடைந்தபோதே அவருடைய வேதனை ஆரம்பித்தது.

பதினேழு, பதினெட்டு, பத்தொன்பது, இருபது! துளிகள் தண்டிலிருந்து தங்கமுலாம் பூசின வெள்ளிக் கிண்ணியில் மெல்லமெல்ல விழுந்தன. அந்த இருபது துளிகளையும் தந்தையார் ஒரே மூச்சில் விழுங்கினார். அதனால் அவர் சுவையறியவில்லை. இன்பமும் அனுபவிக்கவில்லை. இருபத்தியோராம் சொட்டே சுவையையும் ஆசையையும் எழுப்பியது. ஆகா! அந்த இருபத்தியோராம் துளியை என்னென்று சொல்வது! மையலில் அகப்பட்டுக் கொள்ளாதிருக்க அவர் சோதனைச் சாலையின் கோடியில் போய் முழந்தாளிட்டுப் பரமண்டல மந்திரத்தை செபிப்பதில் ஆழ்ந்தார். ஆனால், இன்னும் சூடாயிருந்த அந்த பானத்தி

விருந்து ஆவி எழுந்து பலமான வாசனை வீசியது. அது அவரைச் சுற்றிலும் பரவியது. பானம் அடங்கிய சட்டியின் பால் கவனம் இழுக்கப்பட்டது. பானம் தங்கமயமாகச் சொலித்தது. நாசித்துவாரங்களை அகன்று திறந்தவண்ணம் அதன் மீது குனிந்து பார்த்தார். தண்டால் மெல்ல அதைக் கலக்கினார். பளபளத்த சிற்றலைகள் சுழன்றன. பானத்தின் பரப்பில் அத்தை பேகானின் பளபளத்த புன்னகை செய்த கண்கள் தம்மைப் பார்ப்பது போலிருந்தது!

''பாதகமில்லை. மேலும் ஒரு துளி சாப்பிடுவோமே!''

ஒரு துளி, பிறகு மற்றொரு துளி! இப்படி அந்தத் துரதிருஷ்ட மனிதர் தம் கிண்ணி நிறைய ஊற்றினார். பிறகு பெரிய சாய்வு நாற்காலியில் தொப்பென விழுந்தார். உடல் சோர்ந்தது. விழி பாதி மூடியது. இக்கோலத்தில் பாவமாகிய பானத்தைக் கொஞ்ச கொஞ்சமாக ருசி பார்த்தார். ''ஆ! படுகுழியில் விழுகிறேன்! படுகுழியில் விழுகிறேன்!'' என்று மனோ வேதனையுடன் மெல்ல சொல்லிக்கொண்டே ருசி பார்த்தார்.

மிகப் பயங்கரமான விஷயமென்னவெனில், அந்த பேய் பிடித்த பானத்தின் அடியில், எந்த மாயத்தினாலோ அத்தை பேகானின் துன்மார்க்கப் பாட்டுக்கள் கண்ணுக்குத் தென்பட்டன. ''பதாத்தேன், பதாத்தன்'' பாட்டை அவர் மிக உத்சாகமாகப் பாடினார்.

அடுத்த நாள், பக்கத்து அறைகளில் இருந்த துறவிகள், ''ஏ, கோஷர், என்ன விசேஷம்? நேற்று படுத்துத் தூங்கின போது உம் தலையில் சில்வண்டுகள் ஏறிப்பாடினவா?'' என்று குறும்பாகக் கேட்டபோது எத்தகைய குழப்பம் ஏற்பட்டது என்பதை நீங்களே எண்ணிக் கொள்ளலாம்.

தந்தையார் அழுதார்; பெரிதும் வருந்தினார்; பட்டினி கிடந்தார்; மயிர்ச்சட்டை அணிந்து மாதவம் புரிந்தார். ஆயினும் பேயை வெல்ல அவரால் முடியவில்லை. ஒவ்வொரு நாள் மாலையும் அதே நேரத்தில் அது அவரைப் பற்றியது.

*   *   *

அந்த காலத்தில், நீம்ஸ், எக்ஸ், அவிஞான், மார்ஸேய் இடங்களிலிருந்து கோஷரின் சோமபானத்திற்காக ஆர்டர்கள் மடத்தில் வந்து குவிந்தன. மடத்திற்குச் சுக்ரதசை அடித்தது. அது ஒரு உற்பத்திச் சாலையைப் போலவே பிரதி தினமும் காட்சியளித்தது. துறவிகளிற் சிலர் புட்டிகளைப் பாக் செய்து கட்டினர்; சிலர் விலாசம் எழுதினர்; சிலர் சரக்குகளைச் சிறு வண்டிகளில் கொண்டு சென்றனர். மடத்தில் தேவ ஆராதனை குறைந்துவிட்டது. ஆனால், அதனால் நாட்டு மக்கள் யாதொரு விதமாகவும் பாதகமடையவில்லை.

ஒரு நாள், திங்கட்கிழமை காலை. பொக்கிஷதார் சபையில் வருஷ இறுதி சாமான் விவரங்களைப் படித்தார். மேன்பாட்டுக் குருமார், கண்கள் பிரகாசிக்கவும் உதடுகள் சிரிக்கவும் கேட்டனர். திடுமெனக் கோஷர் சாமியார் சபையின் நடுவே வந்தார். ''முடிந்துவிட்டது. இனியும் என்னால் முடியாது. இதில் நான் ஈடுபடமாட்டேன், என் பசுக்களைத் திரும்பக் கொடுத்து விடுங்கள்?'' என்று கத்தினார்.

"கோஷர்! என்னப்பா இது?" என்று கேட்டார் மடத்துத் தலைவர்.

"ஆண்டவரே, என்னவென்று கேட்கிறீர்கள். நரக வேதனை அனுபவிக்க நான் ஆயத்தமாகி வருகின்றேன். நான் குடிக்கிறேன்."

"ஆனால் நான்தான் துளிகளை எண்ணச் சொன்னேனே".

"ஆமாம்! எண்கிறது! இனி எத்தனை கிண்ணங்கள் என்று தான் எண்ண வேண்டும். ஆமாம், பூஜ்யரே, நான் அங்கிலைக்குத்தான் வந்து விட்டேன். ஒவ்வொரு நாளும் மூன்று புட்டிகள். இப்படி எத்தனை நாள் நடக்கும்! ஆகவே, இனி வேறு யாரைக் கொண்டாகிலும் பானத்தைத் தயார் செய்துக் கொள்ளுங்கள். இனியும் இதில் ஈடுபட்டால் ஆண்டவன் என்னை எரிப்பாராக!"

குருக்கள் சபையினர் சிரிக்கவில்லை, கவலையே அடைந்தனர்.

"ஆமாம், துரதிருஷ்டம் பிடித்தவரே, எங்களை அழித்துவிடுகிறீர்களே" என்றார் பொக்கிஷதார், தம் பெரிய புத்தகத்தை ஆட்டிக்கொண்டே.

"அதற்கு என்னைப் படுகுழியில் விழச் சொல்கிறீர்களா?"

மடத்துத் தலைவர், மோதிரம் பளபளக்கத் தம் வெண்கரத்தைத் திறந்துகொண்டே, "பூஜ்யர்களே, யாவற்றையும் ஒழுங்கு செய்ய ஒரு வழியுண்டு. மகனே, மாலை நேரத்தில்தானே பேய் உன்னைப் பற்றுகிறது?"

"ஆம் தலைவரே, தினந்தோறும் மாலையில்! மாலை நேரம் வரப்போகிறது என்றதும், எனக்கு வியர்க்கவாரம்பித்து விடுகிறது".

"சரி, மகனே, மனத்தைத் திடப்படுத்திக் கொள். கவலைப் படாதே. இனி, உன் பொருட்டு மாலையில் பிரார்த்தனை நேரத்தில் அகஸ்தன் முனிவர் பிரார்த்தனையை ஓதுவோம். அப்பிரார்த்தனைக்கு மிகுந்த ஆற்றலுண்டு. அதோடு என்ன நேர்ந்தாலும் உனக்குப் பாதுகாப்பிருக்கும். பாவம் செய்யும் போது பாவ மன்னிப்பும் கூடவே வரும்".

"ஆம்! அப்படியா! மிக நன்று. வந்தனம் தலைவரே."

மேலே ஒன்றும் கேட்காமல் கோஷர் சாமியார் உல்லாசமாகத் தம் சாராய ஆலைக்குத் திரும்பினர்.

அது முதல் தினந்தோறும் மடத்தில் பிரார்த்தனை நடத்துகிறவர், "சமூகத்தின் நன்மை கருதி ஆத்மத் தியாகம் செய்யும் தந்தை கோஷருக்காகப் பிரார்த்திப்போமாக" என்பார்.

கோயில் சாலையில் இருளில் வெண் குல்லா அணிந்த துறவிகள் இங்ஙனம் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தபோது, மடத்தின் ஒரு மூலையில் சாராயச் சாலையினுள்ளே கோஷர் சாமியார் களிவெறியில் உரத்த குரலில் தம் "பதாத்தேன்" பாட்டை உல்லாசமாகப் பாடினர்.

* * *

இந்த இடத்தில் நல்லாயர் கிராவ்ஸன் தம் கதையை மிகுந்த திகிலுடன் நிறுத்தினர். "ஆண்டவன் கருணை காட்ட வேண்டும். என் ஆதீனத்தில் வசிக்கும் ஜனங்கள் இக்கதையைக் கேட்காதிருக்க வேண்டுமே" என்றார்.

மதிப்புரை

காந்தி அஞ்சலி

"திலகர் விதைத்த வித்து பாரதியாக முளைத்தது; காந்தி விதைத்த விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது" என்று கூறும் ராஜாஜியின் சொல் நூலின் மேலட்டையில் காணப்படுகிறது. நூலைப் படித்த பிறகு நாமும் இந்தத் தீர்மானத்திற்குத் தான் வரவேண்டியிருக்கிறது. ஏனெனில் இதில் பக்கத்துக்குப் பக்கம் காந்தி பக்தி பொங்கி வழிகிறது. நாமக்கல் கவிஞர் தமக்கே உரித்தான தனிப்பாணியில் காந்தியடிகளின் சக்தியை உணர்ச்சி பொங்க கவிதைகள் மூலம் அஞ்சலி செய்கிறார். அழகிய முகப்பு— உயர்ந்த பதிப்பு.

வெளியீடு: கவிஞர் பதிப்பகம், கோயமுத்தூர். விலை: ரூ. 1-4-0.

பத்மினியின் காதல்

"இரு கதாநாயகர்கள்; ஆனால் ஒரே கதாநாயகி! கதாநாயகிக்கு இரண்டு கல்யாணங்கள்; ஆனால் ஒரே தாலி! யார் கதாநாயகி? எப்படி சம்பவங்கள் நிகழ்கின்றன? என்பதைப் பற்றியெல்லாம் நான் சொல்லப் போவதில்லை" என்று முன்னுரையில் சத்தியாக்கிரகம் செய்யும் ஆசிரியர் கே. எஸ். ரங்காச்சாரி பிறகு மிகவும் சுவாரஸ்யமாகவே இந்த நூலில் கதை சொல்லிவிடுகிறார்.

வெளியீடு: ஸ்வாதிப் பதிப்பகம், 3, காந்தி பார்க் வெஸ்ட், கும்பகோணம். விலை: 10 அணா.

கோவைக் குரல்

கோவையிலிருந்து வாரம் ஒரு முறை குரல் கொடுக்கும் இந்தப் பத்திரிகையின் குரலில் உறுதி இருக்கிறது, நேர்மை திகழுகிறது, தெளிவு தொனிக்கிறது. ஆசிரியர் கே. பி. சாரதி பாராட்டுக்குரியவர்.

வெளியீடு: கோவைக் குரல், கோயமுத்தூர். விலை: ஒரு அணா.

நக்ஷத்ரம்

இது மாதம் ஒரு தடவை மின்னும் சினிமா நக்ஷத்ரம். இதன் ஆசிரியர் "கேஸரி", என்று போட்டிருந்தாலும் "கே. ஸ்ரீ" யை மறந்துவிட வேண்டாம். வழக்கமாக சினிமா பத்திரிகையின் தலைவிதியாகிவிட்ட செய்திகள், துணுக்குகளே மலிந்திருந்தாலும், சிறுகதை, கட்டுரை ஆகிய ஓரிரு மாற்று அம்சங்களும், இடம் பெற்றுள்ளன. சுமார் ஆறரை பக்கங்கள் "உங்கள் ராசி பலனை" க்கூறுகின்றன. சினிமா நக்ஷத்ரங்கள் இந்தப் பகுதியை நன்குகப் பயன்படுத்தி எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணலாம்.

வெளியீடு: நக்ஷத்ரம்—சென்னை—17. விலை: அணா நான்கு.

மதிப்புரைக்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும்.

தேசீய வைரம் திரும்பி வருமா?

(இராசு)

இம்மாதம் இரண்டாம் தேதி லண்டனில் நடைபெறும் ராணி எலிசபெத்தின் முடி சூட்டு விழாவிற்கு பல நாடுகளி லிருந்தும் பலதரப்பட்ட வெகுமதிகள் ராணிக்கு வழங்கப்படுவது பற்றிய செய்திகள் நாள் தோறும் தினப் பத்திரிகைகளில் இடம் பெற்று வருகின்றன. காமன் வெல்த் நாடுகள் எல்லாம் தனித்தனி வெகுமதிகள் தரப் போகின்றனவாம். போதாக் குறைக்கு எல்லா நாடுகளும் ஒன்ருகச் சேர்ந்து தங்க அட்டிகை ஒன்றும் கொடுக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா தன் பங்குக்கு சிற்ப வேலைப்பாடுடைய தந்தப் பொருட்களுடன் கோரைப்பாய் ஒன்றும் தரப் போகின்றது. கோரைப் பாய்களுக்குப் பேர்போன பட்டமடை கிராமத்தில் இந்தப் பாய் முடையப்பட்டுள்ளது. (பட்டமடை திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு சிற்றூர்.)

பிரிட்டிஷ் தொழிலதிபரான லார்டு நப்பீல்டு ராணி எலிசபெத்திற்கு **ஆசியாவின் நீலமணி** என்ற புகழ் பெற்ற ஒரு நீல வைரக் கல்லை வெகுமதியாக அளிக்கப் போவதாகக் கூறியுள்ளார். இந்த வைரக் கல்லின் எடை 400 காரட்டுகளாகும். இலங்கையில் ரத்தினபுரம் என்ற ஊரில் ஒரு விளையாட்டு மைதானத்தில் சில வருடங்களுக்கு முன்பு இந்த நீலக்கல் கண்டெடுக்கப்பட்டது. இந்த ஆசிய நீலமணியை இலங்கை வைர வியாபரி ஒருவரிடமிருந்து நப்பீல்டு பிரபு ஐந்து லட்ச ரூபாய்க்கு வாங்கினுர். மண்ணிலிருந்து கண்டெடுக்கப்பட்ட வைரக் கற்களுள் இந்த ஆசிய நீலமணியே சிறந்தது என்று கூறப்படுகிறது. தனது பிரஜை ஒருவரிடமிருந்து இவ்வளவு பிரசித்திபெற்ற விலையுயர்ந்த வெகுமதியை ராணி எலிசபெத் தமது முடிசூட்டு விழாவின் போது பெறுவது பற்றி எவரும் குறை கூற முடியாது. ஆனல் இவரது பாட்டியாரான விக்டோரியா மகாராணி தமது முடிசூட்டு விழாவின் போது இந்தியாவிலிருந்து பெற்ற கோகினூர் வைரத்திற்கு இந்த ஆசிய நீலமணி ஒருபோதும் இணையாகாது.

விக்டோரியா காலத்துப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கும் இன்றுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குமுள்ள வேறுபாட்டைப் போன்றதே கோகினூர் வைரத்திற்கும் ஆசிய நீலமணிக்குமுள்ள வித்தியாசம் என்று கூறுவது பொருந்தும். கோகினூர் வைரத்திற்கு ஒரு சரித்திரமுண்டு. இன்றும் கோகினூர் வைரம் விலை மதிப்பின்றி விளங்குவதுடன் புகழுடையதாகவும் விளங்கி வருகின்றது. கோகினூர் வைரத்தைப் போலச் சரித்திரச் சிறப்புள்ள ஒரு வைரம் தாய்லாந்து நாட்டிலுள்ள பச்சை மரகதப் புத்தராகும்.

பச்சை மரகதப் புத்தருக்காக தாய்லாந்து பர்மா—இந்தோசினு முதலிய நாடுகளில் பல யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. இந்த மரகதம் தற்பொழுது பாங்காக் நகரிலுள்ள ராஜாங்க மாதா கோவில் ஒன்றில் பாது

[இந்தியா விடுதலை பெற்றுவிட்டது. ஆனால் இங்கியாவின் புராதன கல்கள்-கலைபொக்கிஷங்கள் பல இப்பொழுது அந்நியர்கள் கையில் இருக்கின்றன. இவைகளுக்காக இதுவரை கிளர்ச்சியோ போராட்டமோ நடைபெறவில்லை. எனவே இந்தியாவின் கலைப் போராட்டம் இந்தக் கோகினூர் வைரத்தின் மூலம் ஆரம்ப மாகட்டும் என்பது கட்டுரையாளர் கருத்து. இந்தியாவின் இணை யற்ற கோகினூர் வைரத்திற்காக மக்களின் உள்ளத்திலே மறைந்து கிடக்கும் வைர உணர்ச்சி பெரும் எழுச்சியாக உயிர்த் தெழட்டும் — ஆசிரியர்]

காக்கப்பட்டுள்ளது. இந்த மரகதம் தாய்லாந்திலிருப்பதால் அந்த நாடு பல நூற்றாண்டுகளாக யுத்தக் கொடுமைகளுக்காளாகாது தப்பியுள்ளது என்று ஒரு ஐதீகம் அந்நாட்டில் நிலவி வருகிறது.

நம் கோகினூர் வைரம் சரித்திர காலத்திற்கும் முற்பட்டது. மகாபாரதத்திலும் இந்த வைரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறுவோரும் உளர். வட இந்தியாவில் உள்ள புகழ் பெற்ற மன்னர்கள்—சக்கரவர்த்திகள் முதலியோர் இதைப் போற்றிப் பாதுகாத்தனர். இதை அடையும் பொருட்டு அவர்கள் நடத்திய போராட்டங்கள் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளன. இறுதியாக கோகினூர் வைரம் மொகலாய சக்கரவர்த்திகளிடம் சிக்கியது. மொகலாய மன்னர்கள் இந்த கோகினூர் வைரத்திற்காக தங்கள் உயிரையும் சாம்ராஜ்யத்தையும் பணயம் வைத்துப் போராடினர் என்பது வரலாறு. இதை மொகலாய மன்னரிடமிருந்து ஆப்கானிஸ்தான் மன்னன் கவர்ந்து சென்றான், இதை மீட்க பஞ்சாப் மன்னன் ரஞ்சித் சிங் பெரும் போர் நடத்தி அதைத் தனது உடமையாக்கினான். ரஞ்சித் சிங்கின் வாரிசான தாலீப் சிங் என்னும் இளவரசனிடமிருந்து ஆங்கிலேயர் கோகினூரை ஒரு ஒப்பந்த மூலம் தந்திரமாகக் கைப்பற்றினர். இவ்வாறு இந்திய மண்ணிலிருந்து கோகினூர் வைரம் விக்டோரியா மகாராணியின் முடிசூட்டு விழாப் பரிசாக பிரிட்டனுக்குச் சென்றது.

இந்தியாவின் தேசிய சொத்தான கோகினூர் வைரத்தை பிரிட்டன் இனனும் வைத்திருக்க உரிமை உண்டா என்ற பிரச்னை இப்பொழுது எழுந்துள்ளது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கண் என்று போற்றப்பட்ட இந்தியாவுக்குப் பழைய சுதந்திரத்தை திருப்பித் தந்தது போல நமது கோகினூர் வைரத்தையும் திருப்பித்தர பிரிட்டன் இணங்குமா என்பதே கேள்வி. இந்திய மன்னர்களின் போராட்டத்திற்கும் சாம்ராஜ்ய அழிவுக்கும் காரணமாயிருந்தது என்று கோகினூர் வைரத்தைப் பற்றி ஒரு அவச்சொல் இருந்து வந்தபோதிலும் இந்தியர்கள் எல்லோரும் கோகினூர் வைரத்தை மிகவும் மதிப்பதுடன் அதைத் தமது சொந்த தேசியப் பொருளாக அடையவேண்டுமென்றே விரும்புகின்றனர்.

இந்தியாவை இழந்தமையை நினைவுபடுத்தும் இந்தக் கோகினூர் வைரத்தை இந்தியாவுக்குத் திருப்பித்தர பிரிட்டனுக்குத் தாராள மனப்பான்மை உண்டாகுமா என்பது சந்தேகத்திற்குரியதே. ஒரு வேளை

பிரிட்டன் கோகினூர் வைரத்தைத் திருப்பித்தர இசையுமானல் பாக்கிஸ்தான் இதைப் பெற உரிமை கொண்டாடும் என்றும் அஞ்சப்படுகிறது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சிதைப்பதற்காகத் தாம் பிரதமராகவில்லை என்று இறுமாப்புப் பேசிய சர்ச்சில் கோகினூரை இந்தியாவுக்குத் திருப்பித்தர இசையமாட்டார் என்பது உறுதி. அத்துடன் தனது முடியை அலங்கரிக்கும் இந்தக் கோகினூர் வைரத்தை இந்தியாவுக்குத் திருப்பித்தர இளம் ராணி எலிசபெத்திற்கு தாராள சிந்தை ஏற்படும் என்று கருதவும் முடியாது.

மேலும் கோகினூரைப் பிரிட்டன் திருப்பித்தர வேண்டும் என்று இந்தியாவில் இதுவரை கிளர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. காமன்வெல்த்திலிருந்து வெளியேற வேண்டும் என்று ஓயாது வற்புறுத்தும் கம்யூனிஸ்டு கட்சியினர் கூட கோகினூர் பற்றி வாய்மூடி மௌனியாகவே இருக்கின்றனர். தேசியக்கலை, தேசியப் பொக்கிஷம் என்று வாய்கிழியப் பேசும் ஹிரேன் முக்கர்ஜி, ஹரீந்திர நாத் சட்டோபாத்தியாய முதலியவர்கள் கோகினூர் பற்றி ஒரு வார்த்தையாவது பேசியதாகத் தெரியவில்லை. ஆகவே கோகினூர் பிரிட்டனிலேயே ராணியின் முடியில் இருக்கப் போகிறது. கோகினூர் வைரத்தை இந்தியா திரும்பப் பெறுமானல் அது இந்தியாவுக்குப் பெருமை தரும் என்று கூறத் தேவையில்லை.

அண்மையில் டில்லி பார்லிமெண்டில், ஒரு கேள்விக்குப் பதில் கூறுகையில், மத்திய கல்வி துணை மந்திரி, பிரிட்டிஷார் தமது ஆட்சி காலத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு சென்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கலைப் பொக்கிஷங்கள், நகைகள் ஆகியவற்றைச் சாத்திய மானவரையில் திரும்பப் பெற சர்க்கார் முயன்று வருகின்றனர் என்றும், இதில் கோகினூர் வைரமும் உட்படும் என்றும் கூறியுள்ளார். இது பற்றி லண்டன் பத்திரிகைகள், பலவிதமான கருத்துக்களைக் கூறியுள்ளன. கோகினூரைத் திருப்பித்தர பிரிட்டிஷ் சர்க்காருக்கு அதிகாரமில்லையென்றும், அது விக்டோரியா ராணிக்கு கிழக்கிந்திய கம்பெனியால் பரிசளிக்கப்பட்டதால், அது பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் சொத்து என்றும். ‘டெய்லி மிரர்’ பத்திரிகை கூறியுள்ளது. மேலும் கோகினூர் மொகலாய மன்னர்களுக்குச் சொந்தமானது என்றும், இந்திய சர்க்கார் அதைக் கேட்க உரிமை இல்லை என்றும் கூறியுள்ளது.

எனவே கோகினூர் வைரத்தைத் திருப்பிப் பெற இந்தியா பலமான கிளர்ச்சி செய்ய வேண்டியதவசியம். ஆனல் இதற்காக நாம் பழைய காலத்து மன்னர்கள் போல வைரத்திற்காக யுத்தம் நடத்தத் தேவையில்லை. இது போன்றப் பிரச்னைகளைப் பேச்சு வார்த்தை மூலம் முடிவுகாண முடியும். ராணி எலிசெபத்தின் முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ளும் நமது பிரதமர் நேருஜி அதுபோது நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கோகினூர் பிரச்னையை எழுப்ப வேண்டும். அத்துடன் நாடு முழுவதும் உள்ள தேசீயக் கட்சிகளும் தலைவர்களும் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

Cystex
ஸிஸ்டக்ஸ்
முகப் பருக்கள் நீங்கிவிடுகிறது
3 நாளில் அதன் மூலகாரணம்
கொல்லப்படுகிறது

காணோம

சுமார ஐந்து அடி ஒனபது அங்குல உயரமும். சிவந்த மேனியும. நாற பத்திரண்டு வயது மதிக்கக்கூடிய தோற்றமும் உளள ஸ்ரீ கோவிந்தசாமி

படம் வந்தது

மகரம்

கோவிந்தசாமி பத்திரிகைகளைப் பிரித்துப் பார்க்கும் போதெல்லாம் பெருமூச்சு விடாமல் இருப்பதில்லை. தினசரி அந்தப் பத்திரிகைகளில் யாராவது ஒரு பிரமுகரின் படம் வெளிந்த வண்ணமாக இருக்கும். அந்தப் படங்களைப் பார்க்கும் போது தான் நமது கோவிந்தசாமிக்கு மனதில் ஏக்கம் அலை புரண்டு கரை மோதும்! "நம்முடைய படமும் இதே மாதிரி பத்திரிகைகளில் வெளிவர வேண்டும், அதற்கேற்ற வகையில் நாமும் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்." என்று தனக்குத்தானே கூறிக் கொள்வான் கோவிந்தசாமி.

"பனைமரப்பட்டி பரசுராம முதலியாருடைய குமாரன் சிரஞ்சீவி மார்க்கண்டன் பி. எஸ். ஸி. அவர்களுக்கும் தென்னம்பாளையம் தெய்வசிகாமணி முதலியார் குமாரி திருநிறைச் செல்வி திரிபுரசுந்தரி பி. காம் அவர்களுக்கும் ஈச்சனூரில் திருமணம் இனிது நிறைவேறியது, திருமணத்தன்று மாலை குமாரி குஞ்சரகமணியின் பரத நாட்டியம் நடந்தது, மணமக்கள் ஏராளமான பரிசுகளைப் பெற்றனர்,' என்ற வர்ணனைகளுக்கு மேலே மாலையும் கழுத்துமாகக் காட்சியளிக்கும் புதுமணம் புரிந்த தம்பதிகளுடைய படத்தைப் பார்த்து இரட்டைப் பெருமூச்சு விடுவான் கோவிந்தசாமி. அவனுக்குக் கல்யாணம் நடந்த காலத்தில் இப்படிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும் வழக்கம் இல்லாததால் அவனுடைய படம் வெளிவர ஏதுமில்லாமலே போய்விட்டது. இனிமேல் அவனுடைய திருமணத்தின் வெள்ளி விழாவன்று படம் எடுத்து விளம்பரமாக வெளியிட்டால் தான் உண்டு! அதற்குத்தான் இன்னும் ஒரு மாமாங்கத்துக்கு மேல் இருக்கிறதே!

'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்,' என்ற மூதுரையில் நம்முடைய கதா நாயகனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. எந்தளந்தத் துறையில் எப்படி எப்படி முயன்றால் புகழும் காமிராவும் தன்னைத் துரத்தி வரும் என்பதை முதலில் ஆராய்ந்தான் கோவிந்தசாமி.

பிரபலமான பத்திரிகைகள் அவ்வப்பொழுது நாவல், சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதைப் போட்டிகள் நடத்துகின்றனவல்லவா! போட்டியின் முடிவில், முதல் பரிசு பெற்றவரின் புகைப்படத்தை எடுத்துத் தங்கள் பத்திரிகையில் அதன் ஆசிரியர்கள் பிரசுரிக்கிறது நம் கோவிந்தசாமிக்குத் தெரியும். ஆகையினால் உடனே தான் ஒரு எழுத்தாளனாக மாறத் தீர்மானித்துவிட்டான்! இராட்சசர்கள் பிறக்கும்போதே பதினாறு வயதுள்ளவர்களாக வளர்ந்து பிறந்துவிடுவார்களாமே அதுபோலச் சில எழுத்தாளர்கள் பேனாவை முதல் முதலில் எடுத்துப் பிள்ளையார் சுழி போட்ட உடனேயே ஒரு பெரிய நாவல் எழுதத் தொடங்குவதும் நம் கோவிந்தசாமிக்குத் தெரியாததல்ல. ''நாய்வாலை கிமிர்த்தினாலும் நிமர்த்தலாம் தமிழ் மக்களுக்கு நாவலைப் படிக்கும் ஆவலை நிமிர்த்த முடியாது'' என்று ஒரு பேராசிரியர் அருளிப் போந்த பொன்மொழிகள் வேறு இந்தச்சமயம் பார்த்து அவனுடைய ஞாபகத்துக்கு வரவே கோவிந்தசாமி பேனாவை எடுத்தான் ''அபலையின் அழுகுரல்'', என்ற நாவலின் தலைப்பைப் போட்டான். மடமட வென்று எழுதினான். அத்தியாயம் அத்தியாயமாக எழுதிக் கொண்டே போனான்!

அவனுடைய 'விஷயமறிந்த' நண்பர்கள் பலர், ''ஏண்டா கோவிந்து! உனக்கு புத்தி ஏன் இப்படிப் போகவேண்டும்? நாவல் சிறுகதைப் போட்டிகளில் முதல் பரிசு பெற்று உன்னுடைய படம் பத்திரிகைகளில் அச்சாக நீ என்ன பெண்பிள்ளையா?'' என்று அவனுடைய உத்சாகத்தின் வேரைப் பிடுங்கி வெந்நீர் விட முயன்றும் கோவிந்தசாமி நாவல் எழுத முன்வைத்த கையைப் பின் வைக்கவே இல்லை!

கோவிந்தசாமியின் இலக்கிய சேவையும் அதன் மூலமாக அவனுடைய படம் பத்திரிகைகளின் பக்கங்களை அலங்கரிக்கலாம் என்ற அவனுடைய ஆசையும் ஒரு நாள் திடீரென்று முடிவுக்கு வந்துவிட்டன. அவன் எழுதியனுப்பியிருந்த நாவல் போட்டியின் முடிவுதான் அந்த முடிவுக்குக் காரணம், ஸ்ரீமதி கங்கா கங்காதரன் எழுதின ''உள்ளத்தின் குமுறல்'' என்ற நாவலுக்கே முதல் பரிசு விழுந்திருந்தது, 'அபலையின் அழுகுரலை' 'உள்ளத்தின் குமுறல்' வென்று விட்டது! நாவலுடன் போதிய தபால் தலைகளும் வைத்து அனுப்பாத காரணத்தால் கோவிந்தசாமியின் நாவல் திருப்பி அனுப்பப் படவுமில்லை, கோவிந்தசாமி அதற்காக கவலைப்படவுமில்லை, ஏனென்றால் அவன் எழுத்தாளர் உலகத்தில் எப்படித் திடீர் பிரவேசம் செய்தானோ, அதே

மாதிரி இப்பொழுது அங்கிருந்து திடீர் வாபஸ்செய்து விட்டிருந்தான்!

கோவிந்தசாமியின் சிந்தையை அடுத்தபடியாகக் கவர்ந்தது இந்த 'கிரிக்கெட்' ஆட்டம் தான். 'கிரிக்கெட் டெஸ்ட் மாட்சு'களில் நூறு ஓட்டங்களாவது அல்லது ஐந்து விக்கெட்டுகளாவது எடுக்கிறவர்களின் படங்களை அலுக்காமல் சளைக்காமல் இந்தப் பத்திரிகைக்காரர்கள் போடுவதும் 'கிரிக்கெட், விசிறிகள்' அந்த படங்களைப் பயபக்தியுடன் வெட்டி எடுத்துத் தனியாக ஒட்டிக் கொள்வதையும் கோவிந்தசாமி பார்த்திருக்கிறான். 'நாமும் ஏன் இந்த ஆட்டத்தைக் கற்றுக் கொண்டு முன்னுக்கு வரக்கூடாது? சின்னப்பிள்ளையாக இருந்தபொழுது, புளியங்காய்களையும் மாங்காய்களையும் அடித்துத் தின்பதற்காக சித்திரை வைகாசி நடுப்பகலில் வெயிலையும் பார்க்காமல் அலைந்து திரிந்த பயிற்சி இந்தக் கிரிக்கெட் விளையாட்டை ஆடுவதற்கு ஓரளவு ஏன் உதவாது?' என்று கோவிந்தசாமி நினைத்தான்.

ஆனால் நமது கோவிந்தசாமிக்கும் அதிர்ஷ்டத்துக்கும் வெகுதூரம் என்பது சீக்கிரமே வெளியாகிவிட்டது. மிகுந்த சிபார்சின் மீது ஒரு கிரிக்கெட் 'கிளப்'பில் அங்கத்தினனைச் சேர்ந்து விளையாட ஆரம்பித்தான். கிரிக்கெட் ஆட்டம் ஆடுபவர்களுக்கு அதிர்ஷ்டம் என்ற அம்சம் அதிகம் இருந்தால் தான் சோபிக்கலாம் என்பது எவ்வளவு உண்மை! கோவிந்தசாமி 'பாட்' செய்தபோது இவன் கொடுத்த 'காட்சை' எதிராளி பிடித்து விட்டான்! ஆனால் இவன் 'போல்' செய்தபோது எதிர்க்கட்சி பாட்ஸ்மன்('பாட்டாளி' என்று சொன்னால் என்ன?) கொடுத்த 'காட்சை' இவன் கட்சிக்காரன் ஒருவன் கோட்டை விட்டு விட்டான்! வேறு ஒருசமயம் ஒரு அம்பயர் இவன் 'அவுட்' ஆகாமல் இருக்கும் போதே 'அவுட்' என்று சொல்லி விட்டார். இத்யாதி காரணங்களால் அவனுடைய கிளப்பின் கோஷ்டியில் பன்னிரண்டாவது நபராக முதலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவன் படிப்படியாக 'ரிஸர்வ்' ஆகக் கீழே இறங்கிப் பிறகு ஸ்டாண்ட் பையாக மாறிக் கடைசியில் 'கிளப்பை' விட்டே கிளப்பப் பட்டு விட்டான்!

[illegible] பத்திரிகையானது [illegible] அனுமதேயமானவர்களின் படங்களை எல்லாம் மேலட்டையிலும் உள்

17/199

பக்கங்களிலும் வெளியிட்டு அவர்களைப் பற்றி 'இந்திரன்' சந்திரன், குரு, சுக்கிரன் என்று வானளாவப் புகழ்வதை நமது கோவிந்தசாமியின் கழுகுக் கண்ணானது கவனித்து வந்திருந்தது. அந்தப் பத்திரிகையில் தனது திருவுருவப்படம் வெளிவர என்ன செய்ய வேண்டும் என்பதை மெல்ல விசாரித்தறிந்த கோவிந்தசாமி, பல நிமிஷங்கள் திடுக்கிட்டேவிட்டான். அந்தப் பத்திரிகைக்கு நூறு சந்தாதாரர்களையும் பத்து பக்கம் விளம்பரங்களையும் சேகரித்துத் தருபவர்களின் படங்களை மேலட்டையிலும், அதற்குக் குறைவான சந்தாதாரர்களையும் விளம்பரங்களையும் சேகரித்துத் தருபவர்களின் படங்களை உள் பக்கங்களிலும் வெளியிடும் வழக்கமுடையவர்கள் அப்பத்திரிகை முதலாளிகள் என்பதை கோவிந்தசாமி அறிந்தான். பத்திரிகைகளுக்குச் சந்தாவும் விளம்பரமும் சேகரிக்கக் கூடிய யோக்கியதை தனக்கில்லை என்பதை அவன் அறிவானாதலால் அந்த மாதிரி புகழ் தேடும் ஆசையை அறவே ஒழித்தான்.

"புயல் நிவாரணத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் உதவிய வள்ளல்", என்றும், "பஞ்ச ஒழிப்பு நிதிக்குப் பத்தாயிரம் ரூபாய் ஈந்த தனவான்", என்றும் "கலை உத்தாரணத்துக்காகக் கால் இலட்சம் தந்த கனவான்", என்றும் கொட்டைத் தலைப்புகள் கொடுத்து சில கனதனவான்களுடைய திருவுருவங்கள் பத்திரிகைகளில் அடிபடுவதைப் பார்க்கும் போதெல்லாம், "நம்மிடம் ஒரு கோடி ரூபாயாவது இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? தினம் பத்தாயிரம் இருபதாயிரம் என்று நன்கொடைகள் வழங்கிக் கொண்டேயிருக்கலாமே!" என்று எண்ணாததெல்லாம் எண்ணி மனம் புண்ணாவான் கோவிந்தசாமி.

"செங்கல் சூளை போடுவது எப்படி என்பதைப் பற்றி விரிவாக ஆராய்ச்சிகள் நடத்தி, மேல் நாட்டு முறைகள் பலவற்றையும் பரிசீலனை செய்வதற்காக இவர் நாளை காலை பம்பாயிலிருந்து புறப்படவிருக்கும் 'ஜலதிமிங்கலா' என்ற கப்பலில் இங்கிலாந்து செல்கிறார்", என்ற தொழில் விவரங்களோடு வரும் விளம்பரப் படங்களும் நம் கோவிந்தசாமியின் ஆவலைப் பலமுறை தூண்டிவிட்டிருக்கின்றன. ஆனால் கோவிந்தசாமியை எந்த வியாபார ஸ்தாபனமும் தங்களது பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு, அவனுடைய மேல் நாட்டு பிரயாணச் செலவையும் ஏற்றுக் கொண்டு விளம்பரம் செய்ய முன் வரவில்லையே என்ன செய்வது?

கோவிந்தசாமி தன்னுடைய மகா இலட்சியத்தை அடைவதற்காகக் கடைசியாக மகத்தானதொரு முயற்சி செய்யத் தீர்மானித்துவிட்டான். அ, ஆ

என்ற இரண்டு எழுத்துக்களைக் கொண்டு ஒரு போட்டிப் பரிசுத் திட்டம் நடந்து வருகிறதல்லவா? அந்தப் போட்டியில் முதல் பரிசான இலட்சம் ரூபாயை யார் அடைகிறாரோ அவருடைய உருவப் படத்தைக் கட்டம் கட்டி எல்லாப் பத்திரிகைகளிலும் அந்த போட்டிப் பரிசு ஸ்தாபனத்தார் வெளியிடுகிறார்களல்லவா? இதுதான் நமது கோவிந்த சாமியின் மனத்தை மிகவும் வசீகரித்துவிட்டது. ''பணத்துக்கும் பணம், படத்துக்கும் படம்'' என்று அவனுடைய வாய் முணு முணுத்தது.

போட்டி கூப்பனிலுள்ள பதினைந்து கட்டங்களிலும் அ, ஆ என்ற இரண்டு எழுத்துக்களை ஏதாவது ஒரு வரிசையில் எழுத வேண்டுமென்ற நிபந்தனையின்படி கோவிந்தசாமி ஒரே கூபனில் பல விதமாக ''அ, ஆ''க்களை பூர்த்தி செய்து அனுப்பினான். (எட்டே அணா செலவில் முழுசாக ஒரு இலட்சம் ரூபாய் தட்டப்பார்த்த அவனுடைய சாமர்த்தியத்தை என்ன வென்பது!) ஆனால் போட்டிப் பரிசு கம்பெனியாருடைய விடை வேறு விதமாக இருந்து தொலைந்தது.

பாவம் கோவிந்தசாமியின் விடையில் பதினைந்தே தப்புகள் தாம்! எல்லாம் தப்பாக விடையனுப்புவோருடைய படத்தை எடுத்து விளம்பரப்படுத்த யாரும் முன்வராதது அவனுடைய பிழையல்லவே!

மறுமுறை நமது கோவிந்தசாமி வந்தது வரட்டும் என்று துணிந்து எல்லாக் கட்டங்களிலும் **ஆ** என்ற எழுத்தையே எழுதி யனுப்பிவிட்டு முழு இலட்ச ரூபாயும் தனக்கே வரும் என்று வாயை 'ஆ' வென்று திறந்து கொண்டிருந்தான்! விதி இங்குதான் அவனை மிகவும் சதி செய்துவிட்டது. பத்திரிகைகளில் வெளி வந்த சரியான விடைக்கும் இவனுடைய விடைக்கும் மறுபடியும் பதினைந்து தப்புகள்தாமிருந்தன! எப்படியென்றால் அந்தக் குறிப்பிட்ட போட்டியின் சரியான விடை முழுதும் 'அ' என்ற எழுத்தாலே ஆகியிருந்தது!

பேயறைந்தவன் போன்ற முக தோற்றத்துடன் வாயினால் எதையோ பிதற்றிக் கொண்டு வீட்டை விட்டு அன்று மாலை வெளியிலே புறப்பட்டகோவிந்தசாமி அன்றிரவு முழுதும் விடு திரும்பவில்லை. நண்பர் யாருடனாவது இரவைகழித்து விட்டு மறுநாள் காலைக்குள் திரும்பி விடுவான் என்று அவனுடைய மனைவி மக்கள் எதிர்பார்த்தது வீண் போயிற்று. மறு நாளும், மறுநாளுக்கு மறுநாளும் கூட அவன் வராமல் போகவே கோவிந்தசாமியின் குடும்பத்தினர் பலமாகக் கவலைப்படத் தொடங்கினர்.

குடும்ப நண்பர்கள் சிலருடைய யோசனையின் மீது கோவிந்தசாமியின் மகன் ஒரு பிரபல பத்திரிகையில் ஒரு

விளம்பரம் கொடுத்தான். கோவிந்தசாமியின் திருவுருவப் படம் அழகாக அச்சாகி இருந்த இடத்துக்குக் கிழே "காணும்" என்ற தலைப்பு கொடுக்கப்பட்டு "சுமார் ஐந்தடி ஒன்பது அங்குல உயரமும், சிவந்த மேனியும் நாற்பத்திரண்டு வயது மதிக்கக்கூடிய தோற்றமும் உள்ள ஸ்ரீ கோவிந்தசாமி என்ற என்னுடைய தகப்பனரை மூன்று தினங்களாகக் காணவில்லை. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மூன்று பாஷைகள் பேசுவதுடன் அடிக்கடி 'அ. ஆ' என்று சொல்லிக் கொண்டிருப்பார். அவரை கண்டுபிடித்துத்தருவோருக்கு உரிய சன்மானம் அளிக்கப்படும்," என்ற விளம்பரம் அச்சாகி இருந்தது, அதேதினம் வேறொரு தினப் பத்திரிகையில் கோவிந்தசாமியின் படம் அச்சாகி அதன் கிழ் வேறொரு விளம்பரம் வெளியாகி இருந்தது. "சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்கவரும், உயர்ந்த உருவமும் சிவந்த மேனியும் கொண்ட வருமான இந்த படத்தில் இருப்பவர் சித்த ஸ்வாதீன மில்லாத நிலையில் இங்கு தங்கி இருக்கிறுர். ஊர் பெயர் ஒன்றையும் சொல்ல அவருக்குத் தெரியவில்லை. அடிக்கடி அரிச்சுவடி படிக்கும் குழந்தையைப் போல 'அ ஆ' என்று எழுத்துக் கூட்டுகிறுர். அவருடைய உறவினர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்துக்கு உடனே வந்து அவரை அழைத்துபோகலாம்" என்றவிளம்பரத்தைப்படித்த கோவிந்தசாமியின் பிள்ளை "அப்பா" என்று அலறியேவிட்டான்.

வீட்டுக்கு அழைத்து வரப்பட்ட கோவிந்தசாமியின் மனக்கலக்கம் தெளிய ஒரு வாரத்துக்கும் மேல் ஆயிற்று. சித்தபிரமை நீங்கிய நிலையில், கோவிந்தசாமி ஒரு நாள் தன்னுடைய புகைப்படமானது இரண்டு பிரபல பத்திரிகைகளிலும் ஒரே நாளில் வெளியான விபரத்தை அறிந்து வெட்கமே பட்டான். நண்பர்களும் உறவினர்களும் "என்னப்பா கோவிந்தசாமி! இனிமேல் உன்னுடைய படம் பத்திரிகைகளில் வரவேண்டுமென்ற ஆசையை விட்டுவிட்டாயா?" என்று வேடிக்கையாக கேட்டால், "விட்டுவிட வேண்டியதுதானே! அதுதான் ஒட்டிக்கு இரட்டியாய் ஒருமுறை வந்துவிட்டதே!" என்பான் சிரித்துக் கொண்டு!

கவிஞர்களும் உலகமும்.

கவிஞர்கள் சமாதிக்கடியில் மறைந்து குறைந்த பட்சம் ஐம்பது ஆண்டுகள் கழியும் வரை கவிஞர்களாகக் கருதப்படுவதில்லை. அவர்கள் தமது ஆனந்த சிருஷ்டிகளைத் தந்து, பிரதியாக உலகத்தாரிடம் உணவு கேட்கிறுர்கள். ஆனல் உலகமோ ஆர அமரப் பார்த்து அவர்களுக்கு ஒரு ஞாபகார்த்த ஸ்தூபியை வழங்குகிறது.

—ஜான் மேஸ் பீல்ட்

கலப்பற்ற தனிக் கற்பூரத்திற்கும்
பில்லை உறுதிக்கும் உத்திரவாத
முள்ள ஜோதி கற்பூர பில்லை
களையே எப்பொழுதும்
உபயோகியுங்கள்.

தயாரிப்பவர் :

ஜோதி கற்பூரத் தொழிற்சாலை

உரிமையாளர் : ஆ. பொன்னுசாமி.

167, அண்ணு பிள்ளை தெரு, சென்னை-1.

இந்தியாவில் முதன் முதலாக
மிகச் சிறந்த முறையில்
தயாரித்த பௌன்டென்
பேனு இங்க்.

SOLE DISTRIBUTORS :

NATIONAL PRODUCTS SYNDICATE

'INK MANSION'

141, GOVINDAPPA NAICK STREET, MADRAS-1.

Grams : "PERMANANCY" Phone : 318

கோமதியின் கனவு

நள்ளிரவில் திடீரென தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட கோமதி, அறைக்கு வெளியே ஹால் விளக்கு பிரகாசித்துக் கொண்டிருந்ததை ஜன்னல் வழியாகப் பார்த்து வியப்படைந்தாள். மேஜை மீதிருந்த கடிகாரத்தைக் கவனித்தாள். மணி ஒன்று; இந்த நேரத்தில் ஹால் விளக்கு எரியக் காரணம்? படுக்க வரும் போது விளக்கை நிறுத்திவிட்டு வந்தது அவளுக்கு நன்ருக நினைவில் இருந்தது. சில சமயங்களில் அவள் தந்தை வெகு நேரம் வரை சட்ட புத்தகம் எதையாவது படிப்பது வழக்கம். அன்றும் அப்படி இருக்கலாம் என்று பேசாமல் தூங்கிவிட எண்ணினுள். ஆனல் ஹாலில் படுத்திருந்த நாராயணனின் ஞாபகம் வரவே அவள் துள்ளி எழுந்தாள். "ஒருவேளை அவர் உடல் நிலை மோசமாகி, அப்பா ஏதாவது சிகிச்சைகள் செய்துக் கொண்டிருந்தால்"!

பரபரப்புடன் உடையைச் சரி செய்துக் கொண்டு அறையை விட்டு வெளியே அடியெடுத்து வைத்தவள் திடுக்கிட்டு நின்ருள்.

அங்கே நாராயணன் படுக்கையருகே நின்றிருந்த கோமதியின் தந்தை மார்க்க சகாயம் குனிந்து அவன் முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். நாராயணன் நிம்மதியாக தூங்குவது தெரிந்தது. ஆகவே உடல் நிலையில் மாற்றமிருக்க முடியாது. மார்க்கசகாயம் அப்படி ஏன் அவனைக் கவனிக்க வேண்டும்; அவர் முகத்தில் அப்பொழுது பரவியிருந்த கொடுமையும், அருவருப்பும் கோமதியின் ஆச்சரியத்தை அதிகப்படுத்தின.

மார்க்கசகாயம் நிமிர்ந்த போது அறைவாசலில் தயக்கத்தோடு நின்றிருந்த கோமதியைப் பார்த்துவிட்டார். உடனே அவரிடம் ஏற்பட்ட பரப்பரப்பு, கையும் களவுமாகப் பிடிபட்ட ஒரு கள்ளனைத் தான் கோமதிக்கு நினைவு படுத்தியது.

"என்ன அப்பா...." என்ருள் கோமதி.

"ம்.... ம்.... ஒன்றுமில்லை.... ஒன்றுமில்லை...." என்று கூறிக்

கொண்டே மார்க்கசகாயம் வேகமாக நடந்து தன் அறைக்குள் போய்விட்டார்.

கோமதி கட்டிலை நெருங்கி நாராயணனைப் பார்த்தாள். அவன் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் திரும்பிப் படுத்தான். ஆனல் தூக்கம் கலையவில்லை. ஆழ்ந்த உறக்கம். திரும்பி மார்க்க சகாயத்தின் அறைப் பக்கம் பார்வையைச் செலுத்தினுள். அங்கே படுக்கை மீது தலையில் கை வைத்த வண்ணம் அவர் உட்கார்ந்திருப்பது ஜன்னல் வழியாகத் தெரிந்தது.

விளக்கை அணைத்துவிட்டு படுக்கப் போகலாம் என்று எண்ணி "சுவிட்"சில் கோமதி கை வைத்தபோது மார்க்கசகாயம் கூப்பிட்டார்.

கோமதி அவர் முன்னுல் வந்து நின்ருள். ஏதோ தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருப்பது போல் அமர்ந்திருந்த மார்க்க சகாயம் தயக்கத்தோடு கோமதியைப் பார்த்து "காலையில் அந்த பையனை நம் வீட்டை விட்டு அனுப்பிவிட வேண்டும். அதனல் உன் மனம் சங்கடப்படும் என்பதும் எனக்குத் தெரியும் : வேறு வழியில்லை. இதற்கு நான் காரணம் கூற முடியாது. இது நமது நன்மைக்காக என்று மட்டுந்தான் இப்பொழுது கூறலாம்" என்ருர்.

கோமதி இடிந்துபோய் விட்டாள். உடல்நலம் சீர்படும்வரை இங்கேயே தங்கும்படி மாலையில் வேண்டிவிட்டு, மறுநாள் காலை உடனே வீட்டை விட்டுப் போய்விடுங்கள் என்று கூறுவது மனதாலும் சிந்திக்கக் கூடிய செயலா! இத்தனைக்கும் மார்க்கசகாயத்தின் சம்மதத்தைக் கேட்டே அவள் நாராயணனைத் தங்க வைத்தாள். இப்பொழுது இப்படிப் புரண்டு பேசினுல்....?

"வக்கீல்கள், கோர்ட்டில் மட்டுமல்ல, வாழ்க்கையில் கூட இப்படித்தான் பல்டியடிப்பவர்களாக இருப்பார்களோ!" என்று கோமதி எண்ணிய போது தந்தை மீதும் அவருடைய வக்கீல் தொழில் மீதும் சகிக்க இயலாத வெறுப்பு மூண்டது.

"சரி...." என்று கூறிவிட்டு கோபம் பிரதிபலிக்க சட்டெனத் திரும்பினுள் கோமதி. அவள் அறை வாசலைத் தாண்டுவதற்குள் மார்க்கசகாயம் மறுபடியும் கூப்பிட்டார்.

சண்முகம்

கோமதி இந்தப் பக்கம் திரும்பாமலே "தெரிகிறது அப்பா.... காலையில் அவரை வெளியே அனுப்பிவிடுகிறேன். போதுமல்லவா!" என்ருள்.

"இங்கே வாம்மா...." என்று அழைத்த மார்க்க சகாயத்தின் குரலில் இருந்த பலவீனம் கோமதியை திரும்ப வைத்தது. மௌனமாக அவர் முன்னுல் போய் நின்ருள்.

"நான் சொல்வது உனக்கு சங்கடமாக இருக்கும். ஆனல்...." என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தவர் பேச்சில் குறுக்கிட்டு, "நான்தான் நீங்கள் சொன்னபடி செய்கிறேன் என்றேனே" என்று படபடப்புடன் கூறினுள் கோமதி.

"சொல்வதைக் கேளம்மா, அவனை ஒரேயடியாகப் போகச் சொல்ல வேண்டாம். காலையில் நமது தோட்ட பங்களாவுக்கு அழைத்துச் சென்று உன் இஷ்டம் போல் அவன் உடல் நலம் சீர்படும் வரை அங்கேயே வைத்து சிகிச்சை செய். ஆனால் எக்காரணத்தை முன்னிட்டும் என் பெயரோ, என்னைப் பற்றின விவரங்களோ அவனுக்குத் தெரிய வரக் கூடாது. நீ என் மகள் என்பது கூட அவனுக்குப் புரியாமல் இருக்க வேண்டும். இந்த உத்தரவுகளுக்கெல்லாம் என்ன அர்த்தம் என்று மட்டும் இப்பொழுது கேட்க வேண்டாம்" என்றார் தழுதழுத்த குரலில்.

கோமதிக்கு கொஞ்சம் உயிர் வந்தது. ஆத்திரம் சற்று தணியவே வழக்கமான குரலில் அப்படியே செய்வதாகக் கூறிவிட்டு வெளியே வந்து படுக்கையறையை நோக்கி நடந்தாள்.

பிரசித்தி பெற்ற வக்கீலான மார்க்க சகாயத்தைப் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசினர்கள். அவருக்கிருக்கும் திரண்ட செல்வம் நியாயமாக அவர் சம்பாதித்ததல்ல என்றும், உண்மையில் அவருக்கு திறமையோ சாமர்த்தியமோ அறவே கிடையாது என்றும், எப்படி யெப்படியோ பற்பல சூழ்ச்சிகள் செய்து பிறருடைய பணத்தையும், புகழையும் தட்டி விடுகிறார், என்றும் முச்சந்திகளில் பேச்சு அடிப்பட்டது. ஆனால் அவர் கண்களுக்கு முன்னால் எல்லோரும் மரியாதையாகத்தான் நடந்து கொண்டனர்,

கோமதி அவருடைய ஒரே செல்லப் பெண். அவள் சிறு பெண்ணாக இருக்கும் போதே தாயற்றவளாகிவிட்டாள். கோமதியின் நன்மையைக் கருதி மார்க்கசகாயம் மறுமணம் செய்துக் கொள்ளவில்லை. தாயற்ற பெண் என்ற காரணத்தால் அவள் மீது அவருக்கு இரட்டிப்பான பாசம் விழுந்தது. ஆகவே அன்றிலிருந்து இன்று வரை வீட்டில் மட்டுமல்ல மார்க்கசகாயத்தின் செல்வாக்கு விழும் இடங்களில் கூட கோமதி வைத்தது தான் சட்டம்.

மார்க்கசகாயம் கோமதியை நன்றாகப் படிக்க வைத்திருந்தார். மேற்கொண்டு அவளாக படிக்க இஷ்டப் படாததால் தான் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து அவளை வீட்டில் வைத்திருந்தார்.

பெண்ணுக்கு கல்யாணம் செய்து பார்க்க வேண்டும் என்ற ஆவல் மார்க்கசகாயத்திற்கு நீண்ட நாட்களாக இருந்தது. ஆனால் மகளின் சம்மதத்தைப் பெறுவது அவருக்குப் பெரும்பாடாக இருந்தது.

தனக்கு மாப்பிள்ளையாகத் தகுதியுள்ள இளைஞர்களையெல்லாம் வரவழைத்து ஏதாவது ஒரு சாக்கில் அடிக்கடி விருந்துகள் நடத்துவார். அவர்களுடன் கோமதியை தாராளமாகப் பழக விடுவார். ஆனால் அவர் எதிர் பார்ப்பதற்கு மாறாக கோமதி அந்த இளைஞர்களின் குணாதிசயங்களைக் கிண்டல் செய்து சிரிப்பதோடு விஷயத்தை முடித்து விடுவாள். அதற்குக் காரணமும் இருந்தது. கோமதியை மணக்க விரும்பும் எந்த இளைஞனும் அவளுடைய தந்தையின் செல்வத்தை—மதிப்பைக்கண்டு பிரமிப்பவனாகத்தான் இருந்தான். கோமதியை மணப்பதன் மூலம் தொழில் துறையில் மார்க்க சகாயத்தால் கை தூக்கிவிடப்

படலாம் என்று நம்புபவர்களும், அவருடைய திரண்ட சொத்துக்கு அதிபதியாகிவிடலாம் என்று கனவு காண்பவர்களும் தான் அவளைச் சுற்றி வட்டமிட்டனர். இவர்களைக் காணும் போதெல்லாம் கோமதிக்கு ஆத்திரம் தான் உண்டாகும். "திருமணம்" என்ற எண்ணம் வரும்போதெல்லாம் அவளுக்கு கல்லூரியில் தன் வகுப்பில் படித்த நாராயணனின் நினைவு வரும். ஆனால் அவனைப் பற்றி ஒரு விபரமும் தெரியாதே; அத்துடன் இந்த விஷயத்தை மனம்விட்டு தந்தையிடம் எப்படிச் சொல்ல முடியும்; ஆகவே உள்ளத்து உணர்ச்சிகளை மறைத்துக் கொண்டு மேலுக்கு மகிழ்ச்சியாகவே அவள் காலத்தை ஓட்டினாள்.

மார்க்கசகாயம் தன் வீட்டுக்கு வெகு தூரத்தில் ஊரின் எல்லையைத் தாண்டிய அழகிய இடத்தில் ஒரு பூந்தோட்டத்தை நிர்மாணித்து அதன் நடுவில் பங்களா ஒன்றையும் கட்டி வைத்திருந்தார். சிக்கலான வழக்குகள் வரும்போது அமைதியாக இருந்து ஆராய்வதற்கும், ஓய்வு பெறுவதற்கும், மாலையில் காற்று வாங்குவதற்கும் மார்க்க சகாயம் அந்த பங்களாவை பயன் படுத்துவது வழக்கம். மாலை நேரங்களில் கோமதி தந்தையுடன் சேர்ந்து இங்கே உலாவ வருவாள். தந்தைக்கு ஏதாவது வேலையிருந்தால் டிரைவரை காரை எடுக்கச் சொல்லி அவள் தனியாகவும் வந்து நீண்ட நேரம் தங்கியிருந்து செல்லுவாள்.

அன்று கோமதி தனியாகவே தோட்ட பங்களாவுக்கு வந்திருந்தாள். அந்தி மயங்கி இருட்டத்தொடங்கிற்று. காவல்காரன் மின்சார விளக்குகளை எரிய விடுவதைக் கண்டதும் டிரைவரைக் கூப்பிட்டு காரை எடுக்கச் சொன்னாள். தோட்டத்தின் தலைவாசல் பக்கம் நின்றிருந்த காரை, பங்களா வாசலுக்கு கொண்டுவரச் சென்ற டிரைவர் வெகு நேரமாகத் திரும்பாததைக் கண்ட கோமதி தோட்ட வாசலை நோக்கி நடந்தாள்.

அங்கே காருக்கு முன்னால் டிரைவர் பரபரப்புடன் ஏதோ செய்துக் கொண்டிருப்பதைக் கண்டு அருகில் நெருங்கினாள். யாரோ ஒரு மனிதனை மடியில் கிடத்தி டிரைவர் அவன் வாயில் தண்ணீர் விட்டுக் கொண்டிருந்தான். அருகில் நின்ற காவல்காரன் மேல் துண்டால் அந்த மனிதனின் முகத்தில் காற்றுவர வீசிக் கொண்டிருந்தான்.

"என்ன இது?" என்று கேட்டாள் கோமதி.

"யாரோ தெரியலிங்க. இந்தப் பக்கம் நடந்து வந்தவர் திடீரென்று மயக்கமா கீழே விழுந்து விட்டார்" என்றான் காவல்காரன்.

கோமதியின் மனதில் குபீரென ஏதோ ஒரு அனுதாப உணர்ச்சி பரவியது. "ஒன்றும் ஆபத்தில்லையே" என்று அந்த மனிதனைக் குனிந்து பார்த்தாள். இளைஞன் தான். வாடி வதங்கி சோர்ந்து கிடந்தான். முகமெல்லாம் மெல்லிய தாடி அரும்பியிருந்தது. நிதானித்துக் கவனித்த கோமதிக்கு அந்த முகம் மிகவும் பழக்கப் பட்டது போலத் தோன்றியது, ஆனால் நினைவுக்கு வரவில்லை.

"இங்கு காப்பி கிடைக்குமா" என்று கேட்டாள் கோமதி.

"பக்கத்திலே ஒரு ஓட்டல் இருக்குதுங்க" என்றான் காவல்காரன்.

கோமதி மணிபர்ஸைத் திறந்து சில்லறையை எடுத்துக் கொடுத்து "சீக்கிரம் சூடாக காப்பி வாங்கி வா" என்று உத்திரவிட்டாள். காவல்காரன் ஓடினான்.

கோமதி டிரைவரைப் பார்த்து "இவரை நான் கவனித்துக் கொள்கிறேன். நீ காரை எடுத்துப் போய் நமது டாக்டரை கூட்டிக் கொண்டு வா" என்றாள்.

டிரைவர் தயக்கத்தோடு கோமதியைப் பார்த்தான்.

"என்ன?" என்று கோமதி எரிந்து விழுந்தாள்.

டிரைவர் தலையைச் சொரிந்துக்கொண்டே "இந்த ஆள் யாரென்று நமக்குத் தெரியாது. ஏதோ காப்பியைக் கொடுத்து பார்ப்போம். பிரக்ஞை வராவிட்டால் பேசாமல் போலீசுக்கு தெரிவித்து விட்டு, நம்மபாட்டுக்கு போயிடுவோம். ஏதாவது வம்பு கிம்பு வந்து சேர்ந்தா........" என்று சாங்கோபாங்கமாக உபதேசம் செய்யத் தொடங்கினான்.

"நீ போகப் போகிறாயா' இல்லையா!" என்று கோமதி ஒரு அதட்டல் போடவே டிரைவர் அந்த இளைஞனைத் தரையில் கிடத்திவிட்டு காரை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

காவல்காரன் கொண்டு வந்த காபியை கோமதி அந்த இளைஞனுக்குப் புகட்டினாள். சூடான காபி உள்ளே சென்ற பின்பு அவன் உடலில் சற்று சலனம் ஏற்பட்டது. கண்களை மெல்ல விழித்து மேலே நோக்கினான். கோமதி அவன் பக்கம் குனிந்து "என்ன வேண்டும்" என்று ஆவலுடன் வினவினாள். இளைஞன் ஆச்சரியத்துடன் கோமதியின் முகத்தை உற்று நோக்கிவிட்டு,

ஒன்றும் தேவையில்லை என்பதற்கு அடையாளமாக தலையை அசைத்தான். பிறகு தட்டித் தடுமாறிக் கொண்டு எழுந்து நிற்க முயன்றான்.

கோமதி காவல்காரனை நோக்கி "இவரை மெல்ல பிடித்து பங்களாவுக்குக் கொண்டு வா" என்று கூறிவிட்டு முன்னால் பங்களாவுக்குச் சென்று அங்கே இளைஞன் உட்காருவதற்கு வேண்டிய சில சவுகரியங்களைச் செய்து வைத்தாள்.

காவல்காரன் உதவியுடன் வந்த இளைஞன் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபின் அந்த ஹாலின் சூழ்நிலையில் ஒரு தடவை கண்களை ஓட்டினான்.

பிறகு கோமதியை ஆழ்ந்து நோக்கினான். உடனே கண்களை மூடிக்கொண்டு எதைப் பற்றியோ யோசிக்க ஆரம்பித்தான். கோமதியிடம் அவன் ஏதோ சொல்லத் தொடங்கிய போது டிரைவர் டாக்டருடன் உள்ளே வரவே நிறுத்திக்கொண்டான்.

டாக்டர் இளைஞனைப் பரிசோதனை செய்தார். சோதனை முடிந்தபின் கோமதியைத் தனியே அழைத்து ''அபாயகரமாக ஒன்றுமே இல்லை. பலவீனமே முக்கிய காரணம். நீண்ட நாட்களாக இவர் சாப்பிடாமல் இருந்திருக்க வேண்டும். கொஞ்சம் ஜாக்கிரதையாகவும் சீராகவும் உணவு புகட்டி, தகுந்த டானிக்குகள் சாப்பிட்டாலே போதும். உடல் நிலை திருந்திவிடும்'' என்று கூறி, காலையில் வீட்டில் வந்து ஒரு தடவை பரிசோதனை செய்வதாக அறிவித்துவிட்டு, விடை பெற்றுக் கொண்டார்.

டாக்டர் போன பிறகு இளைஞன் கோமதியை அன்போடு நோக்கி ''நான் உங்களுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்காக அதிக சிரமம் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்'' என்றான்.

கோமதி பதிலொன்றும் பேசவில்லை. அந்த இளைஞனை நினைவுபடுத்திப் பார்க்கும் முயற்சியில் அவள் மூழ்கியிருந்தாள்.

''எனக்கு ஒரு சந்தேகம்.... ஆனால் அது தவறாகவும் இருக்கலாம்'' என்றான் இளைஞன் மெதுவான குரலில்.

''என்ன ?''

''கல்லூரியில் நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில் என் வகுப்பில் உங்கள் மாதிரி....''

''ஓ.... நீங்கள் நாராயணன் அல்லவா'' என்று கோமதி மகிழ்ச்சியால் கூச்சலிட்டாள்.

''என் யூகம் சரிதான்....'' என்று புன்னகை பூத்தான் இளைஞன்—நாராயணன்.

பிறகு அவன் வெளியே புறப்படுவதற்கான ஆயத்தங்களை செய்யத் தொடங்கினான்.

''என்ன இது.... நீங்கள் போகக்கூடாது....'' என்று பரபரப்புடன் தடுத்தாள்.

நாராயணன் சிரித்துக் கொண்டு "உங்களுக்கு சுமையின் பளு தெரியவில்லை. அப்புறம் கனம் தலையில் அழுத்தும் போது நீங்கள் என்னை வெறுக்க வேண்டி நேரிடும்...." என்றான்.

"பளுவை சுமக்கத் தயாராகிறவர்களுக்கு அதன் கனத்தையும் நிச்சயம் தாங்க முடியும். உங்களுக்கு அந்த கவலையே வேண்டாம்".

"நான் 'பளு' என்று குறிப்பிட்டது சில நாட்கள் என்னைப் பராமரிக்கும் செலவைப் பற்றியல்ல. இப்பொழுது நான் இருக்கும் நிலையில் கொஞ்ச நாள் என்னையே யாரிடமாவது ஒப்படைத்து விடுவது நல்லது என்றுதான் தோன்றுகிறது. நான் உங்களை நம்பலாம். ஆனால்........

"என்ன ஆனல்...?" என்று கோமதி குறுக்கிட்டாள்.

"என் உடல் நிலை சற்று குணமாகும்வரை நான் உங்கள் வீட்டில் தங்குவதை உங்கள் பெற்றோர் அனுமதிக்க வேண்டும். அவர்கள் மனம் கசந்து........"

"நல்ல வேளை! என்னமோ, ஏதோ என்று பயந்து போய் விட்டேன். எனக்கு அம்மா கிடையாது. நான் சிறு பெண்ணாக இருக்கும்போதே போய் விட்டாள். அப்பா இருக்கிறார். இதுவரை நான் கிறிய கோட்டை அவர் தாண்டியது கிடையாது. இனி மாறிவிடுவார் என்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை. போதுமா?...."

நாராயணன் புன்னகையுடன் "அப்போ நான் பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஆனல் ஒன்று, நான் தங்கியிருப்பதால் உங்களுக்கு ஏதாவது அசவுகரியம் என்று தெரிந்தால் மனதில் வைக்காமல் சொல்லி விடுங்கள். அப்பொழுதே நான் மகிழ்ச்சியுடன் வெளியேறி விடுகிறேன். இது என் வேண்டுகோள்."

இதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு என்று கோமதி கருதினள். ஆகவே அவன் வார்த்தைகளைக் காதில் போட்டுக் கொள்ளாமலே டிரைவரை அழைத்து காரை எடுக்கச் சொன்னள்.

வீட்டுக்கு வந்ததும் கோமதி நாராயணனை தன் அறையில் உட்கார வைத்துவிட்டு தந்தையின் அறைக்குச் சென்றாள். மார்க்கசகாயம் அவசரமாக உடுத்திக் கொண்டு வெளியே புறப்படத் தயாராகயிருந்தார். கோமதி மெல்ல நாராயணன் விஷயத்தைக் கூறி "அவர் என்னுடன் கல்லூரியில் படித்தவர். ஏதோ சங்கடமான நிலையில் இருப்பதுபோலத் தெரிகிறது. உடல் நிலை சீர்படும் வரை இங்கேயே தங்கும்படி நானகவே வேண்டிக் கொண்டேன்........" என்று தயக்கத்தோடு தந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

மார்க்க சகாயத்திற்கு மகிழ்ச்சி பொங்கியது. 'ஒரு வேளை இவள் அந்த பையனைக் காதலித்து அவனை மணக்க விரும்பினல் பழம் நழுவிப் பாலில் விழுந்த மாதிரி ஆகிவிடுமே....' என்ற இனிய எண்ணம் அவர் மனதில் உருண்டது. கோமதி ஒரு இளைஞனைக் காதலிக்கிருள் என்ருள் அவன் நிச்சயம் உயர்ந்த மனப் பண்புள்ளவனைத் தான் இருப்பான் என்பது அவருடைய நம்பிக்கை. அவர் ஆனந்தம் பொங்க "இதற்கெல்லாம் கூடவா என்னைக் கேட்க வேண்டும். அவனுக்கு இங்கு எவ்வளவு காலம் தங்கியிருக்க விருப்பமோ தங்கியிருக்கட்டும். விகற்பமாக ஒன்

றும் கருத வேண்டாம் என்று சொல். சொந்த வீடு மாதிரி பழகட்டும். ஒரு அவசர வேலையாக வெளியே போகிறேன். திரும்பிவர பத்து மணிக்கு மேலாகும். எனக்காக காத்திருக்க வேண்டாம். உன் நண்பரை காலையில் சந்தித்து நான் பேசுகிறேன்........'' என்று கூறி விட்டுப் போய்விட்டார். அன்றிரவுதான் கோமதி தன் தந்தையிடம் மாறுபாடான உத்தரவைப் பெற்று வியப்பும் வேதனையும் அடைந்தாள்.

படுக்கையில் வந்து படுத்துக் கொண்ட கோமதிக்கு தூக்கம் வரவில்லை. மாலையில் நாராயணன் தங்கியிருப்பதற்கு அவ்வளவு பரிவோடு சம்மதமளித்தவர் சில மணி நேரங்களுக்குள் இப்படி ஏன் தடம் புரண்டு செல்ல வேண்டும்? கோமதி எப்படி எப்படியோ மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டும், மார்க்கசகாயத்தின் மனமாற்றத்துக்கான காரணத்தை புரிந்து கொள்ள முடியவில்லை.

2

தோட்ட பங்களாவில் கோமதியின் விசேஷ பராமரிப்பின் பயனாக நாராயணனின் உடல் நிலை மிகவும் தேறிவிட்டது.

திடீரென்று தன்னைத் தோட்ட பங்களாவுக்கு மாற்றியதைப் பற்றி அவன் அதிகமாக சிந்திக்கவில்லை. வீட்டில் ஏதாவது வசதிக் குறைவு இருக்கலாம். அதன் காரணமாக மாற்றியிருக்கலாம் என்று நினைத்தான். ஆனால் ஒரு விஷயம் மட்டும் அவன் கவனத்தில் படாமல் இல்லை. அவன் கோமதியின் தந்தையை சந்தித்து நன்றி செலுத்த விரும்பினான். அவர் யார் என்பதைப் புரிந்துகொள்ள மிகவும் ஆசைப்



''ஏதாவது சிக்கலான பிரச்னையொன்றில் தலையிட்டு வெற்றிகரமாக சமாளித்து புகழடைய விரும்புகிறேன் என்ன செய்யலாம்?''

''கலியாணம் செய்துக்கொள். போதும்,''

பட்டான். கோமதி இந்த பிரச்னை வரும் போதெல்லாம் சாமர்த்தியமாக மழுப்பி பேச்சை மாற்றி விடுவாள். இது நாராயணனுக்கு வியப்பாக இருந்தது. ஒருவேளை கோமதியின் இந்தச் செயலை அவள் தந்தை விரும்பவில்லை போலிருக்கிறது என்ற எண்ணமும் அவன் மனதில் ஏற்பட்டது. அதனால் பல தடவை அவன் புறப்பட்டுப் போய்விட முயன்றான். ''எங்கே போகப் போகிறீர்கள்'' என்று கேட்டபோது அவன் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. ''அனாதைக்கு போக்கிடந்தானா இல்லை'' என்று வேடிக்கையாகக் கூறி விடுவான். ''இங்கேயே ஏதாவது ஒரு வேலை பார்த்துக் கொண்டு தங்கி விடுங்கள்'' என்று கோமதி சில சமயங்களில் ஆலோசனை சொல்லிப்

பார்த்தாள். ''என் வாழ்நாளில் நான் முக்கியமான ஒரு காரியத்தை சாதித்தாக வேண்டியிருக்கிறது. அதுவரையில் சுய வாழ்வைப் பற்றி நான் அக்கரைபடப் போவதில்லை'' என்று அவன் தீர்மானமாக அறிவித்தான். இதைக் கூறும்போதுமட்டும் புன்னகைத் தவழும் அவன் முகத்தில் ஒரு கொடுரம் பாய்ந்து பரவி நிற்கும்.

ஆனால் கோமதி அவனைப் போக விடவில்லை. வேளா வேளைக்கு காரில் அவளே சாப்பாடு எடுத்து வந்துவிடுவாள். இரவு எட்டு மணி வரை அவனுடன் பேசிக் கொண்டிருப்பாள். பிறகு அவனுக்கு படுக்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்துக் கொடுத்துவிட்டு வீடு திரும்புவாள்.

கோமதிக்கும் நாராயணன் சம்பந்தமான புதிர் விடுபடவே இல்லை. எவ்வளவோ முயன்றும் நாராயணனின் சொந்த விஷயங்களைக்கிரகிக்க முடியவில்லை. அவனுடையபெற்றோர்கள் உயிருடன் இல்லை என்பதையும், அவனைப் பற்றிக் கவலைப்படக் கூடிய உற்றார் உறவினர் ஒருவர் கூட கிடையாது என்பதையும் மட்டும் கோமதி தெரிந்து வைத்திருந்தாள்.

நெருங்கிப் பழக வேண்டி நேர்ந்த அந்த சொற்ப காலத்தில் கோமதி நாராயணனிடம் தன் மனதைப் பரிபூரணமாகப் பறிகொடுத்து விட்டாள். அவள் அப்படியொன்றும் சபல சித்தங்கொண்ட சாதாரண பெண்ணல்ல. நாராயணன்மீது அவள் கொண்ட பற்றுதல், கண்டதும் காதல் ரகத்தைச் சேர்ந்ததல்ல. தீர ஆலோசித்த பிறகே அவள் அந்த தீர்மானத்திற்கு வந்திருந்தாள்.

கோமதி இதுவரை தானுகவும், தந்தையின் வற்புறுத்தலினுலும் பெரிய பெரிய பட்டங்களைப் பெற்ற எத்தனையோ இளைஞர்களிடம் பழகி இருக்கிருள். தன் செல்வத்தையும், அழகையும் கண்டபடி துதி செய்து பைத்தியங்கள் போல சுற்றி வந்த அவர்களையும், சாந்தமும் கம்பீரமும், பெருந்தன்மையும் நிறைந்த நாராயணனையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இவனது கால் தூசுக்கும் கூட அவர்கள் சமானமாக மாட்டார்கள் என்றே கோமதிக்குத் தோன்றிற்று.

நாராயணன் வந்ததிலிருந்து மார்க்கசகாயம் நிம்மதியை அறவே இழந்து அவஸ்தைப் பட்டார். மறந்துகூட அவர் நாராயணனைப்பற்றி விசாரிப்பதில்லை. எப்பொழுதாவது கோமதி வலிய அவன் பேச்சை எடுத்தால் அதைக் கேட்கவே விரும்பாதவர்போல எழுந்து போய் விடுவார். அல்லது பேச்சை மாற்றி வேறு ஏதாவது பேச ஆரம்பித்து விடுவார். தந்தையின் இந்தப் போக்கை புரிந்து கொள்ள கோமதி எத்தனையோ முயற்சிகள் செய்து தோல்வியுற்ருள்,

ஒரு நாள் விநோதமான சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அன்று சாயங்காலநேரத்தில் தோட்ட பங்களாவின் முன்பக்க புல்வெளியில் நாராயணனும், கோமதியும் இரண்டு பிரம்பு நாற்காலிகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது தோட்டத்தின் காம்பவுண்ட் சுவருக்கு அப்பால் சென்றுக் கொண்டிருந்த மோட்டாரைப் பார்த்ததும் நாராயணன் துள்ளிக் குதித்து எழுந்தான். அவன் முகம் 'குப்' பெனச் சிவந்தது, பற்களை நற,

நற வெனக் கடித்துக்கொண்டு மோட்டாரின் உள்ளே பின்புறம் அமர்ந்திருந்த மனிதரைக் கவனித்தான். அவர் மார்க்கசகாயம்....!

மோட்டார் மறைந்த பின்பு நாராயணன் சுய நிலை அடைந்தான். திகைப்புடன் தன்னையே கவனித்துக்கொண்டு நிற்கும் கோமதியைக் கண்டதும் சற்று முன் இருந்த தன் நிலையை எண்ணி அவன் வெட்கமடைந்து சோர்ந்து உட்கார்ந்தான்.

தந்தையின் மனப் போக்கையும், நாராயணனின் அந்த நடவடிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் அவர்கள் இருவருக்குமிடையே ஏதோ ஒரு ரகசியம் மறைந்திருக்கிறது என்று கோமதி கண்டு கொண்டாள். அந்த ரகசியம் ஏதோ சில விபரீத நிகழ்ச்சிகளின் அடிப்படை என்றும் அவள் யூகித்தாள். இந்த மர்மத்தின் முடிவு என்ன ஆகுமோ என்பதை நினைக்கும் போது கோமதியின் மனம் குழம்பத் தொடங்கிற்று. தான் நடந்து கொண்ட நிலையை ஏதோ சாதாரண நிகழ்ச்சி என மதிக்குமாறு பேசி நாராயணன் மழுப்பவே இது சம்பந்தமாக அவள் அழுத்தமாக எதையும் கேட்காமல் விட்டுவிட்டாள்.

3

அன்று காலையில் தந்தையின் மேஜையில் அலங்கோலமாகக் கிடந்த புத்தகங்களையும், காகிதங்களையும் கோமதி ஒழுங்குபடுத்தி வைத்துக் கொண்டிருந்தாள். அப்போது மார்க்கசகாயம் பின் கட்டில் குளித்துக் கொண்டிருந்தார்.

மேஜையின் மீது விரித்து வைக்கப் பட்டிருந்த ஒரு பெரிய சட்டப்புத்தகத்தை மூடி அலமாரியில் வைப்பதற்காக கோமதி எடுத்தபோது, அதன் அடியில் ஒரு துண்டுக் கடிதம் இருப்பதைக் கவனித்தாள். சட்டங்கள் சம்பந்தமாக எதையாவது குறித்து வைத்திருப்பார் என்ற கருத்துடன் அலட்சியமாகப் படித்தவள் தீயை மிதித்தவள் போலத் திடுக்கிட்டாள். கடிதத்தில் நேற்றைய தேதி இடப்பட்டிருந்தது. அவ்வூர் போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு அக்கடிதம் எழுதப் பட்டிருந்தது.

"...தர்மபுரம் ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவிட்ட கைதி நாராயணன் என் வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கிறான். தக்க பந்தோபஸ்துடன் வந்தால் கைது செய்துவிடலாம்...."

இதுதான் கடிதம்.

நாராயணன் ஒரு கைதியாக-அதிலும் சிறையிலிருந்து தப்பி ஓடி வந்த கைதியாக இருக்க முடியும் என்பதை கோமதியின் மனதாலும் சிந்திக்க முடியவில்லை. "அப்படியே இருந்தாலும் மூடிவைத்துக் கழுத்தை அறுப்பது போல தங்குவதற்கு புகலிடம் அளித்து விட்டு பிறகு போலீஸிடம் காட்டிக் கொடுப்பதா? முதலிலேயே இதைத் தெளிவாக்கியிருந்தால் அப்பொழுதே அவனை எங்கேயாவது அனுப்பி விட்டிருக்கலாமே".

கோமதிக்கு தந்தை மீது சகிக்க இயலாத ஆத்திரமும், அதே நேரத்தில் நாராயணன் மீது அளவுக்கு மீறிய கவலையும் ஏற்பட்டது. "கடிதம் நேற்றே

அனுப்பப் பட்டிருக்கலாம். ஒரு வேளை இரவே நாராயணனைக் கைது செய்துக் கொண்டு போய் இருப்பார்களோ! அப்படி நடந்திராவிட்டால் நாராயணனை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும்'' என்று கோமதி திடமாக முடிவு கட்டினாள். ஆனால் ஒருசங்கடம். நாராயணன் தப்பிவிட்டால் போலீஸ் வட்டாரத்தில் மார்க்கசகாயத்திற்கு இருக்கும் மதிப்பு குறைந்து விடும். அத்துடன் தப்பி வந்த கைதி தன் வீட்டில் இருப்பதாக அறிவித்துவிட்டு, பிறகு இல்லை என்றால் அது ஒரு குற்றமாகவும் கருதப்படலாம் இரண்டு பக்கமும் கோமதிக்கு இடியாக இருந்தது.

மார்க்கசகாயம் குளித்து விட்டு உள்ளே வரவே கோமதி ஒன்றும் அறியாதவள் போல மேஜையை விட்டு நகர்ந்தாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மார்க்க சகாயம் சிற்றுண்டியருந்தி வெளியே புறப்பட்டு விட்டார். அவர் சென்ற உடனே கோமதி அவசர அவசரமாக தோட்ட பங்களாவை நோக்கி விரைந்து சென்றாள்.

பங்களா வாசலை அடைந்ததும் அங்கு நின்றிருந்த காவல் காரனை ''உள்ளே அந்த ஐயா இருக்கிறாரா?'' என்று விசாரித்தாள். ''இருக்கிறார்'' என்ற பதிலைக் கேட்ட பிறகுதான் அவளுக்கு உயிர் வந்தது.

நாராயணன் தங்கியிருந்த அறைக்கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. ''இப்படி காலை நேரத்தில் கதவை அடைத்துக் கொண்டு என்ன செய்கிறார்!'' என்று வியப்படைந்த கோமதி கதவைத் தட்ட கையெடுத்தாள். ஆனால் என்னதான் செய்கிறான் என்பதைப் பார்க்க வேண்டும் என்று ஆவலுடன் கதவின் சாவித் துவாரத்தின் வழியாகக் கவனித்தாள்.

உள்ளே மேஜையின் முன்னால் நாராயணன் அமர்ந்திருந்தான். பளப்பளப்பான சொருகுக் கத்தி ஒன்று அவன் கைகளில் மின்னிக் கொண்டிருந்தது. அதை அவன் உற்று பார்த்தவண்ணம் இருந்தான்.

கோமதிக்கு திகீர் என்றது. ஒரு வேளை போலீசாரிடம் மீண்டும் அகப்பட்டு விடுவோம் என்ற அச்சத்தால் தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கிறாரோ'' என்ற எண்ணம் அவள் மனதில் சட்டெனப் பரவியது. தன்னையும் மீறி எழுந்த ஆவேசத்துடன் கதவை தட தட வெனத் தட்டினாள்.

உள்ளே இருந்த நாராயணன் ''யாரது....?'' என்று பீதியடைந்த குரலில் கேட்டான்.

''நான்....நான்....கோமதி'' என்று தெளிவற்று கோமதி உளறினாள்.

நாராயணன் கதவைத் திறந்தான். அவன் தலை மயிர் கலைந்து கிடந்தது. உடை யெல்லாம் வியர்வையால் நனைந்திருந்தது அந்தத் தோற்றத்தில் அவனைப் பார்க்கவே பயங்கரமாக இருந்தது. அப்போது அவன் கையில் கத்தியில்லை. அதை எங்கோ மறைத்து வைத்து விட்டிருந்தான்.

இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் யாரும் பேசவில்லை. மௌனமாக உள்ளே சென்று அமர்ந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)

காதலின் குரல்

...பூவை. எஸ். ஆறுமுகம்...

ஞாயிற்றுக்கிழமை. வாரத்தின் இந்த நாள் வாழ்க்கைக்கே வாய்ப்பான ஒரு நாள் போல. இயந்திர வாழ்விற்கு இதமான விடுமுறையும் அன்றுதான். அப்போதுதானே நமக்கெல்லாம் நம்மைப் பற்றி நினைக்க வருகிறது; வாழ்க்கையைப் பற்றி நினைக்க வருகிறது. இயந்திர கதியோடு இயங்கப் பெறும் ஆபீஸ் உலகிலிருந்து 'விடுதலை' பெறும் நாள் அதுவேயல்லவா?

ஞாயிற்றுக்கிழமை விடிந்தால், மூர்த்திக்கு இப்படிப்பட்ட சிந்தனைகள் மனத்தில் தோன்றும். எண்ணித் தீர்ப்பான்; சிரித்துக் கொள்ளுவதும் உண்டு. வாய்ப்பான ஒரு நாள் லீவை வாகாய்ச் செலவழிப்பதில் அவனுக்குக் கவனம் மிக உண்டு. சில திட்டங்கள்—காலை காபி பலகாரம், மத்தியானம் சாப்பாடு, பின்னர் கொஞ்ச நேரம் ஓய்வு—அதாவது உறக்கம், பிறகு கடற்கரை அல்லது சினிமா ஆகிய இத்திட்டங்களுக்கு இணக்கம் செலுத்துவது. ஒருவனுக் அவன் மட்டும் அல்ல, இருவர் உண்டு. அது அவன் துணைவி பாமா. ஜோடி என்றால் இப்படியல்லவா பெட்டியும் பேழையுமாகப் பொருந்த வேண்டும்! அக்கம்பக்கத்திலுள்ளவர்கள், அவன் நண்பர்கள், உறவினர்கள், அவள் சிநேகிதிகள், தெரிந்தவர்கள் ஒருவர் பாக்கி விடாமல் அவ்விரு இளம் தம்பதிகளைப்பற்றி அப்படித்தான் அதிசயப்பட்டுப் போனார்கள். ஆனந்தமும் பட்டார்கள். 'நீ யாரோ, நான் யாரோ?', என்றிருந்த அவர்கள் இருவரையும் 'நான் உன் கணவன்; நீ என் மனைவி' என்ற பந்தப் பிணைப்பிற்கு இடம் அளித்து வைத்தது, ஒன்றாக ஜோடி சேர்த்துவிட்டது, அவர்கள் இருவரது ஜாதகங்களேயாகும். திருமணமாகி ஒரு வருஷம் ஆகப் போகிறது. நேற்று நடந்தாற் போலிருக்கிறதாம் அவர்கள் இரண்டு பேருக்கும். இதுவும் அவர்கள் இதயத்து வாய்மொழி. நல்லஜோடிதான்.

நிமிர்ந்தான். மேஜைமீதிருந்த 'டைம்பீஸ்' மணி இரண்டெனச் சொல்லியது. தலையணையில் பதித்திருந்த கையை நீக்கி விட்டுப்படுத்தான். பிரித்திருந்த புத்தகம் அப்படியே கிடந்தது. அவன் பார்வை ஹாலின் உட்புறம் போய்விட்டுத் திரும்பியது சற்றுமுன் அந்த வாரப்பத்திரிகை ஒன்றைப் படித்துக்

கொண்டிருந்த பாமா இப்பொழுது நல்ல உறக்கத்தின் வசப்பட்டிருப்பதைக் கண்டான்.

'நாலு மணி அடித்ததோ இல்லையோ, பாமா டிரஸ் செய்து கொண்டு புறப்பட்டு விடுவாள். அவள் திட்டம் என்னவோ.... ஊம்; ஞாயிற்றுக் கிழமையை உருப்படியாகக் கழித்தாக வேண்டும், அது தானே நம்ப திட்டமும்; என்று மனம் நினைத்த போது அவனுக்கு ஒருவகைப் பெருமிதம் ஊர்ந்தது. மனைவியின் போக்குக்கு தான் அனுசரித்துப் போவதில் விளைந்த பெருமிதம் அது. ஏன், அவளும் அப்படித்தானே....! சொல்லப் போனல் இது விஷயத்தில் பாமாவிற்குத்தானே நல்ல சர்டிபிகேட் கொடுக்கவேண்டும்.

சற்று ஓய்வு கொண்டால் தேவலாம் என்றிருந்தது. கண்களை மூடிப்பார்த்தான். தூக்கம் வந்து விடுமா என்ன! உள் நெஞ்சம் எதையோ ஒன்றை நினைவு படுத்திவிட்டது. வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். அவன் அவசரமும் போக்கும் கொஞ்சம் விசித்திரமாக இருந்தது. கிறுக்குப் பிடித்தவன் போல வாசல் திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டான் உடம்பை மூட துண்டு கூட இல்லை. தலைமயிர் கண்ணை மறைத்தது. தலையை நிமிர்த்தி விட்டான்.

தனிமை கதை சொல்லியது.

பி.ஏ.பட்டம். பரீட்சை தேறியதும்........

கதை தொடரவில்லை. அவனுக்கு ஏனே கண்களில் கலக்கம் கண்டது. உள்ளே போகத் திரும்பினன். மறுபடியும் உள் நெஞ்சம் முன்போல 'அந்த நினைவை' ஞாபகப்படுத்தியது. அதே சமயம் தன் பெயரை அழைத்த குரல் கேட்டுத் திரும்பினன். வாசு நின்ருன். அவன் மூர்த்தியுடன் ஒரே செக்ஷனில் வேலை செய்பவன். நண்பர்கள்.

"மூர்த்தி, இந்த லெட்டர் உங்களுக்குள்ளது. எப்படியோ என் மேஜைக்கு வந்தது. கொடுக்க மறந்துவிட்டேன்" என்று சொல்லிக் கவர் ஒன்றை நீட்டிச் சென்ருன் நண்பன்.

'திகீர்' என்றது மூர்த்திக்கு. கடிதத்திற்குரிய விலாசதார் இல்லாததால் எழுதிய அவனுக்கே அது திரும்பியிருந்தது. தெறித்து விழுந்த கண்ணீர் மணிகளுடன், கடிதத்தைப் பற்றியவாறு வெறி கொண்டவன் போல உள்ளே ஓடினன். ஓடினவன் படுக்கையில் விழுந்தான். அவன் இதயம் துயரத்தைக் கட்டுப்படுத்த வலுவிழந்து தவித்தது; சற்றுமுன் அவன் மனம் ஞாபகப்படுத்தியதே அந்த நினைவுக்குப் பதில் சொல்லவேண்டிய அக்கடிதம், பதிலே சொல்லாமல் வாய் மூடிக் கிடந்தது. அவன் இதயம் அடித்துக் கொண்டது; கலவரம் காட்டியது; கலக்கம் பேசியது.

"வாரம் தப்பினலும் அவள் கடிதம் வரத் தவறமாட்டாதே. ஏன் இந்தத் தடவைமட்டும் இப்படிச் சோதனைபோல! நான் அவளுக்கு எழுதிய கடிதம் எனக்கே கடைசியில் வந்து சேர்ந்திருக்கிறதே. அவளுக்கு உடம்பு சுகமில்லையா? அல்லது....? என் மனம் நிலையிழந்து, நிம்மதி கெட்டுத் துடிக்கிறதே........ஐயோ!....'

அருகிருந்த மாதா கோவில் 'டாண் டாண்' என்று நாலு முறை ஒலித்து முழக்கம் தெரிவித்தது. மூர்த்தி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். இமைக் கரைகளில் தேங்கியிருந்த நீர் முத்துகள் பிரிக்கப் படாது கிடந்த அந்தக் கடித

உறை மீது சரம்பாய்ந்து விழுந்தன. இதயம் பெருமூச்சை நெட்டித் தள்ளியது. கனவு உலகத்திலிருந்து சற்று விழிப்படைந்தான் மூர்த்தி.

மனைவியின் ஞாபகம் வந்தது. ஏறிட்டுப் பார்த்தான். புறப்படுவதற்குத் தயாராக இருந்தாள் உடை அலங்காரத்துடன்! மறுகணம் மின்னல் பட்டுத் தெறித்து கண்ணைப் பறித்துவிட்டமாதிரி ஒரு தடுமாற்றம் அவன் பார்வையில் காணப்பட்டது. அவனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. கட்டிலைவிட்டுக் கீழிறங்கினான்; நாலு எட்டில் நடந்து ஜன்னல் வழியே கண் பார்வையை வீசினான். அந்த உருவத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு எத்தனை நாழி நின்றானோ! அங்கிருந்து ஒலித்த அந்தக் குரலை உற்றுக் கேட்டான்.

"அம்மா, உங்களை என்னுடன் பிறந்த பிறப்பாக நினைத்துச் சொல்கிறேன், என் கதை ரொம்ப வேடிக்கையானது. இல்லையானால் ஏதுக்கு இப்படிப் பஞ்சையாக, அனாதையாக நான் அலைய வேணும்! என் தலைவிதி இப்படி. நல்ல தலையெழுத்து இருந்திருந்தா, நானும் என் அத்தான் மூர்த்தியும் இந்நேரம் புருஷன்—மனைவியாகிவிட்டிருப்போமே! பாழும் ஜாதகங்கள் எங்கள் இரண்டு பேரையும் பிரித்து விட்டதே. நான் வாழ்க்கைப்பட்டு ஒரு வருஷம் கூட ஆகவில்லை. அதற்குள்ளே நான் இந்தப் புயலிலே என் புருஷனையும் இழந்துவிட்டேன். குடியிருந்த வீடும் கடலுக்குள்ளே அடங்கிவிட்டது. வீசின கையும் வெறுங் கையுமாக இப்போது நான் தெருத் தெருவாக இந்த இரண்டு வாரமாக அலைந்து இன்று தான் பட்டணத்து மண்ணை மிதிக்க முடிந்தது. அதற்கும் ஒரே ஒரு என்னுடைய கடைசி ஆசை தான் காரணம். ஆமாம்; என் அத்தான் மூர்த்தியை எப்படியும் ஒருமுறை, ஒரே ஒரு முறை ஆசை தீரப் பார்த்துவிட வேண்டும்; அப்போது தான் நான் நிம்மதி பெற்ற நெஞ்சோடு இறப்பேன். அம்மா, என்ன அப்படி அதிசயப்படுகிறீர்கள்? எங்கள் காதல் அப்படி. என் அத்தான் இந்தத் தெருவில் தான் இருப்பதாகக் கேள்விப்பட்டேன்........"

சோகச் சுழலில் தொடர்ந்து எவ்வளவு நேரம் அந்தப் பெண் தவித்தாளோ! மூர்த்திக்கு மேற்கொண்டு அவள் சொன்ன வரலாறு காதில் விழவில்லை. அவன் சிந்தனைதான் எங்கெல்லாமோ பரந்து திரிந்து விட்டதே!

"அத்தான்"

மூடியிருந்த விழிகளை திறந்தான். பாமா-அவன் துணைவி தூணில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தாள். அவளது தாமரை முகத்தில் அந்திக் கதிர்கள் சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்தன. கண்ணாமூச்சி ஆட்டத்தை முடித்து விட்டு.

"அத்தான்"

"பாமா"

நாம் அறிய முடியாத விஷயங்கள் நான்கு உண்டு: வானத்தில் பறக்கும் பருந்தின் போக்கு; மலை மீதுள்ள பாம்பின் போக்கு; நடுக் கடலிலுள்ள கப்பலின் போக்கு; ஒரு கன்னிப் பெண்ணுடன் கூடிய ஆடவன் போக்கு

பைபிள்.

"உங்களுக்கு பூமாவைத் தெரியுமல்லவா? அவள் உங்களுக்கு முறைப் பெண்ணும்; நீங்கள் இருவரும் தான் திருமணம் செய்துக் கொள்வதாக இருந்தீர்களாமே. பார்த்தீர்களா என்னிடம் இந்த ரகசியத்தை மட்டும் நம் இரண்டு பேருக்கும் கலியாணமான இந்த ஒரு வருஷம் வரைக்கும் மறைத்து விட்டீர்களே...." என்று நிறுத்திவிட்டு, கணவன் முகத்தை ஆழ்ந்து நோக்கினாள் பாமா. மூர்த்தியின் முகத்தில் ஏதோ ஒரு மாறுதல் விகசித்திருந்தது. அதை அவளும் கவனிக்கத் தவறவில்லை.

கண்சிமிட்டும் வேளை, இடைவேளை போல அத்தம்பதிகளிடேயே திரை விழுந்து நின்றது.

மூர்த்தியின் முகத்திரையில் படீரென்று ஏதோ ஓர் மாற்றம் பிறந்தது. கண் புருவங்கள் மேலேற, நெற்றிமேடு பரந்து விரிந்தது.

"பாமா, நீ சொல்வது விசித்திரமாக இருக்கிறதே. எனக்கு முறைப் பெண் யாருமே இல்லையே. யார் அந்தப் பெண்? இருந்திருந்து என் பெயர் தானா அவளுக்குக் கிடைத்தது? சித்தபேதமோ, என்னவோ, யார் கண்டது? உலகமே வரவர கெட்டு வருகிறது....பாமா உன்னிடம் இதுவரை நான் எந்த விஷயத்தையாவது மறைத்ததுண்டா?...." என்று கூறினான் மூர்த்தி. அவன் முகத்தில் அசடு வழிந்தது.

பாமா பாரிஜாத மலர் போலச் சிரித்தாள். அவள் உதடுகள் வார்த்தைகளைச் சிந்தின; அதில் நையாண்டி முழுக்கக் கலவை கண்டிருந்தது.

"அத்தான், நான் எண்ணியதுபோலத்தான் நடந்துவிட்டது. நிஜமாகவே அந்தப் பெண் பைத்தியம் தான். அப்படித்தான் இருக்க வேணும்! பிடி சோற்றுக்கு என்னென்னமோ கதை சொன்னாள். நல்ல வேளை, சோற்றைப் போட்டு துரத்தி விட்டேன்........ஊம், உலகம் வர வரக் கெட்டுப் போய்விட்டது......!"

பெரும் பாறையைத் தலையில் சுமத்திவிட்ட மாதிரியாக மூர்த்திக்குத் தலை கனத்தது; இதயமும் அப்படித்தான். இதயத்தின் உள்ளே ஏதோ ஒன்று அவனைக் கசக்கிப் பிழிந்தது; உதிரம் சொட்டியது; அவன் நெஞ்சம் புண்ணாகிப் புலம்பியது; மனச் சாட்சி சிரித்தது.

"பாமா, எனக்குத் தலைவலி ரொம்ப ஜாஸ்தியாக இருக்குது. நான் எங்கேயும் கிளம்ப முடியாது. நீ வேணுமானால் புறப்பட்டுப் போய் வா. பர்ஸ் என் கோட் பையில் இருக்குது. கோபிக்கமாட்டாயே.... பாமா...." என்று சொன்னதுதான் தாமதம்; ஓடிப்போய் தன் அறைக்குள் படுக்கையில் 'தடாலெ'ன்று விழுந்தாள். அவள் கண்கள் சிந்தின கண்ணீர் வெள்ளத்திற்கு ஓய்வில்லை; இன்னும் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது.

பிரிக்கப்படாது கிடந்த அந்தக் கடிதத்தைப் பிரித்தான். அவன் விரல்கள் நடுங்கின, அவன் உள்ளத்தைப் போல. படித்தான். அவன் எழுதிய கடிதம் தான் அது.

அன்புள்ள பூமா,

உன் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி, நலம். நலம் கூறு. உன் அன்பு கொழிக்கும் கடிதம் கிடைத்ததும் என் மனம் சொல்

லிலடங்காத சந்தோஷம் கொள்ளுகிறது. உன் இன்ப நினைவு என் தாம்பத்திய வாழ்விற்கு ஆனந்தப் பொழுது போக்காக அமைகிறது. அதனால்தான் நான் மனிதனாக இன்றும் வாழ்ந்து வருகிறேன். நம் காதல் அப்படி. மறு தபாலில் நலம் சொல்லு, அப்போது தான் நான் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியும்.

அன்புள்ள

உன் அத்தான்

மூர்த்தி

"அத்தான். நீர் பாவி. என் காதலை வஞ்சித்துவிட்டீர்...."

யார் இப்படி அலறியது? பூமாவின் குரல் போல இருக்கிறதே?

மூர்த்தி விம்மும் நெஞ்சை அமுந்தப் பற்றிக்கொண்டு திரும்பினான். சுற்றும் முற்றும் பார்த்தான். யாருமில்லை. ஆனால் அவன் முன் ஒரு புகைப் படம் முத்துப்பல் ஒளி சிந்திய வண்ணம் மேஜைமீது கிடந்தது. அது பூமா! அந்தப் படத்தில் பூமாவும் மூர்த்தியும் இருந்தனர்....!

"பூமா, நான் மகாபாவி; மன்னிப்பு என்ற ஒன்றையே பெற இயலாத படுபாவி நான். வாழ வேண்டிய நம் அன்புக் காதலை நான் மடியத்தான் செய்து விட்டேன்.... அடிநாளைய நம் இருவரது அன்பு பற்றி, காதலைக் குறித்து இதுவரை பாமாவிடம் பிரஸ்தாபிக்கவில்லையே என்று தான் சற்றுமுன் நான் உன்னைத் தெரியாது என்று பொய் சொல்லிவிட்டேன். அவளைத் திருப்திப்படுத்தவே அப்படிச் செய்துவிட்டேன். கணப் பொழுது என் நெஞ்சம் கற்பித்த மாற்றம் எப்படி எப்படித் தீவினை வளரச் செய்துவிட்டது பூமா, நீ இந்நேரம் எங்கே போகிறாயோ? ஐயோ, உன் தாலி பாக்கியத்தைக் கூட இழந்துவிட்டாயா? இந்தப் படுபாவியைக் கடைசி முறையாகத் தரிசிக்கத்தான் ஓடி வந்தாயா? பூமா.... ஐயோ....".

மூர்த்தியும் பூமாவும் வினைத் தெரியாத காலந்தொட்டே ஒன்றுபோலப் பழகினவர்கள். அறியாப்பருவம் நீங்கி, அறியும் பருவம் வந்ததும், அவர்கள் அன்பு இரண்டறக் கலந்தது; பண் பெற்றது: வளர்ந்தது. காதல் பிறந்தது. மூர்த்திக்கு உரிமைப் பெண் பூமா. பூமாவிற்கு முறைமை அத்தான் மூர்த்தி. கணவன் மனைவியராகிவிடக் காலத்திற்குத் தவங் கிடந்தனர் காதலர்கள். இரு தரப்புப் பெற்றோர்களும் ஒன்று கலந்த உள்ளங்கொண்ட அவ்விருவரையும் ஒன்றாக்கிவிடக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென முடிவு செய்து, ஒரு சுபதினத்தில் அவ் விருவரது ஜாதகங்களையும் பார்த்தனர். அப்பொழுது தான் அந்த எதிர்பாராத இடி மின்னல் முழங்காமல் இடித்து விட்டது. அவர்கள் ஜாதகங்கள் பொருந்தவில்லை. மூர்த்தியும் பூமாவும் பிரிக்கப்பட்டனர். மூர்த்திக்கு உயிரே போய்விட்டது. பூமா தணலில்பட்ட தளிரானாள். விதி சிரித்தது. கடைசியில் மூர்த்திக்கு பாமா கிடைத்தாள். பூமாவுக்கு நாகப்பட்டினத்து மாப்பிள்ளை கிடைத்தான்.

"அத்தான் நாம் இன்று பிரியப்போகிறோம். ஆனால் இந்த அபலை பூமாவை மட்டும் ஒருக்காலும் மறந்து விடமாட்டீர்களே?...."

''பூமா, யாழ் அதன் ஒலியை மறக்கமுடியுமா? காதல் இதயத்திலே காதலின் குரல் இசைக்காத வேளை ஏது? உன்னை நான் ஒருகணமும் மறக்கமாட்டேன்; மறக்க முடியாது, நம் அன்பு அப்படி; பிணைப்பு அப்படி பாசம் அப்படி.''

பிரிந்தனர் இருவரும். பிரிவுக்குப் பாலமிட்டது அவர்களிடையே பறிமாறிக் கொள்ளப் பெற்ற இருதரப்புக் கடிதங்கள். முன் நாளைக் காதல் கதை நிலவிய அன்புப் பிணைப்பைப் பற்றி எத்தனை கதைகள் சொல்லினவோ?....

பிரமை கொண்டவனைப் போல எழுந்தான்; பைத்தியக்காரனாக ஓடினான், கதவுகளைப் 'படா'ரென்று திறந்து விட்டு.

''அத்தான்''

அங்கு பூமா நிற்கவில்லை; பாமா.... அவர் உயிர்த்துணைவி நின்றிருந்தாள் ஒயிலுடன்.

எதுவும் பாமாவுக்குத் தெரியமாட்டாது.

மூர்த்தி தன் நினைவு பெற்றான். பேய் மனத்தில் மனித மனம் இடம் புகுந்தது. இப்படிப்பட்ட விசித்திரப் போக்கில் தான் 'தெய்வக்குணம்' நுழைந்து விடும் போலும்! இரண்டு கைகளிலும் மாறிமாறிக் கிடந்த போட்டோவும், கடிதமும் அவன் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் அவனுக்கு, தனக்கும் பூமாவுக்குமிடையே

''பூமா.... ஊஹூம்.... பாமா சற்று முன் இங்கே வந்து என்னைத் தேடிய அந்தப்பெண் எங்கே? அவள் தான் என் பூமா, அத்தை பெண். சற்றுமுன் நீ கேட்டதற்கு நான்பொய்சொன்னேன். தவறாக நீ ஏதாகிலும் என்னைப்பற்றி நினைத்துக்கொள்ளப்போகிறாயோ என்ற எண்ணத்தில் அப்படிச் சொன்னேன். பூமாவுக்கும் எனக்கும் இடையே நிலவிய, — நிலவும் அன்பு மாசற்றது; விதி

எங்களை அன்று பிரித்தாலும், இன்று வரை எங்கள் இதயங்கள் அன்புப் பிணைப்பிலிருந்து சிறிதும் தளரவில்லை. பாமா, நீ என்றும் இடம் பெற்றிருக்கும் அளவுக்கு பூமாவும் இடம் பெற்றிருக்கிருள். எங்கள் பாசம் அப்படி. ஆனல் இன்று பூமாவுக்கு நான் துரோகம் செய்துவிட்டேன். என்னை ஓர் முறை — கடைசி முறை காணக் கூடச் செய்யவில்லையே நான் பாவி....ஐயோ....''

மூர்த்தி மூர்ச்சையானுன். டாக்டர் வரவழைக்கப்பட்டார். சற்று தெளிவு ஏற்பட்ட பின்பு,

''அத்தான், கவலைப் படாதீர்கள். பூமாவைப் பற்றி நான் கூட முதலில் தவருகத்தான் நினைத்தேன். அவள் தவறிவிட்டுச் சென்ற புகைப் படம் எனக்கு உண்மையைச் சொன்னது. அந்தப் படத்தில் நீங்களும் பூமாவும் இருந்தீர்கள். அவள் கதை என் நெஞ்சை நெகிழச்செய்தது. நான் கேட்டதற்கு நீங்கள் கூறினது பொய் என்று எனக்குத் தெரியும். உங்கள் நண்பர் கொடுத்துச் சென்ற கடிதத்தைக் கண்டதிலிருந்து உங்கள் முகம் களையிழந்து போனதையும் கவனித்தேன். உஙகள் அறைக்கு வந்து நீங்கள் கண் மூடிய சமயம் அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்து பிறகு அப்படியே ஒட்டிவைத்து விட்டு ஓடிவிட்டேன். அதுதான் பூமாவின் மீது நீங்கள் கொண்டுள்ள தூய அன்பைச் சொல்லிவிட்டதே.... உடனே வந்தேன். ஆனல் பூமாவைக் காணவில்லை. இதமாக அவளுக்கு அப்பொழுது நான் பதில் சொல்லாததைக் கண்டு அவள் எங்கு போனுளோ என்ற பதைப்புடன் ஓடினேன். வினடிப் பொழுது தாமதித்திருந்தாலும் அவள் அந்தக் கிணற்றுக்குப் பலியாகியிருப்பாள்........'' என்று பாமா சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே, மூர்த்தி குறுக்கிட்டான்,

''பாமா, என் பூமாவை இப்போது எங்கே காணலாம்? சொல்... என்னை சோதிக்காதே........ஐயோ, பூமா........'' என்று அலறினுன் அவன்.

''அத்தான், கலங்காதீர்கள். நான் பெண். பெண்ணுக்குப் பெண்ணுக நின்று நான் பூமாவைக் காப்பாற்றி விட்டேன், உங்களையும் காப்பாற்றிக் கொண்டேன். உங்கள் இரண்டு பேருடைய பாசப் பிணைப்பைக் கண்டு நிஜமாகவே ஆச்சரியப் படுகிறேன். இனி பூமா என் உடன் பிறப்புப்போல. அதோ பாருங்கள்....பூமா! இனி என்றென்றும் அக்காள் நம்முடன் இருக்கட்டும். கணவனையிழந்து அனுதரவாகயிருக்கும் பூமாவுக்கு இனி நாம்தானே ஆதரவு....'' என்ருள் பாமா. அவள் குரலில் அன்பு வெள்ளம் சுரந்தோடியது. அவள் கண்களில் கண்ணீர் முத்துக்கள் துளிர்த்து இருந்தன.

''பூமா!''

''அத்தான்''

இரு அன்பு இதயங்களும் எவ்வளவு நேரம்தான் கண்ணீர்க் காணிக்கை செலுத்தித் தங்கள் தூய அன்பைப் புனிதப்படுத்திக் கொண்டனவோ, யார் கண்டார்கள்....!

மறவாதே !

(பாரதி மோஹன்)

இராகம் : தோடி   தாளம் : ஆதி

பல்லவி

தமிழா மறவாதே, எப்போதும் நீ (தமி)

அ. பல்லவி

தண்டமிழ் நாட்டினில் செந்தமிழ் ஆட்சி செய்ய (தமி)

சரணங்கள்

மூவேந்தர், ஆண்டதும் முத்தமிழ் நாடு
முச்சங்கம் பிறந்ததும் பண்புகழ் நாடு
பாவலர், நாவலர், வாழ்ந்திடும் நாடு
பாமணங் கமழ்ந்திடும் பைந்தமிழ் நாடு ! (தமி)

வள்ளுவன் பிறந்து நன் மறைதந்த நாடு
வான் புகழ் இளங்கோவடிகள் தம் நாடு
தெள்ளுதமிழ் மணக்கும் தேன்மொழி நாடு
தெய்வச் சிலம்பொலிக்கும் நம் திருநாடு (தமி)

கம்பனும், அவ்வையும், உதித்த நம் நாடு
காளமேகப் புலவர் பொழிந்த நம் நாடு
செம் பொன் விளைந்திடும், செந்தமிழ் நாடு
சிற்பக்கலை தனில் சிறந்த நம் நாடு (தமி)

கண்ணகி பிறந்த நம் கற்புயர் நாடு
கன்னித்தமிழ், முழங்கும் கலை உயர் நாடு
விண்ணதிர முரசங் கொட்டிய நாடு
வீரனும், கட்ட பொம்மன் பிறந்த நம் நாடு (தமி)

அருட்கவி பாரதி பிறந்த நம் நாடு
அண்ணல் சிதம்பரம் செக்கிழுத்த நம் நாடு
திருப்பூர் குமரன் குருதி சிந்திய நாடு
தியாகிகள் பல பேர் உதித்த பொன்னாடு (தமி)

இமய வெற்பினில் கொடி நாட்டிய நாடு
ஏகாதிபத்ய வெறி இல்லாத நாடு
குமரி, முதல் வேங்கடம், எல்லை நம் நாடு
கோன் முறை செய்திட, தமிழ்மொழி நாடு (தமி)

கடைசியாக நானும் என் மனைவியும் காசி யாத்திரை புறப்பட்டே விட்டோம்!

வயது முதிர்ந்த தம்பதிகள், தற்செயலாகக் கங்கைக் கரை வரையில் போக நேர்ந்தவர்கள், முற்பிறவி, இப்பிறவிப் பாவங்களைக் கரைக்கத் தவிப்பவர்கள் காசி செல்வது வழக்கம். ஆனால் எங்களைப் போன்ற ஐம்பதைக் கூட எட்டிப் பிடிக்காத நடுத்தர வயதுடைய தம்பதிகள் காசிக்குப் புறப்பட்டோமென்றால், தற்செயலாக வட நாடு செல்ல நேர்ந்ததோ, அல்லது முற்பிறவி, இப்பிறவிப் பாவங்களின் பளு அழுத்தியதோ அதன் காரணமல்ல. என் மனைவி வேதம் இருக்கிறாளே, அவளுக்கு மானிட வாழ்வின் மீது ஏற்பட்ட அவநம்பிக்கையே அத்தனை இளவயதில் காசி யாத்திரையில் எங்களைக் கவிய வைத்தது.

பார்க்கப் போனால் வேதத்தைக் கூட அதற்குக் காரணமாகக் காட்டுவது சரியாகாது. அவளுக்கு ''வாழ்வாவது மாயம்'' என்ற தாரக மந்திரத்தை உபதேசித்துச் சென்றானே, அந்த ஆண்டிப் பண்டாரத்தைத்தான் இதற்கு அடிப்படையாகச் சொல்ல வேண்டும்.

ஆம்! 'வாழ்வு மாயம்; இந்தக் கட்டை அநித்தியம்' என்று வாய்க்கொரு தடவை கூறிவந்த அந்த ஆண்டிப்பண்டாரம் இந்த மாயமான வாழ்வுக்குள்ளே எல்லாவற்றையும் அநுபவித்துப் பார்த்துவிடுவது என்று திரும்பி, பரதேசிக் கோலத்திலிருந்து மணக் கோலத்துக்குத் தாண்டி, அதிலும் நிலைபெற முடியாது எங்கேயோ ஓடி ஒளிந்தானே, அதுவே இந்த மாய வாழ்க்கைக்கு நல்லதொரு சான்றாகும்.

'மனிதர்கள் தங்கள் மனப் போக்குக்கு ஒப்ப, பிறர் அநுபவங்களை அளவிடுகிறார்கள்' என்று எழுதி வைத்தானே அந்தத் தத்துவ ஞானியின் வாய்க்குச் சர்க்கரைதான் போட வேண்டும். ஆமாம், இதோ இப்பொழுது சொன்னேனே, அந்த ஆண்டிப் பண்டாரத்தின் அநுபவத்தையே தான் பாருங்களேன். அதை நான் எடை போட்ட விதம் வேறு; வேதம் எடை போட்ட விதம் வேறு. 'மனிதனுக்கென்று வாழ்க்கை சில நியதிகளை ஏற்படுத்தியிருக்கிறது; அதை மீறிச் செல்பவன் தோல்வியையே அடைவான்' என்பது என் சித்தாந்தம். அந்த ரீதியில் நாற்பத்து ஐந்து பிராயம் வரையில், 'வாழ்வு மாயம்; இந்தக் கட்டை அநித்தியம்; எனவே இருக்கிற நாட்களில் ஈசனை இடைவிடாது துதி' என்று கூறிக்கொண்டிருந்த ஆண்டிப் பண்டாரம், அந்த 'வாழ்வு—மாயம்' என்ற இரு சொற்களையும், சந்தர்ப்பம் கிடைத்ததும் தனக்குச் சாதகமாகத் திருப்பிக்கொண்டு மணவினையில் புகுந்தபோது நான் அதை ஆமோதிக்கவில்லை. 'இது இவனது வாழ்க்கை நியதியை மீறிய செயல்; இதில் இவன் வெற்றிகாண மாட்டான்' என்றுதான் வேதத்திடம் சொன்னேன். ஆனால், அவள் என்ன சொன்னாள் தெரியுமா?

''ஆமாம்; உங்கள் வாதமே எப்போதும் குதர்க்க வாதந்தான். நாற்பத்து ஐந்து வயதுக்குப் பிறகு இப்பொழுது ஆண்டிப்பண்டாரம் கலியாணம் செய்து கொள்ளுகிறானே என்றால், நேற்று வரையில் அவனுக்கு யாரும் பெண் கொடுக்க முன் வரவில்லை; அதனால் பரதேசியாக இருந்தான். இப்பொழுது தக்க பெண் கிடைத்திருக்கிறாள்; கலியாணம் செய்துகொள்ளப் போகிறான். இதிலென்ன வாழ்க்கையும் நியதியும் வைத்திருக்கிறது?'' என்றாள்.

''நான் அதைச் சொல்லவில்லை, வேதம்; மனிதன் சூழ்நிலைக்கு ஒப்ப, பச்சோந்தியைப் போல நிறம் மாற்றிக் கொள்கிறானே, அதைத்தான் வாழ்க்கை நியதியை மீறிய செயலென்று குறிப்பிட்டேன்'' என்றேன்.

''ஓஹோ! அப்படியானால் பெண் கிடைக்காத குற்றத்தால் பிரமச்சாரியாக இருந்தவன், பெண் கிடைத்ததும் கலியாணம் செய்துகொண்டால், அது சூழ்நிலைக்கு ஒப்ப நிறம் மாற்றிக்கொண்டதாகி விடுமோ!''

வேதம் எப்பொழுதும், தன் கட்சியே நியாயமானது என அடித்துப் பேசிப் பழக்கப்பட்டவள். அவள் ஒன்று கூறி, அது சரியல்ல என்று எத்தனைதான் தர்க்கரீதியாக எடுத்துக் காட்டினாலும்; மசிந்துவிட மாட்டாள். தர்க்கத்தை ஒப்புக் கொள்ளாதவர்களுடன் வாக்காடுவதில் ஏதேனும் பயன் உண்டோ? இதை அநுபவத்தில் உணர்ந்திருந்த நான், சாதாரணமாக, எப்பொழுது அவள் ஒரு விஷயத்தில் தன் முடிவே சரியென்ற ரீதியில் பேச ஆரம்பிக்கிறாளோ, அப்பொழுது அவ்விஷயத்தை மேலே தொடராது நிறுத்திக் கொண்டு விடுவேன். அம்மாதிரியே, அன்று ஆண்டிப் பண்டாரத்தின் கலியாண விஷயத்தையும், வீண் வாதத்துக்கு இடமளிக்காது, ''சரி; நீயே பார்; இந்த வாழ்வு விரைவினிலே ஆண்டிப் பண்டாரத்துக்குத் தோல்வியை அளிக்கப் போகி

றதா இல்லையா, என்பதை'' என்று கூறியதோடு நிறுத்திக் கொண்டேன்.

எங்கள் வாக்குவாதம் நடந்து ஏழெட்டு மாதங்கள் ஆவதற்குள்ளே நான் சொன்னது நடந்துவிட்டது. ''நான் அன்றே சொல்லவில்லையா, வேதம்?'' என்று மார்தட்டிக் கொண்டேன்.

''ஆமாம்; இதில் என்ன வெற்றியும் தோல்வியும்? அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லை; போய் விட்டாள். அதற்கு இவன் என்ன செய்வான்? அதென்னவோ, ஆண்டிப் பண்டாரம் இந்த மாய வாழ்க்கையில் அநுபவித்துப் பார்க்க ஆசைப்பட்டதை அநுபவித்துத் தீர்த்துவிட்டான். என்னைப் போலவா?''

வேதம் 'என்னைப் போலவா?' என்று குறிப்பிட்டது இந்த காசிப் பயணத்தைப் பற்றியதுதான். அதுதான் முன்பே சொன்னேனே, இந்த ஆண்டிப் பண்டாரம், 'வாழ்க்கை நிலையற்றது; நிலையற்றது' என்று அடிக்கொரு தடவை சொல்லப் போக, அந்த நிலையற்ற வாழ்க்கை முடியுமுன்பே கங்கையில் தன் சடலத்தை ஒருதடவை மூழ்கடித்துக்கொண்டு வர வேண்டுமென்ற அவா, வேதத்திடம் பெரிதாக வளர்ந்து வந்தது.

அவள் நேரடியாகக் காசிக்குப்போய் வரலாம்; வாருங்கள் என்று அழைத்திருந்தால் நான் 'சரி' யென்று முன்பே கிளம்பி யிருப்பேன். ஆனால் 'வாழ்க்கை அநித்தியம்; அநித்தியம்' என்ற பல்லவியுடன் தன் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும்போது எனக்கு பற்றிக் கொண்டுவரும். 'அப்படி முடிகிற வாழ்க்கை; நீ காசிக்குப் போகிற வழியிலே முடிந்து விட்டால், என்ன செய்வாய்?' என்று கேட்பேன். ''ஆமாம்; உங்களுக்கு மனமில்லை; ஆதற்காக இப்படி விதண்டா வாதம் செய்து என் வாயை அடக்கப் பார்க்கிறீர்கள்'' என்று கூறிவிட்டு உள்ளே சென்று விடுவாள், வேதம்.

வேதத்தின் இந்த கோரிக்கை எனக்கு அதிசயமாகப் படவில்லை; விநோதமாகப்பட்டது. பின் என்ன? நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் மத்தியிலிருந்த தம்பதிகளான நாங்கள் தகுந்த முகாந்திரமின்றி, தொண்ணூறு வயதுக் கிழங்களைப் போல, காசியாத்திரை கிளம்பினால் ஊரில் இருப்பவர்களுக்கு அது விநோதமாகத்தானே படும்!

ஆனால் இதையெல்லாம் வேதத்திடம் சொன்னால், அவள் அதைப் புரிந்து கொண்டால் தானே! கடைசியாக ஆறு வருஷங்களாக அவளுடைய நச்சரிப்பை பொறுத்துப் பார்த்து இனிமுடியாதென்று, ஒரு நல்ல நாளில் காசிக்குக் கிளம்பியே விட்டேன்.

2

காசியை வந்தடைந்த அன்றிரவு வேதத்திடம் வேடிக்கையாக, ''ஆமாம்; 'காசி - காசி' என்று பறந்தாய்; காசிக்கு வந்து விட்டோம்; ஆனால், இங்கே வந்து போகிறவர்கள் எல்லோரும், வாழ்வில் தங்களுக்கு மிகப் பிடித்தமான பொருள் ஒன்றை இனி ஏற்பதில்லை என்று ஒதுக்கிவிட வேண்டுமாமே; நீ எதை அப்படி ஒதுக்கப்போகிறாய்?'' என்று கேட்டேன்.

''எதை ஒதுக்குவதென்று நீங்களே சொல்லுங்களேன்''.

"உனக்குப் பிடித்தமானதை நீயல்லவா அறிவாய்! அதை நான் எப்படிக் குறிப்பிட முடியும்?"

"ஐயே! வெளியிலே சொல்லாதேயுங்கோ; வெட்கக்கேடு; முப்பது வருஷமா உயிர் ஒன்ருக வாழ்ந்த தம்பதிகளில் ஒருவருக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்பது மற்றவருக்குத் தெரியாதென்ருல், ஊரார் சிரிப்பார்கள்."

"அப்படியானல், உனக்கு எதெது பிடித்தமானது என்பது எனக்குத் தெரியும்; அவற்றில் ஒன்றை நானே குறிப்பிடலாம் என்கிருய் அல்லவா?"

"பின்னெ என்னவாம்?"

"அது சரி; அப்படியானல் நான் ஒதுக்கச் சொல்லுவதை ஒதுக்கி விடுவாய் அல்லவா?"

"பேஷாகச் சொல்லுங்களேன்"

உமா

சந்தா விபரம்

வருட சந்தா

இந்தியா, இலங்கை ரூ. 3

வெளி நாடுகள் ரூ. 4

ஆறு மாதத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

விளம்பர விபரங்களுக்கு நிர்வாகிக்கு எழுதவும்.

★

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு,

சென்னை-1. போன்: 2200.

"அப்புறம், அம்மாடியோ இதுவா?' என்று திரும்பக் கூடாது."

"உங்களுக் கென்ன? நான் இன்னும் பதினாறு வயதுக்குமரி; வாழ்க்கையிலே ஒதுக்கக்கூடாதது எதுவும் அற்றவள் என்று தோன்றுகிறதா?"

"இல்லையடியம்மா; நீ குமரியில்லை; கிழவிதான் நூற்றுக் கிழவி. அதனல் தான் சொல்லுகிறேன்; இந்தத்தொண்டு கிழத்துக்கு இனி இல்லற இன்பம் எதற்காக; இவள் காசிப் பயணப் பரிபூரணமாக அடைய, புருஷனையே ஒதுக்கி விடட்டுமே என்று."

வேதத்தின் வாயைக் கிண்டி வேடிக்கை பார்ப்பதில் அலாதி ருசி கண்டவன் நான். இப்பொழுதும் அதே வேடிக்கையோடுதான் இதைச் சொன்னேன். ஆனல் இதைக் கேட்டதும் அவள் துள்ளிய துள்ளல்! அடேயப்பா!!

"உங்களுக்கென்ன நாக்கிலே நரம்பே கிடையாதா? விளையாட்டுப்பேச்சுக்கும் ஒரு எல்லை யில்லையா? இப்படியா ஒருபுண்ணிய ஸ்தலத்திலே, சுமங்கலிப் பெண் ஒருத்தியைப் பார்த்துப் புருஷனை ஒதுக்கி வச்சுடு என்று சொல்லுவார்கள்...." இப்படிச் சரமாரியாகப் பொழிந்து தள்ளி விட்டாள்.

"பார்த்தாயா, இதற்காகத் தான் அப்போதே நீயே சொல் என்றேன். உனக்கு மிகவும் பிடித்தமான பொருள் என்றதும் என்னைத்தவிர வேறு எதுவும் எனக்குத் தென்படவில்லை, அதுதான் சொன்னேன்; போனல் போகிறது, உன்னல் அதை ஒதுக்க முடியாதென்ருல் என் பங்குக்கு ஒதுக்க வேண்டிய பொருள் ஒன்றிருக்கிறதோ,

இல்லையோ? அதற்கு அதையே அதாவது உன்னையே........''

வேதம் சட்டென்று எழுந்து வந்து என் வாயைப் பொத்தினாள். ''இனிமே இந்த மாதிரிப் பேசினேளோ....?''

''அதனால் என்னடீ முழுகி விட்டது; நாம்தான் கிழவர்கள் ஆகி விட்டோமே!''

''ஆகி விட்டால்........?'' அவள் கண்களில் புது மணப்பெண்ணின் ஒளி வீசிற்று. காசியாத்திரையை மேற்கொண்ட கிழவியைப் பார்த்தீர்களா!

''உன்னால் முடியாததாக இருக்கலாம்; ஆனால் என்னால் முடியும்!''

''எது முடியும் ?''

''உன்னைத் தொடாமலே திருநீலகண்டராக வாழ்வது!''

''முடியுமோ ?''

''ஏன் முடியாது ?''

''முடியவே முடியாது உங்களால். ஆளானப்பட்ட ஆண்டிப் பண்டாரத்தாலே முடியவில்லையே?''

'இவளுக்கு இந்த ஆண்டிப் பண்டாரத்தை விட்டால் உவமை சொல்ல வேறு ஆளே கிடையாதா, என்ன?' என்று வியந்தேன் நான். ஆனால், அந்த உவமையிலும் உண்மை இருந்ததே!

உங்களுக்கு, எல்லாம் ஒரே புதிராயிருக்கும். ஆண்டிப்பண்டாரத்தின் ஆவலக் கதையைத் தெரிந்து கொண்டாலன்றி உங்களுக்கு ஒன்றுமே புரியாது. அதைச் சொல்லுகிறேன், கேளுங்கள்:

3

ஆண்டிப் பண்டாரத்துக்கும் எனக்கும் ஆயிரம் வயதுகள் வித்தியாசமில்லை; மிஞ்சிப் போனால் என்னைவிடப் பத்து ஆண்டுகளை அவன் முன் கண்டிருப்பான், அவ்வளவுதான். ஆனால், எனக்கு அறிவு வந்த பிராயந்தொட்டு அவனை நான் ஆண்டியாகத்தான் கண்டேன்.

எங்கள் ஊரிலே ஒரு ஆறு ஓடுகிறது. ஆறு என்று சொல்லுவதைவிட மணல் வாய்க்கால் என்று சொன்னால் முற்றும் பொருந்தும். அந்த ஆற்றில் தண்ணீரைக் காண வேண்டுமானால் வருஷம் முழுவதும் மழை கொட்டிக் கொண்டே இருக்க வேண்டும். சுருங்கச்சொன்னால் அது ஆறாக எங்களுக்கு பயன் பட்டதேயில்லை, குளிக்கவும் குடி தண்ணீருக்கும் கிணறுகளை நாடிப்போவது எங்கள் ஊராருக்கு தலைமுறை தத்துவமாக இருந்து வந்த பழக்கம். அப்படி ஊரைக் காத்து வந்த கிணறுகளில் ஒன்றுதான் சாமியார் மடத்துக் கிணறு என்பது.

'சாமியார் மடம்' எனக் காரணப்பெயர் பூண்ட ஒரு சிறு பத்தடிச் சதுரக் காரைக் கட்டிடத்துக்கும் அதைச் சுற்றிய தோப்பும் துரவுக்கும் உரிமையாளன் தான் நமது ஆண்டிப்பண்டாரம். ஆண்டி என்பது முருகனை நினைத்து அவனுக்கு அவன் பெற்றோர் சூட்டிய பெயர். அவன் தேவாலயங்களுக்குப் பூ தொடுத்துக் கொடுக்கும் பண்டாரம் வகுப்பைச் சேர்ந்தவன். எனவே ஆண்டிப் பண்டாரம் என்ற பெயர் அவனுடைய இயற் பெயர் தான். வாழ்வு அவன் பெயருக்கு ஏற்றாற் போல அமைந்து விட்டது; அதற்கு அவன் என்ன செய்வான் ?

இந்தியாவின் தலைசிறந்த
பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனதிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை



T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால்பெட்டி 1151, வண்ணாரப்பேட்டை, மதராஸ்.

"நாளை பொழுது வெடியறத்துக்குள் கோவிந்தனுக்கு தர வேண்டிய கடன் முழுவதையும் நான் கொடுக்காவிட்டால் மானம் போய் விடும். அப்புறம் எங்காவது கிணற்றில் விழுந்து உயிரை விட வேண்டியதுதான். நீ ஏதாவது உதவி செய்ய முடியுமா?"

"முடியாதே....! என் வீட்டில் ஒரு கிணறுகூட இல்லையே"

ஆண்டிப் பண்டாரம் காஷாயம்தான் உடுத்தியிருப்பான்; ஆனால், முறையாகச் சந்நியாசம் பெற்றவனல்ல. அவனுக்குச் சுற்றம் - சுகம் இல்லாது போனது கூட அவனது தவறல்ல; சிறு வயதிலே பெற்றோரை இழந்த அவனைத் தெய்வம் தனது குழந்தையாக்கிக் கொண்டது. அதீத தெய்வ ஈடுபாடு கொண்டு சதா கோயிலே கதி யென்று இளம்பிராயந் தொட்டுக்கிடந்துவந்த ஆண்டிப் பண்டாரம், பெயருக்கேற்றபடி ஆகிவிட்டான்; இனி அவன் குடியும் குடித்தனமுமாக வாழமாட்டான் என்று நிச்சயித்து அவனுடைய ஒரே உறவினளான ஒன்று விட்ட சகோதரி கூட, அவன் வழிவராமல் ஒதுங்கி விட்டாள்.

ஆண்டிப்பண்டாரத்தின் பரம்பரைச் சொத்தான ஒரு ஏகர் தரிசு நிலம் ஊராரின் களத்துமேடாகக் கிடந்தது. அதைச் சுற்றித்திடீரென ஒருநாள் வேலி பிடிக்க ஆரம்பித்த ஆண்டியைக் கண்டு அன்று நகைக்காதவர்கள் இல்லை. ஆனால் அவர்களை நோக்கி நகைக்கும் நிலைக்குத் தன் கையாலே பாடுபட்டு அதை விரைவினில் ஓர் நந்தவனமாக்கிவிட்டான் அவன். தெருவில் சில வீடுகளுக்கு பூக் கொண்டுப்போடும் பணியை அவன் ஏற்றுக் கொண்டான். ஏற்கனவே கோயிலுக்கு மாலை கட்டிப்போடும் திருப்பணி மான்னியம் வம்ச வாரியாக அவனுக்குக் கிடைத்து வந்தது. அதற்குக் கூலியாக, நாள்தோறும் காலையிலும் மாலையிலும் கிட்டிய இரண்டிரண்டு பட்டைச் சோறு அவனுக்குப் படி அளந்தது. எனவே தெருவிலுள்ள வீடுகளுக்குப் பூக் கொடுத்து வந்ததில் கிடைத்த வருமானம் மிச்சமாயிற்று. அந்த மிச்சந்தான் நாளடைவில் அவனுடைய நந்தவனத்தின் நடுவே ஓர் காறைக் கட்டிடத்தையும், தோட்டத்தின் ஓர் மூலையிலே ஊராருக்குத் தண்ணீர் வார்த்த ஓர் கிணற்றையும் உருவாக்கச் செய்தது. தான் தரித்திருந்த காஷாய உடைக்கு ஏற்றவாறு தனது மடத்துக்குச் 'சாமியார் மடம்' என்று ஆண்டிப்பண்டாரம் சூட்டிய பெயர் சர்வமானியமாக நிலைத்தும் போயிற்று.

ஆண்டி ஒருவர் வழிக்கும் போக மாட்டான்: அவனுண்டு: அவன் தோட்ட முண்டு; இல்லாவிட்டால் ஊர்க்கோவிலுண்டு. சாயங்கால வேளையில் தெருக்களில் பூப்போட வருவதை

யன்றி, அவன் வெளியே எங்கும் போனது கிடையாது. அதிகாலையில் பெண்கள் தன் தோட்டத்துக் கிணற்றுக்குக் குளிக்கவும், தண்ணீர் எடுத்துச் செல்லுவதற்கும் வரும் முன்பே அவன் குளித்துத் தோட்டத்தில் பூப்பறிக்க இறங்கி விடுவான். பறித்த பூக்களை மடத்திலோ, கோவிலிலோ உட்கார்ந்து மாலையாகக் கட்டுவான். கட்டியவற்றைக் கோவிலுக்கும், கொடுக்கவேண்டிய வீடுகளுக்கும் கொடுத்து விட்டு வருவதோடு அவனுடைய தினசரி வேலை சரி. ஒரு கடைகண்ணி, ஒரு தேர்—திருவிழா என்று அவன் வெளியூருக்குப் போனதே கிடையாது. உள்ளூர் கடை கண்ணிகளுக்கே அவனுக்குப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதில்லையே! காலையிலும் மாலையிலும் அவனுக்கு மானியமாகக் கிடைத்த இரண்டு பட்டைச் சோற்றில் ஒன்றை மடைப்பள்ளிக்காரரே எடுத்துக்கொண்டு, அதற்குப் பதிலாக கரி, குழம்பு, முதலிய எதையேனும் கொடுத்து விடுவார். ஆகவே, ஆண்டி தன் கைப்பட அடுப்பே புகைய விட்டதில்லை என்ற போதில் கடைகண்ணிகளில் அவனுக்கு என்ன வேலையிருக்கிறது! தேர்த்திருவிழாவின் போது மாத்திரம் ஒரே ஒருநாள் அவன் ஜவுளிக் கடைப் பக்கம் வருவான். ஜவுளிக்கடைக் கந்தசாமி வீட்டுக்கு அவன் பணம் வாங்காது பூக்கள் கொடுத்து வந்தான். அதற்கு ஈடாக, தேரின்போது, நாலறை முழத்தில் இரண்டு துண்டு 'கலிகோ' துணியைக் கிழித்துக் காவி தோய்த்துக் கொடுத்து விடுவார் அவர்.

இதுதான் ஆண்டிப்பண்டாரத்தின் தினசரி வாழ்க்கை. கடிகாரத்தின் முட்களைப் போல, இந்த நியதிகளைச் சுற்றியே அவனுடைய வாழ்க்கை முள் ஓடிக்கொண்டிருந்த போது தான், அந்த ஓட்டத்திலே மாற்றத்தைப் புகுத்த மதுரம் வந்து சேர்ந்தாள்.

4

ஆண்டிப் பண்டாரம் பூக் கட்டிக் கொடுத்துவந்த வீடுகளில் எங்கள் வீடும் ஒன்று. அது மாத்திரமல்ல; அவனுக்குப் பட்டைச்சோறு படியளந்து வந்த கோவிலின் தர்மகர்த்தாவாக முன்பு என் தந்தை சில காலம் வேலை பார்த்து வந்தார். இதனால்தானோ என்னவோ, பண்டாரத்துக்கு எங்கள் குடும்பத்திடம் தனிப்பட்ட பற்றுதல் விழுந்திருந்தது. கிராமத்தில் எத்தனையோ வீடுகளுக்கு அவன் பூப்போட்டு வந்தான்; இருந்தாலும் அவ்வீடுகள் எவற்றிலும் நின்று, யாரிடமும் எது

கட்டுரையாளர்களுக்கு

வாழ்க்கையின் உண்மைகளைச் சித்தரிக்கும் சிறுகதைகள், சிறந்த கட்டுரைகள், நகைச் சுவைச் சித்திரங்கள், கருத்து நிறைந்த கவிதைகள் 'உமா'வில் பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். பிரசுரிக்கப்படும் விஷயங்களுக்கு அவசியம் அன்பளிப்பு அனுப்பப்படும்.

★

உமா

4/32, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1.

வும் வார்த்தையாட மாட்டான். 'திருச்சிற்றம்பலம்' என்ற அவனுடைய குரல் வாயிலில் கேட்டால், ஆண்டிப் பண்டாரம் பூப் பொட்டலத்தை உள்ளே வீசிவிட்டுப் போகிறான் என்று அர்த்தம். அதே 'திருச்சிற்றம்பலம்' என்ற சொல் மீண்டும் ஒருமுறை ஒருவர் வீட்டு வாயிலில் ஒலித்தால், அவனுக்குச் சேரவேண்டிய மாதாந்திரப் பணம் கொடுபடவில்லை என்று அர்த்தம். அநேகமாக எங்கள் கிராமத்தில் அவ்வாறு பூக்காரன் பாக்கியை நிறுத்திக் கொள்ளுபவர்கள் யாரும் கிடையாது. ஒரே ஒரு தடவை, நான் அறிய, எங்கள் ஊருக்குப் புதிதாக வந்த போஸ்ட் மாஸ்டர் ஒருவர் பூசைக்குப் பூ வாங்கிய காசைக் கொடுக்காமல் 'தலா'க் காட்டி வருவதாக ஓர் வதந்தி உலவிற்று. ஆனால், அதற்காக ஆண்டிப் பண்டாரம் அவருக்குப் பூக் கொடுப்பதை நிறுத்தவில்லை. "எவ்வளவு பாக்கி?" என்று ஒருநாள் அவனைக் கேட்டேன்.

"யாருக்கு?" என்று மறு கேள்வி கேட்டான் ஆண்டி.

"உனக்குத்தான், போஸ்ட் மாஸ்டர் தரவேண்டியது" என்று விளக்கினேன்.

அவன் லேசாக முறுவலித்துவிட்டுச் சொன்னான்: "இந்த ஆண்டிகிட்டே யாரு தம்பீ, கடன் பாக்கி வச்சுப்பாங்க? போஸ்ட் மாஸ்டருகிட்டே எனக்கு எதுவும் வசூலாக வேண்டியதில்லை" என்றான்.

"அப்படியானால் ஊரெல்லாம் வதந்தியாயிருக்கிறதே, அது பொய்யா!"

"அது பொய்யல்ல; மெய்தான்; அந்த வீட்டிலேருந்து ஒரு வருஷத்துப் பணம் வரணம் எனக்கு; ஆனால் அது போஸ்ட் மாஸ்டரு தரவேண்டியதில்லை; அந்த வீட்டுத் தேவ பூஜை அலமாரியிலே இருக்கு பாரு, அந்தச் சாமி கொடுக்கணம். என்ன தம்பீ அப்பிடி முளிக்கிறே? ஆமாம் தம்பீ, நான் பூக் கொடுத்த போது போஸ்ட் மாஸ்டருக்கா கொடுத்தேன்? அந்தச் சாமிக்குத் தானே!"

ஆண்டிப் பண்டாரத்தின் தத்துவம் விசேஷமாகத் தான் தென்பட்டது எனக்கு.

சரி; சரி; எதையோ சொல்ல வந்து எதையோ சொல்லிக் கொண்டு போகிறேனே! ஆண்டிப் பண்டாரம் கிராமத்திலே எந்த வீட்டிலாவது நின்று பேசுவான் என்றால், அந்த வீடு எங்களதுதான். அந்தப் பேச்சுக்களும் அளவோடுதானிருக்கும். அதில் அவன் தேவைகள் எதுவும் கலந்திராது. கோரிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்பட்டிராது. அது யோகக்ஷேம விசாரணையாக இருக்கும்; அல்லது தனக்குப் பிடிபடாத விஷயத்தைத் துலக்கிக் கொள்ளுவதற்குக் கேட்கப்படும் ஆலோசனையாக இருக்கும்.

ஆண்டிப் பண்டாரம் எவ்வாறு எங்கள் குடும்பத்தினரிடம் தனிப் பற்றுதல் கொண்டிருந்தானோ, அவ்வாறே எங்கள் குடும்பத்தினரும் அவனிடம் பிரியம் காட்டிவந்தனர். வீட்டுப் பெண்கள்—வேதம் உள்பட—அவனிடம் உரிமையோடு பேசுவார்கள்; கேலி செய்வார்கள். அவற்றை அவன் மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுவான். நானுந்தான் சிற்சில சமயங்களில் இவர்கள் சம்பாஷணையில் கலந்து கொள்ளுவேன். அப்படிபட்ட சமயங்களில் ஒன்றன்போது ஒரு

உபாத்தியார்: வீடு கட்ட வேண்டுமானல் முக்கியமாக வாங்க வேண்டியது என்ன?

பையன்: கடன் ஸார்!

தடவை நான் அவனைக் கேட்டேன்; "ஏன் பண்டாரம் உனக்கு வயதென்ன ஆகிறது?"

"என் வயசா? எதுக்குத் தம்பீ? எங்கேயாவது இந்த ஆண்டிக்குப் பெண்டு—கிண்டு தேடி வச்சிருக்கியா?"

"ஆமாம்; அதற்காகத்தான் கேட்கிறேன்" என்றேன் நான் விளையாட்டாக.

"அதெல்லாம் வீணுச் சிரமப் படாதே தம்பீ; இந்தப் பரதேசிக்கு கால் கட்டு, கைக் கட்டு ஒன்றும் வேணும்."

"நீ தான் முறையான சாமியாரில்லையே, பண்டாரம்?"

"இல்லேன்னு என்ன? ஒரு பொண்ணு கழுத்திலே தாலி போடறத்துக்கு எனக்கு என்ன தகுதியிருக்கு, தம்பீ?"

"என்ன தகுதிதான் இல்லை உனக்கு? கிழவனுகிவிட்டாயா? குரூபியா? சம்பாதிக்கத் திறனற்றவனு? இல்லை சொத்து சொம்புதான் இல்லையா?"

"அதெல்லாம் இருக்கு தம்பீ; ஆனு முக்கியமானது ஒன்று தான் இல்லை."

"அதென்ன அப்படி முக்கியமானது?"

"இச்சை" என்றுன் அவன் பளிச்சென்று.

"அப்படியானல் உனக்குக் குடியும் குடித்தனமுமாக இருக்க வேண்டுமென்ற இச்சை துளிகூட இல்லையா?"

"அதெல்லாம் என் நிலைக்கு உதவாது தம்பீ; நான் பிறக்கும் போதே ஆண்டி; வாழ்கிறதும் ஆண்டியாகத் தான்; சாகப் போகிறபோதும் ஆண்டியாகத் தான் சாகப் போறேன்."

அன்று அவன் திடத்தில் எவருமே அவநம்பிக்கை கொள்ளவில்லை; கொள்ளத்தக்க சூழ்நிலையும் இருக்கவில்லை யென்று சொல்லுங்களேன்.

ஆனல் சூழ்நிலை மாறியதும்!

மதுரம் வந்தாளல்லவா? அவள் ஆகாயத்திலிருந்து 'தொப்' பென்று சாமியார் மடத்தில் வந்து குதித்துவிடவில்லை. முறையோடு, உரிமையோடுதான் ஆண்டிப் பண்டாரத்தைத் தேடி வந்தடைந்தாள்.

ஆண்டிக்கு ஒரு அக்காள் இருந்தாளே, அவளுடைய மகள் மதுரம். அந்த அக்காள் பல வருஷங்களுக்கு முன்பு கணவனுடன் பர்மாவுக்குப் பிழைக்கப் போனுள். சமீபத்தில் பர்மாவில் சண்டை மூண்ட

போது எல்லோரையும் போல அவர்களும் கால் நடையாக ஊர் திரும்பினார்கள். வரும் வழியில் அக்காளும், அத்தானும் பரலோகம் எய்த, மதுரம் மாத்திரம் கூட வந்தவர்களின் துணையுடன் ஊர் வந்து சேர்ந்தாள். பெற்றோரை இழந்த அந்தப் பேதைப் பெண்ணுக்கு ஆண்டியைவிட்டால் நாதி ஏது? எனவே நேராகச் சாமியார் மடத்தில் வந்து ஒண்டிக் கொண்டாள்.

அநாதையாக வந்து நின்ற மருமகளை அமைதியோடு ஏற்றுக் கொண்டான் ஆண்டி. சாமியார் மடத்தில் இப்பொழுது அடுப்புப் புகைய ஆரம்பித்தது. ஆண்டிக்கும் கடை—கண்ணி என்று போக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

"கொஞ்சங் கொஞ்சமாகக் குடும்பியாகிவிட்டாய் போலிருக்கிறதே, ஆண்டிப் பண்டாரம்" என்றேன் ஒரு சமயம்.

"என்ன செய்வது தம்பீ; காலை வந்து சுத்திக்கிட்டுதே!"

"காலைச் சுத்தின பாம்பு கடிக்காது விடாது அப்பா, ஜாக்கிரதை. உன் வாழ்க்கைத் தத்துவம் நிலைகுலைந்துவிடப் போகிறது"

"அதெல்லாம் ஒன்றும் நடந்துடாது தம்பீ; இந்த நெஞ்சு அந்த ஒரு விஷயத்திலே கல்லுன்னுக் கல்லுதான்"

அந்தக் கல்லையும் கரையவைக்கும் 'ஆஸிட்' மதுரம் என்பதை, பேதை அவன் உணரவில்லை போலும்.

ஆமாம்; மதுரம் 'ஆஸிட்' தான்! எப்பேற்பட்ட ஆஸிட்? அதற்கு அவள் இளமையும், அழகும், பருவமும் எடை காட்டின. அவளிடம் எல்லாமே கவர்ச்சியாக அமைந்திருப்பதாக எங்கள் ஊர்ப் பெண்டிர் இடைவிடாது பேசிக் கொண்டனர். பெண்ணைப் பெண் புகழ்வதென்றால் அது விசித்திரமல்லவா! அப்படிப்பட்ட விசித்திரப் பெண்ணைப் பார்க்கலாமென்று ஒருநாள் சாமியார் மடத்துப் பக்கம் போனேன்.

ஆண்டியும் அவளும் உட்கார்ந்து பூத்தொடுத்துக்கொண்டிருந்தனர். அவளைக் கண்டு சொன்னேன்; தவறு! தவறு!! தந்தப் பதுமை ஒன்று யந்திரம் இயக்க உயிரோடு வேலை செய்வது போன்று மயங்கினேன் மதுரத்தைக் கண்டதும். பர்மா மண்ணின் ஊட்டமோ என்னவோ, எங்கள் வட்டாரத்துப் பெண்களைப் போல 'சப்' பென்று இராமல், ஒவ்வோர் அங்கமும் பலகாலம் பரீட்சித்துத் தேர்ந்தெடுத்துப் பொருத்தப்பட்டது போல பளிச்சென்று துலங்கின அவளுடைய உடம்பில். நிறமோ சொல்லவேண்டியதில்லை. நம் இந்தியாவை விட்டு வெளியே போகப் போக எல்லோருக்கும்தான் ஓர் தனிச் சிகப்பு நிறம் வந்துவிடுகிறதே. அவள் உடுத்தியிருந்த உடைகள்தாம் என்ன — பண்டாரத்தியைப் போலவா இருந்தன!

"பாத்தீங்களா பர்மா நாகரிகத்தை; இதெல்லாம் இந்த ஊருக்கு ஒத்துக்காதம்மா; அப்புறம் உன்னைக் கட்டிக்கிட எனக்குத் தகுதியில்லைன்னு எல்லாப் பயகளும் ஒதுங்கிப் போயிடுவாங்கன்னு, மதுரம் கேக்குது இல்லீங்க தம்பீ. 'ஏன் நான் ஒன்னோடெ இருக்குது கஷ்டமா இருக்குதா மச்சான்'னு திரும்பிக் கேக்குது; என்னத்தைச் சொல்ல தம்பீ" என்றான் ஆண்டிப் பண்டாரம் என்னை உட்கார்த்தி வைத்து.

'பின்னெ என்னுங்க, நீங்க தான் சொல்லுங்களேன்; இத்தனை வருசமா பழகி வந்த பழக்கத்தை ஒரே நாளிலே விட்டுடுன்னு முடியுற காரியமா?''

ஆமாம்! அவள்—மதுரந்தான் பேசினுள். எங்கள் கிராமத்தில் இப்படி ஒரு பெண் முன்பின் தெரியாத ஒருவனிடம் பேசுவதென்பது மிகவும் ஆச்சரியமானது. ஆனால், அவள் தான் இருப்பது ஒரு குக்கிராமம் என்பதை உணர்ந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. கிளியைப் போல கொஞ்சிக் கொஞ்சிப் பேசினுள். மயிலைப் போல அழகு நடை நடந்தாள். சிட்டைப் போல அங்கு மிங்கும் பறந்தாள். அவள் முன்னே நிற்பவர்களை யெல்லாம் கனவு உலகத்தில் சஞ்சரிக்க வைத்து வேடிக்கை பார்த்தாள். இதையெல்லாம் பார்த்ததுமே நான் நிச்சயித்து விட்டேன்; 'சரி தான் ஆண்டிப் பண்டாரம் இனி பழைய ஆண்டிப் பண்டாரமாக நெடு நாட்கள் இருக்க முடியாது' என்று.

5

ஊரிலே இருக்கிற காலிகளெல்லாம் சாமியார் மடத்தை வளைய வளைய வந்தார்கள். மதுரத்தை நோக்கிப் பல்லை இளித்து அவள் சுடச் சுடக் கொடுத்த வசவுகளை வாங்கிக் கட்டிக் கொண்டார்கள். ஆண்டிப் பண்டாரத்துக்குத் தான் இதெல்லாம் ஆபத்தாகப் போயிற்று. கன்னிப் பெண்ணுச்சே! அடக்கமா இருக்கவும் தெரியலையே! எவனாவது துணிஞ்ச பயல் தப்புத் தண்டாவா நடந்துட்டா மோசமாகி விடுமே என்று அவளைச் சீக்கிரம் யார் கையிலாவது ஒப்படைத்து அனுப்பிவிட முயற்சிகள் செய்தான். ஆனால், அவன் தேடிக் கொண்டு வந்த வரன்களை யெல்லாம் மதுரம் தட்டிக் கழித்தாள். ''இதோ பாரு மச்சான்; ஒருத்தனுக்குப் பொண்டாட்டியா இருந்து, அவனுக்குக் கைகட்டிச் சேவகம் பண்ணுகிறதுக்கே, அது எனக்குப் பிடிக்காத காரியம். நான் பாட்டுக்கு இப்படியே இருந்திட்டுப் போறேன். ஒனக்கென்ன சங்கடம் இதிலே? சங்கடமாயிருந்தாச் சொல்லு; நான் எங்கேயாவது போயுடுறேன்'' என்ருள் அவள்.

''இப்படிச் சொல்லுதே; என்ன செய்யட்டும் அம்மா'' என்று என் மனைவியிடம் ஆலோசனை கேட்டான் பண்டாரம்.

''அட பாவி! அப்படியா சொல்லறது அந்தப் பொண். அப்பிடீன்னு அதுக்கு ஒரே ஒரு அர்த்தம்தான் இருக்கமுடியும்.''

''இதிலென்ன புதிதாக அர்த்தம் கண்டு விட்டாள் வேதம்?'' என்று நான் திகைத்தது போல ஆண்டியும் திகைத்து நின்ற போது, ''சரி; சரி; இனிமே தாமதிக்காதே; கலியாணத்துக்கு நாளைப் பாரு'' என்ருள்.

''யாருக்கு யாரைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் வேதம்?''

அவள் கல—கல வென நகைத்தாள். ''நீங்களும் இருக்கிறீர்களே ஆண்பிள்ளைகள் என்று, ஒரு பெண்ணின் மனத்தைப் புரிந்து கொள்ள முடியாத மூடங்களாக. மதுரத்துக்கு ஆண்டியைத் தான் கட்டிக் கொள்ள இஷ்டம்; இது தெரியலையா உங்களுக்கு.''

பெண் மனமே ஒரு புதிர் தான். அதற்கு விடையை அவர்கள்தான் கண்டு சொல்ல வேண்டும். வேதம் சொன்ன

தென்னவோ நூற்றுக்கு நூறு சரியாகத்தான் இருந்தது, ஆண்டிப்பண்டாரத்தின் மனதிலும் சலனம் ஏற்பட்டுத் தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால், அவன் அன்றைக்கே மதுரத்திடம் போய், 'இந்த மாதிரி தருமகர்த்தா வீட்டு மருமகப் பெண்ணு சொல்லுதே, நெசந்தானா?' என்று ஏன் கேட்கப் போகிறுன்.

மதுரம் அதைக் கேட்டு லேசாகச் சிரித்தாளாம். பதில் ஒன்றுமே சொல்லவில்லையாம்.

"சரி; அதுதான் சம்மதத்துக்கு அறிகுறி. பேசாமல் ஒரு நல்ல நாளைப் பார்த்துத் தாலியைப்போடு" என்ருள் வேதம்.

ஆண்டிப்பண்டாரம் என்னைப் பார்த்து விழித்தான். 'உனக்கு எதுவும் ஆட்சேபணை இல்லையே!' என்பது போலிருந்தது அந்தப் பார்வை. அவன் மனம் சலன மடைந்து விட்டதை உணர்ந்துவிட்ட பின்னர் நான் என்ன ஆட்சேபணையைத்தான் கூற முடியும்? "சரியப்பா, நடத்து" என்றேன்.

கலியாணம் நடந்தது.

6

அதன் பிறகு நடந்த காரியங்களெல்லாம் 'மள-மள' வென்று நடந்து விட்டன. ஆண்டிப்பண்டாரமே அடியோடு மாறிப் போனுன். அவன் இடையைத் தனது ஏகபோக உரிமையாக்கிக் கொண்டிருந்த காவி வஸ்திரம் முதலில் கப்பலேறிற்று. பிறகு அவனுடைய மொட்டைத் தலையில் மயிர் முளைத்துச் சிண்டாக மாறிற்று. அவனுடைய பேச்சுக்களிலே பக்திரசம் குறைந்து சிருங்கார ரசம் மிகுந்தது. ஆண்டி முழுக் குடும்பஸ்தனுகி விட்டான் ஆறே மாதங்களில்! எல்லையற்ற இன்ப மிதப்பில் ஒரு சுற்றுப் பருத்து விட்டான் என்ருல் வெறென்ன சொல்ல!

"பார்த்தீர்களா ஆண்டிப் பண்டாரம் எப்படிப் பருத்து விட்டானென்று" என்று கேட்டாள் வேதம் ஒருசமயம்.

"ஆமாம்! ஆமாம்; நீர்க்குமிழி பருத்துதான் உடையும்" என்றேன் நான் என் தத்துவப்படி.

"உங்களுக்கு எதிலுமே நம்பிக்கை கிடையாது. மதுரம் தங்கமான பெண். அவள் மனசு அதைவிடத் தங்கம். அவள் ஆண்டியிடம் கொண்டிருக்கும் அன்பை அறிந்தால் இப்படிப் பேசமாட்டீர்கள்"

வழக்கப்படி நான் வேதத்திடம் தர்க்கிக்கவில்லை, ஆனல் என்னுள் மாத்திரம் அந்தத் திடம் அப்படியே யிருந்தது. பெண் உள்ளம் ஒரு புற்று. அதை அதன்போக்கில் விட்டுக் கொண்டிருக்கு மட்டும், குஷியாக வளர்ந்து கொண்டே போகும். எப்பொழுதாவது தப்பித்தவறி இடித்து விட்டோமோ, அவ்வளவுதான்! அதனுள்ளேயிருந்து கோடானு கோடி நாக சர்ப்பங்கள் சீறிப்

பாயும். ஆண்டி, மதுரத்தின் போக்கில் போகிற மட்டும் ஆபத்தில்லைதான். அந்தப் போக்குக்குத் தடை செய்யும் சந்தர்ப்பம் மட்டும் நேர்ந்தால்? இப்படியே இவன் நிலைக்கு என்றும் போய்க் கொண்டிருக்க முடியுமா? என்றாவது ஒருநாள் அதைத் தடை செய்யத்தான் வேண்டிவரும்; அன்று —

ஆம்; அன்று....

அன்றுதான் ஆண்டி தன் லட்சியப் பாதையினின்று புரண்ட தன் பயனை அனுபவித்தான்!

7

எங்களூருக்குப் பக்கத்திலே ஒரு டவுன். டவுன் என்ற பட்டத்தை முழு உருவோடு தாங்க வேண்டுமென்றால், அந்த ஊருக்கு ஒரு சினிமாக் கொட்டகை இருந்தாக வேண்டுமல்லவா? எங்கள் பக்கத்து டவுனில் ஒன்றல்ல இரண்டு சினிமாக் கொட்டகைகள் இருந்தன. நவ நவமான படங்கள் எல்லாம் அங்கே வந்தன. எங்கள் கிராமத்தினர் படையெடுப்பும் ஒவ்வொரு படத்திற்கும் தடையின்றி இருந்தது. குடும்பஸ்தன் ஆனபிறகு ஆண்டி கூட அடிக்கடி சினிமாப் பார்க்கப் போனான் என்றால் வேறு என்ன சொல்லவேண்டும்?

அப்படிப்பட்ட ஒரு சினிமாப் பயணம்தான், அவர்களுடைய இல்லற வாழ்க்கைப் பயணத்துக்கிடையே நெடுஞ்சுவராக எழக் காரணமாயிற்று! அது ஏதோ ஒரு பிரபலப் படம்; பிரபல நடிகர்கள்; பிரபல டைரக்டர். வாரக்கணக்காக ஓடிற்று. ஜனங்களுடைய மகிழ்ச்சி எல்லை கடந்து போகவே, அப்படத்தின் டைரக்டரையும் முக்கிய நடிகர்களையும் வரவழைத்துக் கௌரவிக்க விரும்பினர். துர்ப்பாக்கிய வசத்தால், அந்த நாளன்று மதுரத்துடன் சினிமாவுக்குப் போய்ச் சேர்ந்தான் ஆண்டி. டைரக்டரின் கழுகுக் கண்களில் சிக்கினாள் மதுரம். அவ்வளவுதான், புதிய நட்சத்திரத்தைக் கண்டு பிடித்துவிட்டதாகக் குதி போட்டுக் கொண்டு மறுநாள் சாமியார் மடத்தை விசாரித்துக் கொண்டு வந்துவிட்டான் டைரக்டர்.

அப்புறமென்ன? மதுரம் சினிமாவில் சேரத் துடித்தாள்; ஆண்டி 'கூடாது' என்றான்; ''கிடடா கிழட்டுப் பயலே'' என்று டைரக்டருடன் புறப்பட்டுப் போய்விட்டாள்.

அன்றிரவு ஊரை விட்டுப் போனவன்தான் ஆண்டிப் பண்டாரமும். இன்று வரை அவனைப் பற்றிய செய்தியேயில்லை. அவன் இருந்தானோ, இறந்தானோ. அதை ஈசன் தான் அறிவார்.

8

காசிக்கு வந்த மறு நாள் கங்கையில் நீராடி, புண்ணிய பாவங்களைக் கழுவி விட்ட நிம்மதியோடு, நிறைந்த மனத்துடன் விசுவநாதரைத் தரிசித்து

விட்டு ஆலயத்தை விட்டிறங்கி வந்து கொண்டிருந்தோம் நானும் வேதமும்.

ஆலய வாயிலில் இருபுறமும் வரிசையாகப் பைராகிகள் உட்கார்ந்து பாட்டுப் பாடியும், கூக்குரலிட்டும் தருமம் கேட்டுக் கொண்டிருந்தனர். "உலகமே ஆண்டிகள் மயமாக மாறி இந்த ஆலயத்தைப் படையெடுத்து வந்திருக்கிறது போலிருக்கிறதே வேதம்" என்றேன் நடந்து கொண்டே.

வேதம் என் ஹாஸ்யத்தை ரசிக்காமல், "பாவம், ஆண்டி!" என்ருள்.

"காசிக்கு வந்த பிறகுமா அந்தக் கருமம் தொலையவில்லே." என்றேன் மீண்டும் என் ஹாஸ்யரஸத்தைப் புகுத்தி.

'தொலையவாவது' என்பது போலக் கணீரெனக் கிளம்பி வந்தது பட்டினத்தாரின் பாடல் ஒன்று, தனித்தமிழில் அந்தப் பைராகி வரிசையில் ஒரு மூலையிலிருந்து,

"வாழ்வாவது மாயம்—இந்த
மண்ணுவது திண்ணம்.
பாழ்போவது பிறவிப்பயன்,
பசி நோய் செய்த பயனே"

"இருங்கோ! இருங்கோ! ஆண்டிப்பண்டாரம் குரல்போல இல்லே?" என்ருள் வேதம்.

ஆமாம் அவனே தான்!

"ஆண்டி"

"தம்பீ நீங்களா?"

"இது யாருது? ஒரு குருடி உன் பக்கத்தில்?" என்று குறுக்கே விழுந்து கேட்டாள் வேதம்.

"தெரியலேயா, சினிமா ராணியம்மா; சினிமா ராணி. கண்ணேக்கெடுத்து, கற்பை கெடுத்து விரட்டியடிச்சுட்டாங்க. எங்கேயோ கண்டேன் மனசுகேக்கலே சரி வா; நான் வாங்கற பிச்சையிலே உனக்கும் பங்கு தாரேன்னு இழுத்துக்கிட்டு வந்தேன். காலேச் சுத்தின பாம்பு கடிக்காம விடாதுன்னு அன்னிக்குத் தம்பீ சொல்லிச்சு; ஆனல், இந்தப்பாம்பு என்னேக் கடிச்சப் பிறகும் காலே விடலே. என்ன செய்யுது சொல்லுங்க! வாழ்க்கை மாயம்-மாயமின்னு பாடிப்பாடிக் கடைசியிலே அது மாயமாகவே முடிஞ்சு போச்சு தம்பீ. இப்பொத்தான் இந்தக் கட்டை ஒரு நிலேக்கு வந்து நிக்குது" என்ருன் ஆண்டிப்பண்டாரம் ஓர் நெடு மூச்சுடன்.

ஆம்! அவன் வாழ்வின் மாய நிலேயின் எல்லேக்கு வந்து விட்டான். இனிமேல் ஒன்றே ஒன்றுதான் ஆண்டிப் பண்டாரத்தின் இந்த நிலேயான நிலேயைமாற்ற முடியும். அது? அதுவே வாழ்வின் எல்லேக் கோடாயிற்றே!

வேலே செய்யும் பொழுதெல்லாம் முணு முணுத்துக்கொண்டு திரிகிற எவனும், வாழ்க்கையில் வகையான வெற்றி பெற முடியாது. இவ்வாறு செய்வது, தன் பலக் குறைவை ஒப்புக்கொள்வதாகும்.

—அறிவுத்திறள்.

பெற்ற தாய்

வாழ்க்கையின் துயரங்களை எதிர்த்து நின்று போராடச் சக்தியின்றி ஆண்டியாக ஓடிவிடுகிறான் கணவன். இரண்டு குழந்தைகளுக்குத் தாயான மனைவியோ கணவன் பிரிந்த பின்னர் துணிகரமாக வாழ்க்கையை தன்னந்தனியாக எதிர்த்துநின்றுவெற்றி கண்டு, தாய்மையின் சக்தியை நிதர்சனப்படுத்துகிறாள்; ஆனால் வாழ்வில் அவளுக்கு நிம்மதி கிட்டவில்லை. ஒற்றுமையற்ற பிள்ளைகளின் போராட்டம், சந்தர்ப்ப வசத்தால் தன்னை அவர்கள் செய்யும் உதாசீனம் ஆகிய இவ்வளவு வேதனைகளையும் சகித்துக்கொண்டு பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக சிறை வாழ்வை மேற் கொள்கிறாள் தாய். இது ''பெற்ற தாய்'' படத்தின் கதையம்சம்,



கதையில் புதுமையில்லை. இதற்குமுன் வெளியான சம்சாரம், மூன்று பிள்ளைகள் போன்றபடங்களின் நல்ல அம்சங்களைத் திரட்டி மெருகு தந்து கதையை அமைத்திருக்கின்றனர்.

ஆனால் படம் தயாரிக்கப்பட்டிருக்கும் விதம் நன்றாக இருக்கிறது. சாதாரண காட்சியமைப்புகளை வைத்துக் கொண்டு, மக்கள் மனதைத் தொடும் வண்ணம் சம்பவங்களை அடுக்கடுக்காக அமைத்து, திறமையுடன் தயாரித்திருக்கின்றனர். ஆரம்பத்தில் ஒலிப்பதிவு சரியாக இல்லை. பேசும் வார்த்தைகள் புரிந்து கொள்ள இயலாதபடி தெளிவற்று ஒலித்தாலும் போகப் போக இந்த குறை நீங்கிவிடுகிறது. காமிரா நன்றாகக் கையாளப்பட்டிருக்கிறது. பல இடங்களில் நாம் பிரமிக்கத்தக்க அளவில் காமிரா சுழன்று வருகிறது.

நடிகர்களின் நடிப்பு படத்தின் வெற்றிக்கு ஒரு முக்கிய காரணமாகும் என்று கூறலாம்; மிகச் சாதாரண காட்சிகளில் வரும் நடிகர்கள் கூட சுறு சுறுப்பாக இயற்கையாக நடிக்க முயற்சிக்கின்றனர். பெற்ற தாயின் இதயத்தை, நடவடிக்கைகளை அப்படியே

நம் கண்முன் நிறுத்துகிருர் வரலட்சுமி. பிள்ளைகளிடையே தகருறு ஏற்படும் போதும், தன் மீது அபாண்டப் பழிகள் சுமத்தப்படும்பொழுதும் அமைதியுடன் நிலைமையை சமாளிக்கும் கட்டங்கள் மக்களின் கண்களில் கண்ணீரை வரவழைத்து விடுகின்றன. இளைய பிள்ளை பெரியவனை பிறகும், அவன் எல்லை மீறிப்போகும் சந்தர்ப்பத்தில் கன்னத்திலறைந்து அவனுக்கு புத்தி கற்பிக்கும் காட்சி நாம் சினிமா பார்க்கிரோம் என்பதையே மறக்க வைக்கும் அளவுக்கு இயற்கையாக இருக்கிறது.

தமையனாக நடிக்கும் நாகேஸ்வர ராவ், தான் ஒரு அருமையான குணசித்திர நடிகர் என்பதை இப்படத்தின் மூலம் உறுதிப்படுத்துகிருர். தம்பியின் புகழைக் கண்டு மனப்பூரிப்பு அடையும் கட்டங்கள், தம்பி படிக்காமல் ஊர் சுற்றுகிருன் என்று கேள்விப்பட்டு அவனை இழுத்து வந்து தண்டித்துவிட்டு, பிறகு அதற்காகப் பச்சாத்தாபப்படுவது, பெற்ற தாயாலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட தம்பியை மார்போடணைத்து திரும்ப வீட்டுக்கு அழைத்து வருவது ஆகிய நிகழ்ச்சிகளில் சகோதர வாஞ்சையை வெகு அழகாக நித... படுத்துகிருர் நாகேஸ்...

நம்பியாரின் நடிப்பு ஆரம்பக் கட்டங்களில் அளவுக்கு மீறிய சிறு பிள்ளைத்தனமாக இருந்தாலும் போகப் போக மெருகேறி இறுதியில் உச்ச நிலையை அடைகிறது. சிறு குறைகள் இருந்தாலும் பொதுவாக எல்லா நடிகர்களும் நன்ருக நடிக்கின்றனர்.

"பெற்ற தாய்" மக்களின் பாராட்டுதல்களைப் பெற்று நீண்ட நாள் நடைபெறக்கூடிய படம் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனுல் படத்தின் இறுதியில் மகன் செய்த குற்றத்தைத் தான் ஏற்றுக் கொண்டு சிறைத் தண்டனையடையும் தாயை சிறையிலேயே விட்டு விட்டு அவளிடம் ஆசி பெற்று இரு பிள்ளைகளும் வீடு திரும்புகின்றனர் என்று, கதையை முடித்திருப்பது ஒரு சகிக்க இய... முடிவாகும். இந்தப் ... களின் அதிருப்தி... கிறது. தன... மீட்டு அ...

அமெரிக்க வாழ்க்கை...!

குடும்பம்

தாய், தந்தை, மாமன், மாமி ஆகியோர் அடங்கிய கூட்டுக் குடும்பங்கள் அமெரிக்காவில் பெரும்பாலும் கிடையாது. குடும்பத்தைப் பெருக்கிக் கொள்ளும் விருப்பமும் இருப்பதில்லை. ஆகவே புருஷனும் மனைவியும் மட்டும் நடத்தும் தனிக் குடித்தனங்களே அங்கு அதிகம். குழந்தைகள் அதிகமாகிவிடாமல் மிக ஜாக்கிரதையாக பார்த்துக் கொண்டு விடுகின்றனர்.

சமையல்

புகை விட்டு கண்களைக் கெடுக்கும் அடுப்பு அங்கே மருந்துக்கும் இல்லை. எல்லாம் மின்சார மயம். அரை மணி நேரத்தில் கொஞ்சமும் சிரமமின்றி அறு சுவை உணவு தயாராகிவிடும். சமைக்கும் பொருட்களையும் சுத்தப்படுத்தி நறுக்கி சமயலுக்குத் தயாராகவே கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. கிடைப்பதைக் கொண்டு வந்து அப்படியே அடுப்பில் ஏற்றிவிட வேண்டியதுதான்.

வீட்டு வேலைகள்

வேலைக்காரிக்கோ, வேலைக் ...னுக்கோ இடமில்லை. துணி ...வெளுப்பது முதல் பாத் ...ம்புவது வரை மின் ...ம் செய்துவிடலாம். பிடிக்கவில்லையானால் உடனே சட்ட ரீதியாக கத்தரித்துக் கொண்டுவிடலாம். ஒரு பெண்ணும், ஆணும் எத்தனை முறை வேண்டுமானாலும் மணக்கலாம். எவ்வளவு முறை வேண்டுமானாலும் ரத்து செய்துக் கொண்டுவிடலாம்.

செல்வ நிலை

செல்வத்தின் பெரும் பகுதி பெண்கள் கையில் இருக்கிறது. அதிலும் விதவைகளுக்குத்தான் இந்தப் பாக்கியம் அதிகம். "அவள் ஒரு விதவை ஆகவே அவள் அதிர்ஷ்ட சாலி" என்று அங்கே விதவைகளைப் பார்த்து அடிக்கடி பேசுவார்கள்.

தொழில்

ஆண்கள் செய்யும் வேலைகளையெல்லாம் பெண்களும் செய்துப் பார்த்துவிடுகிறார்கள். சர்க்கார் உத்தியோகம் முதல் சலூன் கடை வரை அங்கே பெண்கள் நிறைந்திருக்கிறார்கள்.

அலங்காரம்

அமெரிக்கப் பெண்களின் உடைகள் மணிக்கு மணி மாறும். ஒரு தடவை பழக்கத்திலிருந்த அலங்காரப் பொருள் அடுத்த தடவை தலை காட்டாமலே ஓடிவிடும். இந்த பெண்களின் உடையலங்காரப் பைத்தியமே அமெரிக்க அரசாங்க பொருளாதார நிலையின் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறதாம்.

—"உமா"

Estd 1939

Regd. No. 122117.

BREADS, BUNS, ICING ASSORTED AND FANCY CAKES

Our Special Varieties :

GLUCOSE BUTTER, SALT, SWEET, BABY BARLEY & TORCH

SPECIAL WEDDING CAKES

and Almond Paste Ornaments Etc. Etc.,

RADHA BISCUIT FACTORY

Proprietor : **T. P. G. SWAMY**

161, MINT STREET, G. T. MADRAS.



Damodhar Envelope Factory

(State-Aided)

PIONEER MANUFACTURERS OF:

ENVELOPES, WRITING PADS, AEROGRAPHED EMBOSSED & DIE-STAMPED GREETING CARDS OFFICE FILES, LUGGAGE LABELS, PRICE-TICKETS, ACCOUNT BOOKS, NOTE BOOKS, Etc.

"BENHUR"

REGISTERED TRADE MARK

ALSO PRINTERS AND BINDERS

...ORY :
...SE"
...M

OFFICE:
26, Thambu Chetty Street,
MADRAS-1.
Telephone: 3403

Estd : 1890 Phone : 3202

M. C. Appaswamy Chetty & Co.,

TRI-COLOUR, HALF-TONE & LINE

BLOCK MAKERS

14, JONES ST., MANNADY, MADRAS-1.

All the blocks used in "UMA" are made by us.

Grams : "Attapotty" P. B. No. 1377 Phone : 2200

UMA PRINTERS

SPECIALISTS IN

CARTONS & CARDBOARD BOXES

OF ALL DESCRIPTIONS.

FINE ART COLOUR AND JOB WORKS

ARE UNDERTAKEN IN

HINDI, ENGLISH, TAMIL & TELGU.

"Uma House" 4/32, Thathamuthiappan

Phone : 3849 P. B. No. 1546 Grams : 'Printype'

THE MADRAS TYPE FOUNDRY

LETTER FOUNDERS AND PRINTERS SUPPLIERS

38, JONES STREET, MADRAS-1.

We proudly assert that the types used in the magazine "UMA" are supplied by us.

தந்தி. அட்டைப்பெட்டி தபால் பெட்டி நெ. 1377 போன். 2200

உமா பிரிண்டர்ஸ்

4/32, தாதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1.

எல்லாவகை

அட்டை பெட்டிகள்

தயாரிப்பதில் தேர்ச்சிப் பெற்றவர்கள்.

இந்தி, இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு.

ஆகிய மொழிகளில் சில்லரை வேலைகளும் எல்லாவித

... கலர் வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

... G. Umapathy, M. C. at the Uma Printers,
... Madras-1 Phone: 2200.